
கல்கி

KALKI 20·11·83 ரு-1-20



Colour-Chem gives the spectrum an eighth colour.



When it comes to pigments and dyes, all manufacturers offer permutations and combinations of the seven colours of the spectrum.

So, how is Colour-Chem any different? Is it just our ability to offer a complete range of colours for every product line? Or is it the technical know-how and the expertise of two international giants — Bayer AG and Hoechst AG — that back our products?

Perhaps, it is our total commitment to rigid quality control that keeps us a shade ahead of the rest. Highly trained technicians and skilled scientists ensure that every batch we produce is rigorously tested before it comes to you. To fully satisfy the demanding quality standards you require.

Or, yet again, our expert technical service. Whether it is advice on formulations and colour-matching, or a technical problem requiring an on-the-spot solution — our team of experts is always at hand to offer you speedy and reliable service. Everytime.

Now, when you look at us, don't you see an eighth colour to our personality?

Colour-Chem

Colour is the business of Colour-Chem.

HTB-CCL-6052R



சென்னைப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழி தொடர்பு கல்விக் கட்டிடம் கட்டுவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட 2000 டன் (40,000 மூட்டைகள்) சிமெண்ட் அந்தக் கட்டிடத்துக்கு உபயோகப்படுத்தப் படாமல் ''வேறு எங்கேயோ'' பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டிடத்தின் காண்டிராக்டரும் பல்கலைக் கழகப் பதிவாளரும் சேர்ந்து சிமெண்டை விற்றுக் கொள்ளை லாபம் சம்பாதித்திருக்கின்றனர்.

-துரைமுருகன்

சிரிப்பாய்ச் சிரிக்கும் சிமெண்ட் விவகாரம்

இறக்குமதி செய்யப்பட்ட அந்த சிமெண்ட் பாலவாக்கத்தில் பல்கலைக் கழகத்தின் மற்றொரு கட்டிட வேலைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்தக் கட்டிடம் கட்ட கண்டிராக்டர் வேறு வேலைக்கு வைத்திருந்த சிமெண்டைப் பயன்படுத்தியதால், பல்கலைக் கழகத்திற்கான சிமெண்ட் வந்ததும் அதை எடுத்துக்கொண்டார். பயன்படுத்தியது போக மீதியுள்ள மூட்டைகள் காந்திநகரிலும் ஏ. வி. கல்லூரி வளாகத்திலும் வைக்கப்பட்டிருக்கின்றன. முறைகேடுகள் ஏதும் நடக்கவில்லை.

-அமைச்சர் அரங்கநாயகம்



வீட்டில் விச்ராந்தியாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு, பல்கலைக் கழக ஊழலைப் பற்றி மற்றும் சில ஆதாரங்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்த துரைமுருகனை நமது நிருபர் ப்ரியன் சந்தித்தபோது துரை முருகன் கூறியது:

- முதல் தவணையாக 1000 டன் சிமெண்ட் வந்தது இந்த வருடம் மார்ச் 17ம் தேதி. அந்தச் சமயத்தில் பாலவாக்கம் கட்டிடத்தின் 80 சதவித வேலைகள் முடிந்துவிட்டன. அடுத்த தவணையாக வந்த 1000 டன் என்ன ஆயிற்று?
- அமைச்சரின் வாதப்படி, காண்ட்ராக்டர் தான் பயன்படுத்திய சிமெண்டிற்குப் பதிலாக இறக்குமதி செய்த சிமெண்டை எடுத்துக் கொண்டார் என்றால், அதற்கான அனுமதி சிண்டிகேட் கொடுத்ததா? இல்லையே. இறக்குமதி செய்த சிமெண்டைத் திசை திருப்பியதற்காக சிமெண்ட் கண்ட்ரோலரிடமிருந்து அனுமதி பெறப்பட்டதா?
- இறக்குமதி செய்யப்படும் ஒரு மூட்டை சிமெண்டின் கண்ட்ரோல் விலை 39 ரூபாய். வெளி மார்க்கெட்டில் 100 முதல் 120 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இந்தக் கணக்கில் பார்க்கும்போது பல்கலைக் கழகப் பதிவாளர் மற்றும் கட்டிடக் குழு அடித்த கொள்ளை பல லட்சங்கள்.
- அக்டோபர் 24ம் தேதி நான் சிண்டிகேட்டில் பேசும்போது இதை விசாரிப்பதற்காகக் கமிட்டி போடச் சொன்னேன். ஒரு வாரம் போகாமல் இருந்து விட்டு 30ம் தேதி பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துவிட்ட பிறகு ஒரு கமிட்டி போடுகிறார்கள். நான் யார் யார் செய்தார்கள் என்று சந்தேகப்படுகிறேனோ அந்த நபர்கள் கமிட்டியில் இருக்கிறார்கள். அப்புறம் உண்மை எப்படி வெளிவரும்?
- சிண்டிகேட்டின் அனுமதியைப் பெறாமல் எப்படிக் கமிட்டியை அமைக்கலாம் என்று நான் கேட்டவுடன், கமிட்டியைக் கலைத்து விட்டோம் என்று இப்போது எனக்குத் தெரியப்படுத்தி யிருக்கிறார்கள்.
- புருஷோத்தமன் என்பவர் மத்திய, மாநில அரசின் அனுமதி பெற்ற கட்டிடக் காண்டிராக்டர் அல்ல. அவர் ஒரு மின்சார காண்ட்ராக்டர். அவருக்கு எப்படி கட்டிட ஒப்பந்தம் வழங்கப்பட்டது?
- இதே காண்ட்ராக்டர் கட்டிய மற்றொரு கட்டிடம் (Students Amenities Centre) உபயோகப்படுத்தப்படுவதற்கு முன்பே வெடிப்பு விட்டுப் போனது.
- பல்கலைக் கழகப் பதிவாளரின் மேல் பல குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. ஆனால் நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது ஏன்?
- புருஷோத்தமன் என்கிற இந்தக் காண்ட்ராக்டர் பதிவாளருக்கு அவரது பிறந்த நாளின்போது ரூ. 8000 மதிப்புள்ள தங்கத்தைப் பரிசாகக் கொடுத்திருக்கிறார். இது முறைகேடான செயல்! பதிவாளரின் மேல் நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை?
- கடைசியாக எனக்கு வந்த தகவலின்படி இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்டின் பெரும் பகுதி கோவை மாவட்டம், மதுக்கரையில் ஆளும் கட்சிப் பிரமுகர் கட்டும் கட்டிட வேலைக்காக அனுப்பப் பட்டிருக்கிறது.
- இதை விசாரிக்க மத்திய புலனாய்வுத் துறையைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இங்கே ஒரு நாடகம் நடக்கிறது

ஜி. நாராயணன்



காலடியில் புழுதி அப்பிற்று... கவரோரமாகக் கொஞ்சம் சேவல்... நிறைய வெத்திலைக் காம்பு... காய்ந்த பூமாலைகள் ஏழெட்டு... வாழைப் பழத் தோலி... இலைக் கிழிசல்... தரையில் கொட்டிப் பொருக்கான சந்தனம்,... சுவரில், கதவு இடுக்கில், விரல் விரலாக ரோஸ் கலரில் சுண்ணாம்பு...

இந்தப் புழுதியையும் குப்பையையும் பார்த்தபடி சத்திரத்தை ஒரு முறை வளைய வந்தார் நாதமுனி.

''...முந்தாநாள் ஒரு முகூர்த்தம்...காலி பண்ண, நேத்திக்கு ரொம்ப லேட் பண்ணிட்டா... அதான் எல்லாம் அட்டெறிஞ்சும் விட்டெறிஞ்சும் கிடக்கு ... பத்தே நிமிஷம்... க்ளீன் ஆயிடும்....''

அந்த அம்மாள் பதில் ஏதும் சொல்லவில்லை. மூச்சு இறைக்கச் சற்று நின்றாள். பிறகு, கைகளை ஊன்றியபடி பெஞ்சில் உட்கார, கைக்குழந்தையுடன் இருந்த நடு வயதுப் பெண்கள்.... அப்புறம் பையன்கள்... இன்னும் ஏழெட்டு ஆண்கள்... உட்கார... நிற்க....

''அம்பி... சாமான்லே ஒரு கண் வைச்சுக்கோ... விஜயா கல்யாணத்தின்போது நடந்தது ஞாபகம் இருக்கா?... புடவை—நகை எல்லாம் இருந்த பெட்டி ரயில்லே திருட்டுப் போயி... கல்யாணம் நடக்குமான்னு ஆயிடுத்து...''

''நீ கவலைப்படாதே அம்மா.. டெம்போ ஒரு நடைதானே வந்திருக்கு... அடுத்த நடைதான் எல்லாம் வரப் போறது... நான் பார்த்துக்கறேன்....''

இப்பொழுது பெண்களிடம் அந்த அம்மாள் திரும்பினாள்.

''இந்தா பாருங்கோடி...பெருக்கி துடைச்சானதும், நீங்க ரெண்டு பேரும் 'மளமள' வென்று கோலம் போட ஆரம்பிச்சுடுங்கோ. சம்பந்தி ஒரு பறக்காவெட்டி... நாலு மணின்னு மூணு மணிக்கே வந்து நின்னுடுவார்....''

நாதமுனி இந்த வேடிக்கையைச் சற்று நின்று பார்த்தார். ஒவ்வொரு கல்யாணத்திற்கும் இந்த மாதிரி விரட்ட, எடுத்துச் செய்ய யாராவது அமைந்து விடுகிறார்கள்.

''எல்லாம் அழகா நடக்கிறது. இருந்தபடி விழும்போல... சமயத்திலே அந்தப் பெரியப்பா மூக்கை நுழைக்காம இருக்கணும்... பெண் வீட்டுக்காரான்னு எப்பவும் கட்டுப்பட்டுண்டே இருக்கணுமே... பையனோட பெரியப்பா ஒருத்தர் இருக்கார். வயசானவரா. அவரைப் பற்றிக் கவலைப்படறேன். இடவி வேலை செய்யல்லையாம்.ஒரு மாசத்துக்கு மேலே ஆச்சு. ஆஸ்பத்திரியிலே சேர்ந்து



வர வர கணம் நீளவு போறதும் வரதுமா இருக்கு. நடுப்பற இர்தக் கல்யாணம் வேற... எல்லாம் நல்லபடியா நடக்கணு மேன்னு வயத்திலே நெருட்டைக் கட்டிண்டு இருக்கேன்... நிச்சயம் பண்ணின கல்யாணம் நின்னதுன்னு இதுவரை எங்க குடும்பத்திலே கிடையாது. இருந்தும், ரெண்டு நாள் பொழுது நல்ல பொழுதா போகணு மேன்னு பயமா இருக்கு...''

''பயமே வேண்டாம்.'' என்றார் நாதமுனி. ''முப்பத்தஞ்சு வருஷமா இந்தச் சத்திரத்திலே இருக்கேன். உங்க குடும்பம் மாதிரியே இந்தச் சத்திரத்துக்கும் ஒரு ராசி இருக்கு. ஏற்பாடு பண்ணின எந்தக் கல்யாணமும் அழகா முடிஞ்சு, பொண்ணும் மாப்பிள்ளையும் ஜோடியாக் கிளம்பியிருக்காளே தவிர, ஒரு தடங்கல் வந்தது. நின்னுதுன்னு பேச்சுக் கிடையாது...''

''சொல்றேள்... உங்க வாக்குப் பலிக்கட்டும்.''

அடுத்த அரை மணி ஒரு மணிக்குள் மந்திரக் கோலைச் சுழற்றியது போல் அந்த இடமே மாறிவிட்டது. ஏகாந்தம் போய்க் கலகலப்பு... சிரிப்பு... 'கிடுகிடு' வென்று ஒரு கல்யாணக் களை வந்து விட்டது. தாப்பியும் கேசரியும் பட்டுப் புடவைகளும், மருதாணியும் குழந்தைகளின் ஓட்டம்.. விளையாட்டு... அழுகை...

இந்த அறையில் ஒரு வசதி இருக்கிறது என்று நாதமுனி நினைத்தார். ஜன்னலைத் திறந்து வைத்தால் எதிரே கூடம் முழுக்கத் தெரியும்.... இப்படித் திறந்த ஜன்னல் வழியே எத்தனையோ ஊஞ்சல், நலங்கு, என்று பார்த்து... கேட்டு....

கடைசி அறையில் கல்யாணப் பெண் தெரிந்தாள்.... தலை நிறைய பூ இருந்தது. மகிழ்ச்சி இருந்தது. பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்தால் எழுந்து ஆள் ஆளாக நமஸ்காரம் பண்ணிற்று... மாப்பிள்ளை அழைக்க எல்லாரும் கோவிலுக்குப் போன போது, அலங்காரம் செய்து கொண்டு, காரை எதிர்பார்த்து வாசலில் வந்து நின்றது...

சட்டென்று ஏதோ இரைச்சல் கேட்டது. நாதமுனி கதவைத் திறந்தார். கொஞ்சம் உயரமாக, பருமனாக, ஒருவர் இரைந்து கொண்டிருந்தார்.

எந்தச் சண்டையும் சாப்பாட்டில்தான் ஆரம்பமாகிறது என்று தோன்றிற்று..... பிள்ளையின் ஒன்று விட்ட மாமா, சித்தப்பா என்று சம்பந்தமில்லாத ஒருவர், எங்கோ, யாரிடமோ காட்ட வேண்டிய கோபத்தை ஒரு காப்பியில், டிபனில் காட்டி...



அருள்வாக்கு

வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்ற வார்த்தை இப்போது ரொம்பவும் அடிபடுகிறது. சர்க்கார் திட்டங்கள் இதற்குத்தான் என்கிறார்கள். எல்லோருக்கும் வயறு நிரம்பச் சாப்பாடு. மானத்தையும் குளிர் வெய்யிலையும் காப்பாற்றப் போதுமான வஸ்திரம், வசிப்பதற்கு ஒரு சின்ன ஜாகை இருக்க வேண்டியதுதான். இதற்கே சர்க்கார் திட்டம் போட வேண்டும். இதற்கு அதிகமாகப் பொருள்களைத் தேடிப் போவதால் வாழ்க்கைத் தரம் உயர்ந்து விடாது. உண்மையில் 'வாழ்க்கைத் தரம்' என்பது வெளி வஸ்துக்களின் பெருக்கத்தில் இல்லை. தரமான வாழ்க்கை மன நிறைவோடு இருப்பதுதான். தேவைகளை அதிகமாக்கிக் கொண்டு அவற்றுக்காக ஆலாய்ப் பறப்பதால் நிறைவு ஒருவருக்கும் கிடைக்காது. இதைப் பிரத்யட்சத்தில் பார்க்கிறோம். நாம் மேல் நாட்டுக்காரர்கள் மாதிரி போக போக்கியங்களுக்குப் பறக்கிறோம். போகத்தின் உச்சிக்குப் போன மேல் நாட்டுக்காரர்களோ அதில் நிறைவே இல்லை என்பதால் நம்முடைய யோகத்துக்கு, வேதாந்தத்துக்கு, பக்திக்குக் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருக்கின்றனர். இதைப் பார்த்துக் கூட நாம் புத்தி பெறவில்லை யென்றால் அதுதான் துரதிர்ஷ்டம்.

ஒருத்தன் பீரோ நிறையத் துணி வைத்திருப்பதாலோ கண்ட வேளைகளில் ஹோட்டலுக்குப் போய்க் கண்டதைத் தின்பதாலோ வீட்டை ஏர் கண்டிஷன் செய்து கொண்டு விட்டதாலோ அவனுடைய வாழ்க்கை தரமாகி விடாது. மனம் நிறைந்திருந்தால் அதுவே வாழ்க்கைத் தர உயர்வாகும்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்

''அம்பி, சம்பந்திப்பேரை நன்னாக் கவனிக்கச் சொல்லுன்னு முட்டிண்டேனே...ம்.. பார்த்தியா... சியாமளா கல்யாணத்தின் போது இப்படித்தான் ஆயிடுத்து. மாப்பிள்ளை அழைப்பு நடந்தும், கல்யாணம் நடக்கல்லே... பெரிய சண்டையாகப் போய், ஏதாவது அவப் பெயர் வரப்போறது...''

அந்த அம்மாள் ஓர் ஓரமாக, கைகளைப் பிசைந்தபடி நின்று இந்தக் குடியலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கண் கலங்க ஆரம்பித்தது... முகத்தில் கவலை... கலவரம்.

''பயப்பட வேண்டாம்' என்று அவளிடம் சொல்ல வேண்டும் போல் இவருக்குத் தோன்றிற்று. எத்தனை சொன்னாலும் இந்த அம்மாள் கவலைப்படுவதை நிறுத்த மாட்டாள். 'இந்தச் சத்திரத்தின் ராசி' இப்பொழுது தெரியாது. நாளைக் காலையில், தாலி கட்டி முடிந்ததும் சொல்ல வேண்டும்....

சற்றுக் கழித்துப் பார்த்தபோது அத்திம்பேர் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு, யாரிடமோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

இதுதான் நடைமுறை...! கடைசியில் கட்டுச்சாத மூட்டை வைக்கும்போது எல்லா இறுக்கமும் குறைந்து விடும்... விறைப்பு எல்லாம் எங்கேயோ போய்விடும்.

இரவில் ஒரு தடவை விழித்துக் கொண்டபோது வியர்த்திருந்தது. கொஞ்சம் குளிர்ந்து. இலேசாக நெஞ்சு வலித்தது. தலையிலும் வலி இருந்தது. எழுந்தவர் பானையிலிருந்து தண்ணீரைச் சரித்துக் குடித்தார்.

''...இதற்குத்தான் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கணும்னு சொல்றேன். ஒரு தலையைக் காலை வலிச்சா...''

சொன்ன அம்மா போய் விட்டாள்... கடைசிவரை அவள் அதைப் பார்க்கவேயில்லை. இந்த இரண்டு நூறு ரூபாய் சம்பளத்தில் ரெண்டு பேர் எப்படிக் காலம் தள்ள முடியும்?... ம்... முடியாது... வேண்டாம். இத்தனை மாப்பிள்ளை அழைப்புக்கள் முகூர்த்தங்கள்... தினம் தினம் பார்க்கிறாரே தவிர, இவர் மாப்பிள்ளையாக இருந்து ஒரு கல்யாணம் நடக்கவில்லை!

சத்திரத்து இரைச்சலை விட்டு வெளியில் காற்றாட நடக்கலாம் போல் இருந்தது. கொஞ்ச நேரம் நடந்தார். நடக்க நடக்க, நெஞ்சில் வலி அதிகரிப்பது போல் மூச்சுத் திணறுகிற மாதிரி...

திரும்பவும் வந்தபோது எல்லா அமளியும் ஓய்ந்து விட்டது. ஜமுக்காளம், விரிப்பு என்று கிடைத்ததை யெல்லாம் விரித்து, நீண்டும் சுருண்டும் உடல்கள்... குறட்டைச் சத்தம்... மூலையாக ஒரு பெட்ரோமாக்ஸ் 'புஸ்' என்று எரிய...

ஏழெட்டுப் பேர் சீட்டு ஆடிக் கொண்டிருந்தார்கள்.

காலையில் எழுந்திருக்க முடியவில்லை.... மார் மேல் யாரோ உட்கார்ந்திருக்கிற

மாதிரி கனமாக இருந்தது. தொண்டை காய்ந்து... தண்ணீருக்கு அலைகிற மாதிரி. உடல் 'ஹாஹா' என்று பறந்தது. இறைத்தது....

நாதஸ்வர ஓசை எங்கேயோ தூரத்து இசையாகக் கேட்டது.

தடுமாறி எழுந்தார். உடல் அலை பாய்ந்தது. கதவு வரை போய், நிற்க முடியாமல் அப்படியே அதன் மேல் சாய்ந்தார். கதவை எப்படியாவது திறந்து விட்டால் போதும். யாராவது உதவிக்கு வந்து விடுவார்கள்... மூச்சு வாங்க அப்படியே கொஞ்சம் நின்றார். தாழ்ப்பாளில் கையை வைக்க....

''...பாலாலே கால் அலம்பி....''

தொடர்ந்து நாயனமும் அதையே திருப்பி வாசிக்க....

...ஊஞ்சல்.... ஓ... இங்கே ஒரு கல்யாணம் நடக்கிறது....!

வேண்டாம்... என்ன ஆனாலும் சரி... தாலி கட்டி முடிகிறவரை வெளியில் போகக் கூடாது....

தாழ்ப்பாளிலிருந்து கையை எடுத்தார். அப்படியே நகர்ந்து ஜன்னலைப் பிடித்தபடி நின்றார். பெருமூச்சாக வாங்க ஆரம்பித்தது. பிடியை விட்டால் கீழே விழுந்து விடுவோம் என்று புரிந்தது. வெளியே எதுவும் மங்கலாகத் தெரிந்தும், தெரியாமலும்....

மாலை மாற்றின கூட்டம் மேடைக்கு வந்து விட்டது. சந்தோஷமும் இரைச்சலும் கேட்டன.

வேதனை தாங்காமல் மார்பைப் பிசைந்து கொண்டார். ஒரு குரல் கொடுத்தால் போதும். யாராவது கவனித்து விடுவார்கள்.... கொடு... வேண்டாம்... இவ்வளவு குதூகலமும் ஒரு நொடியில் குலைந்து விடும்.

நினைவு எங்கெல்லாமோ அலைந்தது. தட்டில் சாதத்தை வைத்துக் கொண்டு 'சாப்பிட வா' என்று குழந்தை நாதமுனியை அம்மா கூப்பிடுகிறாள்.... 'இதற்குத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு சொல்றேன். வயசான காலத்தில் ஒரு தலையை...'

'...இந்தச்சத்திரத்துக்கு ஒரு ராசி இருக்கு. நீங்க கவலைப்படாதீங்க....' தாலி கட்டி முடிந்ததும் அந்த அம்மாளிடம் சொல்ல வேண்டும்....

சட்டென்று கண்ணைத் திறந்தார். எதிரே பார்வதி பரமேஸ்வரன் மாதிரி இருந்தது. இது கௌரி கல்யாணமா...? சீதா கல்யாணமா...? மாலையும் கழுத்துமாக இந்த ஜோடி யார்...?

''...கெட்டி மேளம்... கெட்டி மேளம்''

ஏழெட்டு ஆள்காட்டி விரல்கள் உயர்ந்து வேகமாக அசைய....

''....பட...பட...பட....''

தவிலும் நாயனமும் சேர்ந்து எழுப்பிய ஒலியில், நாதமுனி சரிந்த ஓசை யாருக்கும் கேட்காமல் போயிற்று.

பயன் தந்த பழமொழி

'உங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சியை அதிகரிக்கவோ, ஏமாற்றத்தைத் தணிக்கவோ, வெற்றிக்கு வழிகாட்டவோ, கோபத்தை அடக்கவோ ஒரு பழமொழி பயன்பட்டிருக்கலாம். சுவையான அந்த நிகழ்ச்சியையும் பழமொழியையும் கீழே எழுதி இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு உண்டு. முடிவு தேதி: 5–12–83. உறையின் மேல் ''பயன் தந்த பழமொழி'' என்று குறிப்பிடவும்.

என் பெயர் ______________________

விலாசம் ______________________

____

____

இதுவரை கண்டிராத வசதிகள் குறைந்த விலை! சுலப மாதத் தவணைகள்!!

அரசு (DTP) அங்கீகாரம் பெற்ற முற்றிலும் அபிவிருத்தி செய்யப்பட்ட

வீட்டு மனைகள் கோகுலபுரம்

சென்னைப் புறநகர்ப் பகுதியில் மறைமலை நகரை ஒட்டி!

தேவைகள் பெருகிடும்பொழுது பொருள்களின் உற்பத்தியும் பெருகுகிறது. ஆனால் உலகில் ஒரே முறை படைக்கப்படுவது நிலம்தான். அதன் விலை மாதா மாதம், வருடா வருடம் பல மடங்குகள் அதிகரிப்பதில் என்ன அதிசயம். உங்கள் சேமிப்பை முதலீடு செய்யப் பல வழிகள் உண்டு. உண்மை. ஆனால் பண வீக்கம் பெருகிடும் இந்நாளில் அதைவிட வேகமாக வளருவது நிலத்தின் விலைதான்.

மனை விலைகள் கட்டுக்கடங்காமல் உயருகின்றன. வீட்டு வாடகையோ உங்கள் அனுமதியின்றி உயர்த்தப்படுவதால், குறுகிவரும் குடும்பச் செலவுக் கான பணத்தில் பெரும் பகுதியை விழுங்கிவிடுகிறது.

இதற்கு ஒரே பதில்தான் உண்டு. சொந்த மனை. சொந்த வீடு. நினைத்துப் பாருங்கள்.

இன்றே கோகுலபுரத்தில் மனை வாங்குவீர்.

கோகுலபுரத்தின் சிறப்புகள் :

சுமார் 1500 மனைகள். 1800/3600 ச. அடி. முழுவதும் அரசு அங்கீகாரம் பெற்ற லே அவுட் (DTP அங்கீகார எண் : 1627/83 C.R.T.) சுகாதாரம் மிக்க சந்தடியற்ற சூழ்நிலை. பள்ளி, மருத்துவமனை, விளையாட்டுத் திடல், சமூகக் கூடம், சினிமாக் கூடம், கடைகள், பேருந்து நிலையங்களுக்கான இட ஒதுக்கீடு.

வில்லங்கமில்லாத பட்டாக்கள், சுவையான நிலத்தடி நீர் பதினைந்தே அடியில்.

போக்குவரத்து :

விமான நிலையத்திலிருந்தும், தாம்பரத்திலிருந்தும் முறையே 30, 15 நிமிடக் கார் பயணம். G.S.T. ரோடிலிருந்து 2 கி.மீ. காட்டாங்குளத்தூர் மின் ரயில் நிலையம் — 2.5 கி.மீ. கட்டப்படவிருக்கும் மறைமலை நகர் பேருந்து நிலையத்திலிருந்து அரை கி.மீ.

தனிக் கட்டணமின்றி உங்களுக்கு :


G.S.T. ரோடு முதல் கோகுலபுரம் எல்லை முடிவுவரை சாலைக்குத் தார் போட்டு சீராக்குதல். சாலைதோறும் நிழல் மரங்கள், பூங்காவுக்கான இடங்களில் வேலிகள், மரம் செடி நடுதல். மழை நீர் வெளியேறக் குழாய்கள் சிறு பாலங்கள் அமைத்தல், மனைகளை வரையறுக்கும் குறியிட்ட எல்லைக் கற்கள்.

சென்னைக்கு வெளியே வாழ்பவர்களுக்கு :

அவர்கள் வாங்கும் மனைகளுக்கு கம்பி வேலி அமைத்து தென்னம் பிள்ளைகள் நட்டு, காவல் வசதிகள்.

சுலப மாதத் தவணைகள் :

இவ்வளவு வசதிகளுடன் உள்ள மனைகளின் விலை கொள்ளை மலிவு. அதையும் 12 சுலப மாதத்தவணைகளில் செலுத்தலாம். காட்டாங்குளத்தூர் G.S.T. ரோடில் M.M.D.A. Site Office அருகிலும் கோகுலபுரம் லே அவுட் தொடக்கத்திலும் வழிகாட்டி பெயர்ப் பலகைகள் உள்ளன.



நல்ல மனையைத் தேர்ந்தெடுக்க

இன்றே, இப்போதே செயல்படுவீர்.

நேரிலோ, தபால் மூலமோ தொடர்பு கொள்க :

ராஜ்யஸ்ரீ ரியல் எஸ்டேட்ஸ்

V-3 அப்சரா பில்டிங்,
19, யுனைடட் இந்தியா காலனி
சென்னை-600 024.
போன் : 421456
(லிபர்ட்டி சினிமா எதிரில்)

9, ஸ்வஸ்திக் ஹவுஸ்
பண்டார்கர் ரோடு
பம்பாய்-400 019
(மாதுங்கா போஸ்ட்
ஆபிஸ் (C.R.) எதிரில்)

சென்னை ஏஜண்டு:
'சுபா'
29, ஆலிவர் சாலை
சென்னை-600 004
போன் : 77359

national 1197



ஜி·பி·யின் சமரச முயற்சியில் கணிசமான முன்னேற்றம் — செய்தி





கல்கி



1983 நவம்பர் 20
ருத்ரோத்காரி கார்த்திகை 4
மலர் : 42 இதழ் : 16

அள்ளித் தெளித்த அவசரச் சட்டம்!

அள்ளித் தெளித்த அவசரக் கோலமாகப் பம்பாயிலுள்ள 13 நெசவாலைகளை மத்திய அரசு நாட்டுடைமை ஆக்கியுள்ளது. இதில் அரசியல் நோக்கம் ஏதுமில்லை என்று கூறப்பட்டாலும் பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் (இ) கமிட்டிக் கூட்டம் நடப்பதற்கு முதல் தினம் அரசுடைமையாக்கும் இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதால் இது பிரசார தந்திரமே என்ற ஐயப்பாட்டினைத் தோற்றுவித்துள்ளது. அரசியல் காரணங்கள் ஒருபுறமிருக்க, பொருளாதார ரீதியாகவோ அல்லது தொழிலாளர் நலனை உத்தேசிக்கும்போதோகூட இந்த நடவடிக்கை உசிதமானதல்ல.

இந்தப் பதின்மூன்று ஆலைகளும் ஏற்கனவே ரொம்ப நஷ்டம் அடைந்து வந்திருப்பவை. அது போதாதென்று தத்தா சமந்த் ஆரம்பித்து வைத்த மிக நீண்ட வேலைநிறுத்தத்தின் பயனாக இவை பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டன. இந்த வேலைநிறுத்தத்தின்போது அரசு உறுதியான நடவடிக்கை ஏதும் எடுக்காமல் கைகட்டிக் கொண்டு சும்மா இருந்ததை மறக்கவோ மன்னிக்கவோ முடியாது. இன்றைக்கும்கூட வேலை நிறுத்தம் பிசுபிசுத்து விட்டதே தவிர வாபஸ் பெறப்படவில்லை. அதிகாரபூர்வமாக நீடிக்கிறது!

கிட்டத்தட்ட இரு ஆண்டுகள் வாளாவிருந்த அரசுக்கு இப்போது திடீரென்று இந்தப் பதின்மூன்று ஆலைகளில் பணியாற்றும் ஊழியர்களிடமும் இந்த ஆலைகளுக்குப் பண உதவி செய்துள்ள நிதி நிறுவனங்களிடமும் கரிசனம் பொங்கிப் பிரவகிக்க, இந்த இரு சாராருக்கும் உதவுவதாகக் கூறிக்கொண்டு இந்த ஆலைகளை அரசுடைமை ஆக்கியுள்ளது. இதனால் இவற்றின் பொருளாதார நிலை அபிவிருத்தி அடைந்துவிடப் போகிறதா என்றால், இல்லை. ஒரு நிறுவனம் அரசுடைமையானதால் திருப்திகரமான முன்னேற்றம் கண்டதாக வரலாறே கிடையாது. ஏற்கனவே தேசிய டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் என்ற அரசாங்க நிறுவனத்தின் நிர்வாகத்தில் உள்ள 103 நெசவு, நூற்பு ஆலைகள் 1983 ஜூன் முடிய ரூ. 432 கோடி நஷ்டம் அடைந்துள்ளன. இப்போது இந்த நஷ்டத்துடன் இந்தப் பதின்மூன்று நெசவாலைகளின் ரூ. 175 கோடி நஷ்டமும் சேர்ந்து கொள்ளப் போகிறது! தவிர இந்த ஆலைகளை நவீனப்படுத்தி மறுபடி இயங்கச் செய்ய மேலும் 150 கோடி ரூபாய் தேவைப்படும்! இந்தச் சுமையெல்லாம் வரி செலுத்தும் மக்கள் தலையில்தான் ஏறும்.

சரி போகட்டும், தொழிலாளர் நலனையாவது இந்த அவசரச் சட்டம் பாதுகாக்கிறதா எனில் அதுவும் இல்லை. மாறாக இந்த அவசரச் சட்டத்தின் விளைவாகத் தொழிலாளர் நலன் பாதுகாப்புச் சட்டங்கள் பலவற்றிலிருந்து இனி இந்தப் பதின்மூன்று ஆலைகளும் விடுதலை பெறும்! அதாவது, குறைந்தபட்ச ஊதியச் சட்டம், தொழில் தகராறுகள் சட்டம், தொழிலகங்களில் ஊழியர்களை வேலைக்கு நியமிக்கும் வழிமுறைகளை வகுத்துள்ள சட்டம் முதலியன இனி இந்த ஆலைகளைப் பாதிக்காது!

இந்த ஆலைகள் தங்களிடமிருந்த அதிகப்படி நிலத்தை விற்று முதலீடு செய்து அதன் மூலம் ஆலைகளை நவீனப்படுத்தி முன்னேற்றம் காண்பதில் முனைந்திருந்தன. அதற்கு உதவுவதோடு அரசு நின்றிருக்கலாம். மாறாக, திடீர் திடீரென்று நினைத்துக் கொண்டு தொழிலகங்களை அரசுடைமையாக்குவதால் தொழில்களில் முதலீடு செய்யும் ஆர்வமே மக்களுக்குக் குறைந்து போகிறது. தொழில் துறையின் அபிவிருத்தி தடைப்படுகிறது.

தனியார் துறையில் ஒரு நிறுவனம் நஷ்டமடைந்தால் அது பங்குதாரர்களை மட்டுமே பாதிக்கும்; ஆனால் அரசுத் துறை நஷ்டமடைந்தாலோ அது, நேர்முக, மறைமுக வரிகளைச் செலுத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் அடைகிற நஷ்டமாகிறது.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

அத்தியாயம் 3

அந்தப்புரத்தில் ஆதித்தன்

தப்பியோட எத்தனித்தால் அதுவே தன்மீது சந்தேகம் வலுவடையக் காரணமாகும் என்பதை உணர்ந்தான் விக்கியண்ணன். மேலும் அவனைச் சூழ்ந்திருந்த காவலர்களில் எல்லோருமே அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய நிலையிலுள்ள வீரர்கள். அவ்வாறிருக்க, அவர்கள் தனக்கு ஆணை பிறப்பிக்கும்படியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தராது தனது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

அபிமானவல்லியை ஏறிட்டுப் பார்த்தான். அரைத் தூக்கத்தில் திடுக்கிட்டு விழித்தெழுந்து ஓடிவந்திருந்த அவள் முகத்தில் கவலையும் பீதியும் கலந்து தோன்றின. சற்றே கலைந்த கேசமும் நெஞ்சிலும் இடையிலும் நெகிழ்ந்திருந்த ஆடைகளும் கவர்ச்சியை அதிகரித்தன. இத்தகைய ஒரு கோலத்தில் அவளை இதற்கு முன் பார்த்திராத விக்கியண்ணன் அவள் அழகு முன்னெப்போதையும் விட விகசிப்பதை அந்த இக்கட்டான நிலையிலும் கவனித்துச் சொக்கினான். ''அபிமானவல்லி!'' என்று நாத் தழுதழுக்க அழைத்தவன் ''எத்தனை ஆவலுடன் வந்தேன்'' என்றான்.

''நானும்தான் எத்தனை ஆர்வத்துடன் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தேன்!''

''வல்லி! சாத்தனை நான் கொன்றேன் என்று உண்மையாகவே நம்புகிறாயா நீ?''

''அன்பே! எனக்கு எதை நம்புவது எதை நம்பாதிருப்பது என்றே புரியவில்லை. என் கட்டிலில் இவர் படுத்திருப்பதைப் பார்த்துச் சந்தேகமும் பொறாமையும் அடைந்து இவரைக் கொன்று விட்டீர்களோ என்று நான் இந்த அறைக்குள் நுழைந்த கணத்தில் நினைத்தேன். ஆனால் இப்போது யோசிக்கும்போது அப்படி ஓர் அவசர முடிவுக்கு வந்தது தவறு என்று தோன்றுகிறது.''

''பெண்ணே! உன் அவசர புத்தியினால் இவர்கள் முன்னிலையில் என் மீது கொலைக் குற்றம் சுமத்தி விட்டாயே!''

''பிரபோ! என்னை மன்னித்து விடுங்கள்'' என்று அவள் விம்மினாள்.

''நான் உன்னை மன்னிக்கிறேன். ஆனால் மன்னர் என்னை மதிப்பாரா என்பதல்லவா கேள்வி!''

''நான் மன்றாடி உங்களுக்கு மன்னிப்பைப் பெறுவேன்.''

''நீ மன்றாடிப் பெறுகிற மன்னிப்பை நான் விரும்ப மாட்டேன் வல்லி! நான் குற்றமற்றவன் என்பதற்காக விடுதலை பெற வேண்டுமே தவிர உன் மன்றாடலுக்காக மன்னிப்பை அல்ல.... பார்ப்போம், கோதண்ட ராம ஆதித்தனின் செங்கோல் வளைந்ததாக வரலாறு இல்லை.''

இச்சமயத்தில் மாளிகை காவலர் தலைவன் இடும்பன் ஓர் அடி முன்னால் வந்து, ''ஐயா! எங்களுக்கு ஏவலிடும் நிலையில் உள்ளவர் நீங்கள். எனவே இந்தச் சிக்கலான தருணத்தில் நாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை நீங்களே தெளிவுபடுத்திவிட்டால் நல்லது'' என்றான்.

இடும்பனின் திறமையை மனத்துக்குள் பாராட்டினான் விக்கியண்ணன். பேச்சிலே எத்தனை சாகசம்! விக்கியண்ணன் தன்னைத் தானே விடுவித்துக் கொண்டு வெகு தூரம் போய்விட முடியாது. சதா இவர்கள் கண்காணிப்புத் தொடரும். அதே நேரத்தில் அவ்வாறு தனக்குத் தானே விடுதலை அளித்துக்கொள்வது தனக்குள்ள அதிகாரத்தைத் தவறான முறையில் பிரயோகித்ததாகக் கருதப்படும். எனவே தன்னைத் தானே இவர்களிடம் ஒப்படைத்துக் கொண்டு சிறைப்படுவதுதான் ஒரே வழி. பின்னால் மன்னர் இவனை விடுவித்தாலும் ஓர் உயர் அதிகாரியை அநுவசியச் சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாக இடும்பனை யாரும் பழிக்க முடியாது. ஏனெனில் விக்கியண்ணன் தனக்குத் தானே விதித்துக் கொண்ட கட்டுப்பாடாகத்தான் இச் செயல் விளங்கும்.


''இன்றிரவு என்னைச் சிறையில் வைத்திருந்து நாளைக் காலை அரசவை கூடும்போது மன்னர் பிரானிடம் அழைத்துப் போங்கள்'' என்றான் விக்கியண்ணன், சங்கிலியால் பிணைக்கப்படத் தன் கரங்களையும் நீட்டினான்.

''பிரபோ!'' என்று அலறினாள் அபிமானவல்லி. ''இப்படி உங்களை நீங்களே வருத்திக் கொள்ள வேண்டுமா? அவசியம் என்ன?''

''வல்லி! சட்டத்தை நிலைநாட்ட மன்னரிடம் பயின்றவன் நான். சோழ தேசத்தில் ஆள்பவர் ஆளப்படுகிறவர் அனைவருக்கும் சட்டம் ஒன்றேதான்.''

அருகில் வந்து விலங்குச் சங்கிலிகளால் கனத்த அவன் கரங்களைப் பற்றி அவற்றில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவள் உள்ளங்கைகள் கண்ணீரில் நனைந்தன.

''அன்பே! எதற்குக் கலங்குகிறாய்? ஒரே ஒரு இரவுதான் சிறைவாசம். நாளை சூரியன் உச்சி வானுக்கு வருவதற்கு முன்பாகவே



''இவர்தான் எங்க டீம் 'ஃபாஸ்ட் போலர்'. டெஸ்ட் பந்தயங்களில் இதுவரை நூறு...''

''நூறு விக்கெட் எடுத்திருக்காரா?''

''ஊஹூம்... நூறு நோ பால்ஸ் போட்டிருக்கிறார்!''

—பூபால்சிங்

அபிமானவல்லி

கி.ராஜேந்திரன்



சுதந்திரப் பறவையாக உன்னை மறுபடியும் நாடி வருவேன்.''

அவள் அவனை ஏறிட்டு நோக்கினாள். ''அதில் எனக்கு ஐயமில்லை சுவாமி! நான் கவலைப்படுவது வேறு காரியத்துக்காக.''

''என்ன வல்லி?''

''பிரபோ அதைக் கூறவே என் நாக் கூசுகிறது... ஆனால் கேட்காவிட்டால் எனக்கு அமைதியே இராது... நான்...நான் சாத்தனை மஞ்சத்தில் மகிழ்வித்தேன் என்று நீங்கள் மெய்யாலுமே கருதுகிறீர்களா?''

''வல்லி! எனக்கு எதை நம்புவது எதை நம்பாமலிருப்பது என்றே புரியவில்லை. மரக்கிளையிலிருந்து மேன்மாடத்தில் குதித்துத் திரைச் சீலை விலக்கி மதியொளியில் உன் கட்டிலில் சாத்தனைப் பார்த்த கணத்தில் உன் நடத்தையை நான் சந்தேகித்தது உண்மைதான். ஆனால் அது அவசர முடிவோ என்று இப்போது தோன்றுகிறது.''

''பிரபோ! என் பதிலையே திருப்பிப் போடுகிறீர்கள்!''

''என் கேள்வியையே நீ திருப்பிக் கேட்டபோது உன் பதிலையே நான் திருப்பிச் சொன்னதில் என்ன தவறு வல்லி?'' என்று கேட்டுப் புன்னகைத்த விக்கியண்ணன், மெல்ல அவளை ஒதுக்கிவிட்டு, ''நாலு பேர் மட்டுமே என்னுடன் வரலாம்; மற்றவர்கள் மாளிகையைச் சுற்றிக் காவல் பணியைத் தொடரலாம்'' என்று கூறி முன்னே நடந்தான். சிறைக் கூடத்துக்கு வழி அவனுக்குத் தெரியும்.

அவன் நடக்கவும் காலணி ஓசைக்கும் சங்கிலியின் சத்தத்துக்கும் மேலாக அபிமான வல்லி கதறி அழும் ஒலி அவனைச் சற்றுத் தூரத்துக்குத் தொடர்ந்து வந்தது; வேதனை தந்தது.

* * *

சோழ நாட்டின் அரசனும் தொண்ணூற்றாறு விழுப் புண்களை உடலிலே தாங்கிய மாவீரன் விஜயாலயனின் மகனுமாகிய கோதண்டராம ஆதித்தன் அன்றிரவு அந்தப்புரம் ஏகுகையில் வெகு நேரமாகிவிட்டது. இருப்பினும் வழக்கம் போலவே தனது வளர்ப்புத் தாயாகிய குவளை இருந்த பகுதிக்கு முதலில் அவனது ராஜ நடை அவனை அழைத்துப் போயிற்று.

''வா மகனே!'' என்று ஆசனத்திலிருந்து எழுந்து வந்தாள் அம்மூதாட்டி.

''அம்மா! எதற்கு நீங்கள் எழ வேண்டும்? அமருங்கள்'' என்றான்.

''உன்னைப் பார்த்ததுமே உடலில் வலிமை வந்துவிடுகிறது ஆதித்தா!'' என்று கூறியவள் மறுபடி இருக்கையில் உட்கார்ந்தாள். ''உன்னை எதிர்கொண்டழைக்கிற ஆர்வம் உந்துகிறது. வயது இவ்வளவாகியும் ஆசை விடவில்லை.''

''அம்மா! தந்தை இறந்து கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக முற்றும் துறந்த ஞானி போல் வாழ்ந்து வருகிறீர்கள். எனக்குத் தெரியாதா? உங்களிடம் எஞ்சியிருப்பது ஒரே ஒரு ஆசைதான். அது என் தந்தையின் விருப்பத்தை நான் நிறைவேற்றி வைக்க வேண்டும் என்பதுதான்.''

''அதற்கும் காலம் கனிகிறது போலிருக்கிறதே? விக்கியண்ணன் திரும்பி வந்து கொண்டிருப்பதாக நேற்று கூறினாயே?''

''ஆம் அம்மா! இன்று பொழுது சாயும் நேரத்தில் தஞ்சையின் எல்லையை அடைந்திருக்கிறான். இன்னும் அவனிடம் விவரமாகப் பேச முடியவில்லை. சேரமானிடமிருந்து என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறானோ, தெரியவில்லை.''

''நல்ல செய்தியாகத்தான் இருக்கும், குமாரா! உன் தந்தையின் கனவை நனவாக்க, சோழப் பேரரசை நிறுவ நீ வட திசையில் படையெடுக்கும்போது சோழ தேசத்துக்குத் தெற்கே பாண்டியரிடமிருந்து எவ்வித ஆபத்தும் வராமல் உன் நண்பன் தாணுரவி காப்பான்.''

''அந்த உறுதிமொழியைத்தான் எதிர்பார்க்கிறேன் அம்மா. எல்லாம் நீங்கள் கூறிய யோசனைதானே?'' என்று அவளது மெல்லிய துவண்ட கரங்களை மென்மையாகப் பற்றினான்.

''மைந்தா! எங்கோ கானகத்தில் வாழ்ந்து கொண்டிருந்த வேட்டுவ குலப் பெண் நான். இந்தக் குறமகளிடம் கருணையும் அன்பும் கொண்டு மனைவி என்ற கௌரவத்தையும் அரண்மனை வாசத்தையும் அளித்தார் உன் தந்தை. உன்னைப் பெற்றெடுத்த மாதரசி உத்தமசீலியோ நீ பிறந்த அன்றைக்கே உன்னை என்னிடம் ஒப்படைத்து உன்னை வீர மகனாக வளர்க்கும் பெரும் பாக்கியத்தை எனக்கு அருளிக் கண் மூடினாள். இதற்கெல்லாம் பிரதியுபகாரமாக நான் ஏதோ என் அறிவுக்கு எட்டிய சில யோசனைகளைக் கூறுவதற்கு அதிகமாக வேறு என்ன செய்ய முடியும்?''

''அன்னையே! தஞ்சையைக் கைப்பற்றத் தந்தைக்கு நீங்கள் எப்படியெல்லாம் உதவினீர்கள் என்பதை அவரே எனக்குக் கதை

செப்பியா —சங்கு வகையைச் சேர்ந்த இந்தக் கடல் வாழ் பிராணி, தன்னை எதிரிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளத் தன் உடலில் உள்ள மை நிரம்பிய பை ஒன்றைத் திறந்து விடுகிறது. மை கலந்து நீர் கருநிறமாகும்போது மறைக்கப்படுகிறது. அப்போது நீந்திச் சென்று தப்பி விடுகிறது.

—கே.ஆர். மனோகர்

மஹாராஜா சுவாதித்திருநாள் கிருதிகள்

வாரம் ஒரு புத்தகம்





● 'பாவயாமி ரகுராமம்' நாதஸ்வரத்தில் வாசிக்கப்படாத கல்யாணம் கிடையாது; அதைப் பாடாத சங்கீத வித்வானோ கற்றுக் கொள்ளாத இசைக் கல்லூரி மாணவ மாணவியோ இல்லை. இதுபோன்று சுவாதித் திருநாள் கிருதிகள் பல இன்று இல்லங்களிலும் அரங்கங்களிலும் பாடப்பட்டு வருகின்றன என்றால் அதற்கு முக்கிய காரணம் செம்மங்குடி திரு. சீனிவாச அய்யர் அவர்கள்.

அழகானதும் பிரபலமானதுமான ராகங்களில் அமைந்த கீர்த்தனைகள், பதங்கள், ஜாவளிகள், நாட்டியத்துக்கான பதவர்ணங்கள் முதலியவற்றை மிக அவசியமான இடங்களில் திருத்தி எளிமையாக எல்லாரும் பாடும்படி சுவரப்படுத்தி அளித்தவர் செம்மங்குடி.

பல வாக்கேயக்காரர்களின் சாகித்தியங்களைச் சுவரக்குறிப்புகளுடன் வழங்கும் ஏராளமான நூல்கள் இருப்பினும் செம்மங்குடி தயாரிக்கின்ற நூல்களின் தனிச் சிறப்பு அவற்றின் எளிமைதான். அடிப்படை சங்கீத ஞானம் இருக்கிற எவரும் வேறு குருவை நாட அவசியமின்றிப் புத்தகத்தை மட்டுமே குருவாக ஏற்று அதிலுள்ள பாடல்களைப் பாடிவிட முடியும்.

இந்த வகையில் இசை உலகுக்கு அரும் தொண்டாற்றி வரும் செம்மங்குடி அவர்கள், 101 சுவாதித் திருநாள் கிருதிகளை 1947—லேயே புத்தக உருவில் வெளியிட வழி வகுத்தார். பிறகு 1970—ல் 57 உருப்படிகள் கொண்ட ஒரு நூல் வெளியாயிற்று. இப்போது அதன் தொடர்ச்சியாக இரண்டாம் பாகம் பிரசுரமாகி உ. ாது.

இந்நூலில் 24 கீர்த்தனங்களும், 9 மணிப் பிரவாள பதங்களும், இன்னும் ஜாவளிகள், தான வர்ணங்கள், நாட்டியத்துக்கான பத வர்ணங்கள் முதலியனவும் ஆக 52 உருப்படிகள் அடங்கியுள்ளன. பொக்கிஷங்களான இவற்றை மிகுந்த பிரயாசைப்பட்டுத் தேடிக்கண்டுபிடித்து இசை வடிவம் தந்து அளிப்பதென்பது செம்மங்குடி தவிர வேறு யாராலும் செய்ய முடியாத சாதனை.

ஒவ்வொரு கிருதிக்கும் பொழிப்புரையாகவோ அல்லது கருத்துரையாகவோ தமிழில் சில வரிகள் சேர்த்திருந்தால் இளம் இசை மாணவர்கள் அர்த்தமுணர்ந்து பாவ பூர்வமாகப் பாட உதவியிருக்கும்.

-குட்டிகிருஷ்ணன்

விலை ரூ. 35/- கிடைக்குமிடங்கள்: மியூஸிக் புக் சென்டர், 14, ஸ்ரீபுரம் முதல் தெரு. சென்னை—14, ஹிக்கின்பாதம்ஸ், சென்னை-2, கார்த்திகைத் திருநாள் தியேட்டர், ஃபோர்ட், திருவனந்தபுரம்; ஸ்ரீ செம்மங்குடி, 1, லாயிட்ஸ் லேன், சென்னை—14.

கதையாகக் கூறியிருக்கிறார். அவ்வாறிருக்க நீங்கள் ஏன் உங்களை நீங்களே குறைத்து மதிப்பிட்டுக் கொள்கிறீர்கள்? தங்களை என் வளர்ப்புத் தாயாகப் பெற்றது என் பேரதிர்ஷ்டம்!''

''இருக்கட்டும் ஆதித்தா. நாம் ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொண்டது போதும். வெகு நேரமாகி விட்டது. இளங்கோப்பிச்சி உன்னைக் காணாத ஏக்கத்துடன் காத்திருப்பாள். கன்னர தேவனும் இதற்குள் தூங்கியிருப்பான்... ஆதித்தா! நீ உன் மகனுடன் இன்னும் சற்று அதிகமாகவே நேரத்தைச் செலவிட வேண்டும். பெரும்பாலும் உன்ராஜரீகக் காரியங்கள் முடிந்து அந்தப்புரம் திரும்பு முன் அவன் உறங்கி விடுகிறான். காலை எழுந்ததுமே மறுபடி உனக்குக் கடமைகள் காத்திருக்கின்றன....''

''ஆகட்டும் அன்னையே! அவன் வளரத்தானே காத்திருந்து படையெடுப்பையே பல ஆண்டுகளாக ஒத்திப் போட்டு வந்திருக்கிறேன். இனி அவனை அரசு அலுவல்களிலும் படிப்படியாக ஈடுபடச் செய்வோம். நான் வடக்கே படையெடுத்துப் போனால் அவனைக் கொண்டுதானே இங்கே நீங்கள் காரியங்களை நடத்திச் செல்ல வேண்டும்?''

''நான் நடத்துவதா? இளங்கோப்பிச்சி கவனித்துக் கொள்வாள்.''

''அவளையும் சேர்த்து நீங்கள் கவனித்துக் கொள்வீர்கள்'' என்றான் ஆதித்தன். புன்னகையுடன் அம்மூதாட்டி குவளை அவன் தலையில் கரம் பதித்து ஆசி வழங்க வணங்கி விடைபெற்றான்.

* * *

சர்வாலங்காரங்களுடன் அவனுக்காகக் காத்திருந்தாள் பட்டத்தரசி இளங்கோப்

பிச்சி. இரவு படுக்கப் போகிற நேரம்தானே என்று ஆபரணங்களைக் கூடக் களைவதில்லை அவள். அதுவே ஆதித்தனின் விருப்பமும். உறக்கத்துக்கோ காதல் மயக்கத்துக்கோ இடையூறு புரிகிற சில ஆபரணங்களைக் கழற்ற அவனே உதவி இன்பம் துய்த்ததுண்டு. சில சமயங்களில் துகில்களை மட்டும் நெகிழ்வித்து நீக்கிப் பொன்னாபரணங்களை மட்டுமே அவள் மேனி ஆடையாக அணிந்திருக்கக் கண்டு மகிழ்ந்ததும் உண்டு. ஆனால் இத்தகைய காதல் விளையாட்டுக்களுக்குச் சயனக் கிருகத்தின் தனிமையில் கூட அடிக்கடி சந்தர்ப்பங்கள் நேர்வதில்லை. அவன் அருகில் இருந்த போதிலும் ஏன் சில சமயம் தன் மடியிலே வந்து அவள் ஆசை மீதுற அமர்ந்த போதிலும் அவள் பேரெழில் கூட அவன் கவனத்தைக் கவராமல் தன்னுடைய ஏக்கங்களையும் எதிர்பார்ப்புக்களையும் வேதனையையும் பற்றிப் பேச ஆரம்பித்து விடுவான் ஆதித்தன். ராஜ்ய பாரம் நடத்துவோருக்கு எத்தனையோ சிக்கல்கள், கவலைகள். நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் மனம் விட்டுக் கூறும்போது சுமை குறைவதாகத் தோன்றும். இதைப் புரிந்து கொண்டு இளங்கோப்பிச்சியும் ஆதரவாக உரையாடுவாள்.

இன்றும் ஆதித்தன் வரும்போதே களைப் படைந்து காணப்பட்டான். சோர்வு உடலில் அல்ல; உள்ளத்தில் என்பது கணப்பொழுதில் புரிந்தது இளங்கோப்பிச்சிக்கு. கைநீட்டி வரவேற்றவள், தன்னை அவனிடம் ஒப்படைத்துக்கொள்ளாது, அவன் தன்னிடம் அடைக்கலம் புகச் செய்தாள். அவள் நெஞ்சிலே இவன் சிரம் பதியவும் முதுகைக் காந்தள் விரல்கள் வருடவும் இதமாக இருந்தது. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று கருதிய ஆதித்தன் அவர் கனவு நனவாகவும், ஆணையை நிறைவேற்றவும் வடதிசைப் படையெடுப்புக்குத் துடியாக இருந்தான். ஆயின் அந்த வீர உள்ளத்தில் குற்ற உணர்வும் புகுந்து கொண்டு அவனை ஆட்டிப் படைத்தது. அதற்கான ஆதி காரணத்தையும் இளங்கோப்பிச்சி அறிவாள். ஆனால் ஆதித்தன் இன்று புதிதாக மனச் சோர்வு அடைந்திருப்பதற்கு அது காரணமாய் இருக்க முடியாது. அண்மையில் அவன் மனத்தை வருத்தும் காரியம் ஏதோ நடந்திருக்கிறது. அது இன்று மாலை தஞ்சை திரும்பியிருக்கும் விக்கியண்ணன் தொடர்புள்ளதாகத்தான் இருக்க வேண்டும்.

இவ்விதம் ஊகித்தவளாக, ''பிரபோ! உங்கள் நண்பர் சேர நாட்டிலிருந்து திரும்பி விட்டார் அல்லவா? அவர் மேற்கொண்ட பணி வெற்றிதானே?'' என்று கேட்டாள்.

ஆதித்தன் ஆயாசத்துடன் மஞ்சத்தில் சாயவும், தனது கேள்விக் கணை சரியான இலக்கைத்தான் தைத்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டாள் இளங்கோப்பிச்சி. ஏறத்தாழ ஒரு பொற் கவசம் போலவே அவன் மார்பை அலங்கரித்த சந்திர ஹாரத்தைக் கழற்றி அந்த அகன்ற நெஞ்சப் பரப்பினை உள்ளங்கையால் வருடினாள். நெற்றியை இடக் கரம் அழுத்திக் கொடுக்கவும் பெருமூச்சொன்றில் விம்மித் தணிந்தான்.

''ஆம் கண்ணே! திரும்பி விட்டான். திரும்பியவன் நேரே என்னைக் காண வந்திருக்கக் கூடாதா?''

''வேறெங்கு சென்றார் பிரபோ?''

''அகாலத்தில் என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று தன் காதலிக்குத் தொல்லை தரப்போயிருக்கிறான். போகட்டும், நேர் வழியில் சென்றிருக்கக்கூடாதா? திருடனைப்போல் அவள் மாளிகைக்குள் நுழைவானேன்? கொலைக் குற்றச்சாட்டுக்கும் ஆளாகித் தவிப்பானேன்?''

''என்னது? கொலையா?'' என்று திடுக்கிட்டுப் போனாள் இளங்கோப்பிச்சி. தன் கணவனுக்கு விக்கியண்ணனிடம் உள்ள பேரன்பு அவளுக்குத் தெரியுமாதலால் அவன் மனம் படும்பாடு இப்போது அவளுக்கு நன்றாகப் புரிந்தது. ''அன்பே! நடந்தது என்ன? விவரமாகக் கூற வேண்டும்'' என்று அவள் கேட்டுக் கொள்ளவும் காவலரிடமிருந்து தான் அறிய வந்த விருத்தாந்தங்களைச் சொன்னான் ஆதித்தன்.

''பிரபோ! இதென்ன கொடுமை! ஆருயிர் நண்பர் மீது பழி சுமத்தப்பட நீங்களே அதை விசாரித்து நியாயம் வழங்க வேண்டிய நிலையில்... பாவம்!'' என்று பரிதாபப்பட்டாள் இளங்கோப்பிச்சி. ''இப்போது என்ன செய்வதாக உத்தேசம் அரசே'' என்று கேட்டவாறு அவன் கரத்தைத் தன் கன்னத்தில் ஒற்றிக் கொண்டாள்.

''செங்கோல் ஏந்தி, வழக்காடு மன்றத்தில் தர்மாசனத்தில் அமர்ந்திருக்கும்போது எது நீதி என்று தோன்றுகிறதோ அப்படி நடந்து கொள்வேன். இன்னும் தீர்மானிக்க வேண்டிய அம்சங்கள் இதில் எவ்வளவோ இருக்கின்றனவே!''

''உண்மைதான். சாத்தன் நெஞ்சிலே பாய்ந்திருந்த கத்தி விக்கியண்ணனுடையது தானா தெரிய வேண்டும். இதற்கு முன்பும் வேறு சந்தர்ப்பங்களில் விக்கியண்ணன் இப்படி மதிலேறிக் குதித்து மேன் மாடம் வழி




அவன்: மீட்டருக்கு மேலே பத்து ரூபா கேட்டேன். சாவுக் கிராக்கி பாசஞ்சர் என்ன சொன்னான் தெரியுமா?

இவன்: என்ன?

அவன்: எடைக்குப் போட்டா டாக்சியே பத்து ரூபாய்க்குத் தேறாது. இதில மீட்டருக்கு மேல பத்து ரூபாயா கேட்கறேன்றான்!

—சிவலட்சுமி



ஜனதாசெம்®

அதிகப் பரப்பளவு பரவும் பெயிண்ட்

சாதாரண பெயிண்ட்டை விட
இரு மடங்கு பரப்பளவிற்குப் பரவுவதால்
பெயிண்ட் பூசும் செலவு பாதியாகக் குறைகிறது.



ஜனதாசெம்

இந்தியாவில் முதன்முதலாக பெயிண்டுகளில் ''ஸி பிளஸ்'' முறையைப் புகுத்தித் தயாரிக்கப்படுவது

EP-J-1-83

சென்னை நகர விற்பனை நிலையம்

3, வெங்கடநாராயண ரோடு, தி. நகர், சென்னை-600017

யாக மாளிகையில் நுழைந்ததுண்டா கேட்க வேண்டும். சாத்தன் அங்கு வந்தது எதற்காக, அபிமானவல்லியின் கட்டிலில் சயனித்திருக்க நேர்ந்தது எப்படி என்பது புரிய வரவேண்டும். விக்கியண்ணன் சாத்தனைக் கொன்றதை அபிமான வல்லியோ அல்லது காவலர்களோ கண்ணுக்கு மெய்யாகக் கண்டார்களா என்பதை விசாரித்து அறிய வேண்டும்.... பிரபோ விக்கியண்ணனின் வாக்கை விட அபிமானவல்லியின் சொல்லுக்கா நீங்கள் அதிக மதிப்புத் தரப் போகிறீர்கள்?''

''அவளும் கூட முதல் பார்வையில் அவனைக் குற்றவாளியாகக் கருதிப் பழி சுமத்தினளே யன்றி, பிறகு யோசித்த போது தவறு என உணர்ந்து வருத்தம் தெரிவித்தும் இருக்கிறாள்.''

அணைப்புக்குள் அடங்காத அவன் மார்பிலே தலை சாய்த்தாள் இளங்கோப்பிச்சி. ''அவளிடம் நீங்கள் எச்சரிக்கையாக இருப்பதே நல்லது. பிரபோ! மாடப் புறா ராஜாளி உயரத்துக்குப் பறக்க ஆசைப் படுகிறதோ என்று அஞ்சுகிறேன்.''

ஆதித்தன் மெல்ல நகைத்து அவள் கன்னத்தைக் கிள்ளினான். ''அச்சம் மட்டும் தானா பொறாமையும் சற்று எட்டிப் பார்க்கிறதா?''

''இல்லை என்று நான் பொய் பேசப் போவதில்லை அன்பே! உங்களையும் அபிமான வல்லியையும் இணைத்து அரண்மனை மாதரிலேயே பலர் வேண்டுமென்றே என் காது படப் பேசுகிறார்கள். என்னைக் கண்டதும் ஒன்று மறியாதவர்கள் போல் நடிக்கிறார்கள். நீங்கள் அவள் மாளிகைக்கு அடிக்கடி செல்வதையும் அவள் தீட்டுகிற ஓவியங்களை ரசிப்பதையும் நான் அறிவேன். விக்கியண்ணன் அவளை மணந்து கொள்வதற்கு நீங்கள் தடை விதித்துத் தாமதப்படுத்தி வருவதையும் தெரிந்து வைத்திருக்கிறேன். இதற்கெல்லாம் மற்றவர்கள் உள் நோக்கம் கற்பிக்கும்போது என் மனம் என்ன வேதனை அடைகிறது தெரியுமா? பைத்தியம்தானே நான்? பெயரிலேயே பிச்சி!''

''வெறும் பிச்சியா நீ? இளங்கோப் பிச்சி யல்லவா?'' என்று அன்பு ததும்ப அவள் தோளை வருடிச் சிரத்தை முத்தமிட்டான் ஆதித்தன். ''இளம் கோமானாகிய என்மீது காதல் பித்துக் கொண்ட இளங்கோப் பிச்சி. அதன் விளைவாகத்தான் பொறாமையும் எட்டிப் பார்க்கிறது உன் மனத்தில்.''

''பிரபோ! மன்னர்கள் பல தாரங்களை மணந்து கொள்வது ராஜதந்திரங்களுள் ஒன்று என்பது எனக்குக் குந்தள நாட்டில் ராஷ்டிரகூடர் அரண்மனையில் வளர்ந்த போதே போதிக்கப்பட்ட பால பாடம். ஆனால் அபிமானவல்லியிடம் தன் தகுதிக்கு மீறிய ஆசைகள் வளர்வதும் அதை வளர்ப்பதும் ஆபத்தல்லவா?''

''கண்ணே! உனக்குப் பால பாடம் கற்பித்தவர்கள் ஓர் அரசிளங் குமரிக்குத் தேவையான அடுத்த பயிற்சியை அளிக்கத் தவறி விட்டிருக்கிறார்கள். கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய் தீர விசாரித்தறிவதே மெய் என்பது தெரிய வேண்டும் உனக்கு. நம்மைப் போல் பிரபலமாக உயர்நிலையில் உள்ளவர்கள் பற்றி மக்கள் பலவிதமாகவும் வம்பு வளர்ப்பார்கள். அதிலே சுவை காண்பார்கள். உனக்கு ஏதும் ஐயம் இருக்குமானால் என்னைக் கேட்க வேண்டியதுதானே?''

''பிரபோ! இந்தப் பேதையை மன்னித்து விடுங்கள்'' என்று விம்மினாள் இளங்கோப்பிச்சி. ''நான் தவறாகப் பேசியிருந்த போதிலும் உங்கள் நலனை யன்றி வேறெதையும் எண்ணாதவள்.''

''அது எனக்குத் தெரியாதா கண்ணே'' என்று அவள் மேனியைச் சுற்றியிருந்த தன் பிடியை இறுக்கினான் ஆதித்தன். ''நானே வழக்குரைக்கப்படுவது கேட்டுத் தீர்ப்பு வழங்கும்போதும் உன் மாட முகப்பில் உன் முகத்தைப் பார்த்துத்தான் துணிவு பெறுவேன்.''

''பிரபோ! முன் முடியான இந்த மணி முடிக்காக உலகில் எத்தனை போராட்டங்கள், யுத்தங்கள்!''

''போராட்டம் யுத்த காலத்தில் மட்டுமல்ல; ராஜ்ய பாரம் தாங்கும் ஒவ்வொரு நாளும் மனப் போராட்டம்தான் கண்ணே! சாத்தனைக் கொன்றவன் யாராயினும் அவன் தண்டனை பெற்றேயாக வேண்டும். நானே நான் வழங்கும் தீர்ப்பு நியாயமானதாக இருந்தால் மட்டும் போதாது; நீதி நிலை நாட்டப்பட்டதாக மக்கள் கருதும்படியும் அமைய வேண்டும். எனவேதான் யோசிக்கிறேன்.''

குறிப்புணர்ந்து அவனைச் சிந்திக்க விட்டுச் சிலையானாள் இளங்கோப்பிச்சி. அவன் நெஞ்சில் அவள் சிரம் பதிந்திருக்க அவள் வலத் தோளை அவன் கரம் வருடிக் கொண்டிருக்க அவன் சிந்தனை மட்டும் எங்கோ இருந்தது.

நீண்ட நேரத்துக்குப் பிறகு திடுமென அவன் பிடி தளர்வதை உணர்ந்து இளங்கோப்பிச்சி தலை உயர்த்திப் பார்த்தபோது அதரங்களில் ஒரு மர்மமான புன்னகை விளையாட ஆதித்தன் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான். (தொடரும்)



என் தங்கை அறைக் கதவைச் சாத்திக்கொண்டு, ஆனந்தமாய்ப் பாடிக் கொண்டிருந்தாள். சத்தம் போட்டு ''ஒன் வே டிக்கட், ஒன் வே டிக்கட்'' பாடிக் கொண்டிருந்தாள்.

திடீரென்று அங்கு வந்த என் பாட்டி ''இது என்ன அசத்துப் பாட்டு? 'உன் வேட்டி கட்டு! என் வேட்டி கட்டு!'' என்று அலுத்துக்கொண்டவுடன் நாங்கள் எல்லாம் குபீரென்று சிரித்து விட்டோம்.

—பி. வர்ஷா



காட்பரிஸ்
சாக்லேட்டுகள்

5 ஸ்டார் கையில் இருக்கையிலே...
உங்கள் காரியம் கைகூடிடுமே

நடக்கையிலே, பேசிச் சிரிக்கையிலே, மகிழ்ச்சியிலே திளைக்கையிலே, சிறிது பசிக்கையிலே சாப்பிடுங்கள் 5 ஸ்டார், வழங்கிடுங்கள் 5 ஸ்டார்..

சுவைமிக்க சாக்கலேட் பார்— வாயிலே நீரூறும்.

சுவை நலம் தரும் 5 ஸ்டார்.

வார்த்தைகளால் சொல்ல முடியாததை
நேர்த்தியாகச் சொல்வது.

OBM/2064/TM

16

காலடியில் விக்ரம் முனகிமுனகி அழுதது.

இரண்டு நிமிஷம் சும்மா இருந்துவிட்டு நினைத்துக் கொண்டு மீண்டும் அழுதது.

மொட்டை மாடி நாற்காலியில் உட்கார்ந்து இருட்டையும், நட்சத்திரங்களையும் வெறித்துக் கொண்டிருந்த பாலாஜி பார்வையைத் தழைத்தார்.

கறுப்போடு கறுப்பாய்க் காலடியில் விக்ரம் படுத்திருப்பது பார்வையில் மசமசத்தது.

கையை நீட்டி, உடம்பைத் தலையைத் தடவ, விக்ரம் எழுந்து நின்றுகொண்டது.

அவர் கைகளை நக்கி, சற்றே உரக்கக் குரல் எடுத்து அழுதது.

அம்மா எங்கே?

என் அம்மா எங்கே?

அழுகையோடு கேட்க முயலுவதைப் புரிந்துகொள்ள முடிந்தது. பாலாஜி குனிந்து அதன் கழுத்தில் கைகளைச் சுற்றி, அருகில் இழுத்து அழுந்த அணைத்தார்.

கண்ணோரங்களில் நீர் இரண்டு கட்டடது. மூடின இமைக்குள் எரிச்சல்.

தாடையை இறுக்கிப் பற்களைக் கடித்தார்.



எச்சிலைக் கூட்டி விழுங்கி, பொங்கி வர யத்தனித்த துக்கத்தை அடக்கப் பார்த்தார்.

மார்புக் கூட்டுக்குள் தாங்க மாட்டாத வலி.

வலிக்க வலிக்க இருதயத்தை அமுக்கிய வேதனை.

சட்டென்று திரளும் பாரம்.

அதே வேகத்தில் ஒன்றுமே இல்லாமல் போய்விடும் சூனியம்.

உடம்பு உதறி உதறிப் போட்டது.

மெதுவாக எழுந்து உள் அறைக்கு வந்தார்.

விளக்கைப் போட்டார்.

கூசின கண்களைத் தாழ்த்திக் கொண்டு ஒரு நிமிஷம் அப்படியே நின்று வெளிச்சத்தை ஏற்க முயன்றார்.

பெட் லைட் டேபிள் மேல் இருந்த கடிகாரம் மணி இரண்டரை என்றது.

கௌரியின் படுக்கையின் மேல் பார்வை விழ, அந்த வெறுமை நெஞ்சில் ஓங்கி உதைத்தது.

கௌரி... என்.... கௌரி....

கால்கள் நிற்கப் பலமின்றி நூலிழைகளாக மாற, சட்டென்று படுக்கையில் அமர்ந்தார்.

மூச்சு இரைச்சலாக வெளிப்பட்டது.

முகத்தைக் கைகளில் அழுத்தித் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொள்ளப் பார்த்தார்.



மாலையில் பூக்கும் மலர்கள்

சிவசங்கரி

என்ன பண்ணியும் வலியோ அவஸ்தையோ கொஞ்சம் கூடக் குறையாமல் இருக்க மெள்ள எழுந்து பாத் ரூமுக்குச் சென்றார்.

வாஷ் பேஸின் முன் குனிந்து குளிர்ந்த நீரால் முகத்தையும், கண்ணையும் கழுவிக் கொண்டார்.

வழிந்த நீரைத் துடைக்காமல் எதிரில் இருந்த கண்ணாடியை வெறித்தார்.

கம்பளிப் பூச்சியின் உடம்பாய் ஆறு நாள் தாடி.

சிவந்து இடுங்கின கண்கள்.

தாறு மாறாய்த் தலை முடி....

கௌரி இருந்தால் இப்படி இருக்க விடுவாளா?

கேள்வி பிறந்த மறு கணமே அதன் அசட்டுத்தனத்துக்காகத் தன்னைப் பாலாஜி நொந்து கொண்டார்.

கௌரி இருந்தால் இந்தக் கோலத்துக்கு அவசியம்தான் என்ன?

ஒரு நாள் ஷேவ் செய்யாமல் இருப்பது கூட கௌரிக்குப் பிடிக்காது.

''யக்! தாடி சொர சொரன்னு உறுத்துது. பாலா... ஷேவ் பண்ணிக்கலியா? இது என்ன ஜுரா வேஷம்?''

''நேத்து சாயங்காலம் பார்ட்டிக்குப் போறப்பப் பண்ணிக்கிட்டதால, திரும்பக் காலைல எதுக்குன்னு விட்டுட்டேன். ஆமா அது என்ன ஜுரா வேஷம்? அப்படின்னு கூட ஒண்ணு உண்டா என்ன?''

''சில பேருக்கு ஃபீல் பண்ணவும் பிறர் கிட்ட பச்சாதாபம் வாங்கிக்கவும் ரொம்பப் பிடிக்கும். நாலு பேர் 'உடம்பு முடிலையா?'ன்னுவிசாரிக்கணும்னு ஆசைப்பட்டுஅதுக்குன்னு தனி மேக்கப் போட்டுக்கற மாதிரி, இரண்டு நாள் ஷேவ் பண்ணாம, குளிக்காம முகத்தை வேணும்னே பாவமா வைச்சுப் பாங்களே, அதான் ஜுரா வேஷம்!''

குறும்புச் சிரிப்புடன் அன்று கௌரி விவரித்தது நினைவில் எட்டிப் பார்க்க, முகத்தில் வழிந்த நீரைப் பாலாஜிதுடைத்துக் கொண்டார்.

அலமாரியைத் திறந்து ஷேவிங் கிட்டை எடுத்துக் கிரீமைப் பிதுக்கி முகத்தில் தடவினார்.

''நீங்க ஏன் மீசை வைச்சுக்கலை பாலா?''

நிச்சயதாம்பூலம் நடந்து, திருமணத்துக்கு இரண்டு நாட்கள் இருக்கையில், க்வாலிடியில் அமர்ந்து ஐஸ்கிரீமை இருவரும் சுவைத்துக்கொண்டிருந்தபோது கௌரி கேட்டாள்.

''என்னமோ வைச்சிக்கலை.''

''இல்லே, தேர் மஸ்ட் பீ எ ரீஸன். மீசை வளர்க்கறதுதான் ஆம்பிளைத்தனம்னு ஒவ்வொருத்தரும் நினைக்கிற இந்த நாள்ல...''

''அப்ப நான் ஆம்பிளைத்தனமா இல்லேனு சொல்றே?''

''சீசீ... நான் அப்படியா சொன்னேன்? என்ன பாலா நீங்க?''

பாலாஜி நெற்றியில் விழுந்த முடிக் கற்றையை இடக் கையால் தூக்கி விட்டுக் கொண்டான்.

''உனக்கு ஆசையா இருந்துதுன்னு சொல், மீசை வளர்க்கறேன்.''

''வேணும்... வேணும். நீங்க இப்படி இருக்குறதுதான் எனக்குப் பிடிக்குது. கொசகொசன்னு நடுவுல அது ஒண்ணு எதுக்கு?''

யதார்த்தமாக அவள் பேச, குதர்க்கமான அர்த்தத்தில் பாலாஜி ''எதுக்கு நடுவுல கௌரி?''என, அந்தக் கேலி புரிந்து அவள் வெட்கத்துடன் 'ச்சீய்...' என்று சிணுங்க...

உணர்ச்சி வசப்பட்டுப் போனதில் கைகள் நடுங்கி ரேஸர் மெல்லியதாய்க் கோடு கிழித்துக் கன்னத்தைப் பதம் பார்த்தது.

பாலாஜி பேஸின் மேல் கைகளை ஊன்றிக் கொண்டு கண்களை மூடினார்.

''நீங்கதான் கிரிடிக் பாலான்னு என்கிட்ட ஏன் சொல்லலை டாக்டர்?''

''ஐ லவ் யூ பாலா...''

''ஸாரி சொல்லுங்க. அ....அ...இப்படிச் சொன்னா ஒத்துக்க மாட்டேன். ஸாரி கௌரிம்மா.... தெரியாம மறந்திட்டேன்... கண்டிப்பா மறக்க மாட்டேன். ப்ராமிஸ் கண்ணம்மான்னு சொல்லுங்க...''

ஷேவ் செய்தது போதும் என்ற தீர்மானத்துடன் டவலால் மிச்ச மிருந்த சோப் நுரையைத் துடைத்தார். கழுத்தடியில் ரோமம் இன்னும் முள்ளாகக் குத்துவதை லட்சியம் பண்ணாமல், படுக்கை அறைக்கு வந்து நாற்காலியில் உட்கார்ந்தார்.

மேஜை மேல் வேலைப்பாடு மிக்க கோழி முட்டை வடிவ தந்த பிரேமில் அடங்கி இருந்த கௌரி அவரைப் பார்த்து ப்ரேமையுடன் சிரித்தாள்.

திருமணத்துக்கு வந்த பரிசுகளில் இந்தச் சட்டமும் ஒன்று.

பார்த்த உடனேயே அதில் கௌரியின் படத்தை வைத்துத் தன் மேஜை மேல் வைத்துக் கொள்வது என்று பாலாஜி தீர்மானித்து விட்டான்.

தேனிலவுக்குப் போனபோது மிகவும் சந்தோஷமான ஒரு கணத்தில் அவள் வாய் விட்டு, கண், மனம், முகம் என்று அத்தனையும் பூரித்துச் சிரித்த சிரிப்பொன்றைப் படம் எடுக்கமுடிந்தது. மிகவும் இயற்கையாக இருந்த அதையே சற்றே பெரிதாக்கி பிரேமில் போட்டு வைத்தான்.

சாப்பிட்டு விட்டு அசதியுடன் படுக்கையில் படுத்திருந்த நிமிஷம் அது.



''ஆபரேஷன் தியேட்டருக்கும் சினிமா தியேட்டருக்கும் உள்ள ஒற்றுமை என்ன?''

''ரெண்டிலுமே அறுக்கிறாங்க.''

—சிறை. அ. கதிர்வேல்.

நினைத்துக் கொண்ட மாதிரி கௌரி பேசி னாள். ''உங்ககிட்டச் சொன்னேனா பாலா? நேத்து சின்ன பாட்டி அப்பா கிட்ட உங்களை எக்கச் சக்கத்துக்குப் புகழ்ந்துக்கிட்டிருந் தாங்கன்னு?''

''ம்ஹூம்... எங்க? நல்ல விஷயத்தை எல்லாம் உடனே மறந்துடுவியே? எதுக்குப் புகழ்ந்தார்? அதுவும் எக்கச் சக்கமா?''

நீங்க ரொம்பவும் நல்லவங்களாம். சிக ரெட் பிடிக்கிறது, குடிக்கறது, ஏன், வெத் தலை போடறது கூட இல்லை ஒரு கெட்ட பழக்கமும் கிடையாதாம். சீமைல தங்கின பிள்ளைன்னு யாராவது நம்புவாங்களா? இந் தக் காலத்துல இப்படி தங்கக் கட்டியா?ன்னு பூரிச்சுப் போயிட்டாங்க.''

''ஏன் கௌரி, சிகரெட் பிடிக்கிறதும், எப்பவாவது கொஞ்சம் குடிக்கிறதும் வெத் திலை போடறதும் தப்புன்னு நீ கூடவா நினைக்கிறே?''

கௌரி கண்களை விரித்துப் புருவங்களை உயர்த்தினாள்.

''எதுக்காக இப்படிக் கேக்கறீங்க பாலா''

''இல்லே வந்து....''

''வந்து?''

''நான் எப்பவாவது வெத்தலை பாக்குப் போடறது உண்டுதான் கௌரி.''

''அட!இதுக்கா இத்தனை தயக்கம்? நான் கூடத்தான் விருந்துச் சாப்பாடு சாப்பிட்டா போடுவேன்.''

''நான் விருந்து சாப்பிட்டாக்கூடப்போட மாட்டேன். சிகரெட் பிடிக்கறப்போ அந்த வாசனை தெரியாம இருக்கப் போடுவேன். தட்ஸ் ஆல்.''

''அப்ப சிகரெட் பிடிக்கிற பழக்கம் உங்களுக்கு உண்டா பாலா?''

''அடிக்கடி இல்லே கௌரி. குடிக்கறப்போ மட்டும்தான்.''

''எ...என்னது! கு... குடிக்கறப்போவா? அப்படின்னா குடிக்கிறது வழக்கம்தானா?''

''ச்சீ... வழக்கம்னு சொல்ல முடியாது கௌரி... நாலு நண்பர்களாசேர்ந்துகிட்டு''

''சேர்ந்துகிட்டு?''

''இங்க அங்க போறப்போ குடிப் போம்.''

கௌரி இப்போது நிஜமாகவே பயந்து போனாள். ''இங்கே அங்கேன்னா?''

''வந்து....வந்து...கோவிக்காதே கௌரி. நாலு ஆம்பிளைங்க ஒண்ணாச் சேர்ந்தா எங்க போவாங்க, அங்கதான்...''

கண்களில் நீர் திரள, கௌரி கணவனை வெறித்தாள்.அவன்கூறியதை நம்ப முடியா மல் திகைக்க,என்ன பேசுவது என்று புரியா மல் தவிக்க....

சீண்டியது போதும் என்று, இது நாழிகை அவள் பார்வையைத் தவிர்த்து, சிரிப்பைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டிருந்த பாலா பக்கென்று வெடித்துச் சிரித்தான்.

இழுத்து முரட்டுத்தனமாய் அணைத்து, 'ஏச்சுப்பிட்டேனே கௌரி, ஏச்சுப்பிட் டேனே கௌரி, ஏமாந்து போனியா, ஏச்சுப் பிட்டேனே' என்று வள்ளி, இழவன் பாட்டைப் பாட, அத்தனையும் பொய் என்று புரிய, 'கடவுளே ஆனாலும் நீங்க சுத்த மோசம்.' என்று முறை முறைத்தவள் சடக் கென்று அவன் பிடியிலிருந்து நழுவி சேர்ந்தி ருந்த கட்டில்களை அவசரமாய்ப் பிரித்தாள்.

''கௌரி, வாட் ஆர் யூ டுயிங்? என்ன பண்றே?''

''புரியலே? பொம்பளைக் கிட்டப் போறது தானே ஐயாவுக்கு ஆரம்பம்? அதுலேந்து தானே குடி, சிகரெட்...னு வரிசையா... எதுக்கு வம்பு? கேளும்பா...''

அந்தச் சிரிப்பும் நையாண்டியும் ஒருவித போதையை உண்டாக்க, பாலாஜி 'கழு தைக் குட்டி' என்று செல்லமாக அதட்டி, அவளைப் பிடிக்கப் பார்த்தான்.

அன்றைக்கு ரொம்ப நேரத்துக்கு அந்தச் சிரிப்பு கௌரியிடம் வாசம் செய்தது.

நினைத்து நினைத்து அவள் பாலா... பாலா என்று அரற்றி வேறு எதுவுமே பேசத் தெரியாமல், கண்களில் நீர் இறங்கும் அளவுக்குச் சிரித்த, ஒரு சமயத்தில் எடுத்த படம்தான் இது.

மேஜை மேல் இருந்த படத்தை எடுத்து நெஞ்சில் வைத்து பாலாஜி அழுத்திக் கொண் டார்.

கௌரி...

கௌரி...

என்னால் தாங்க முடியலையே...

நான் என்ன பண்ணப் போகிறேன்.

நெஞ்சு கொதித்த கொதிப்பில் கண் ஜோரங்களில் நீராவி படர்ந்து குட்டி குட்டியாய் முத்துக்கள் உற்பத்தி ஆகி கன்னத்தில் உருண்டன.

கௌரி இல்லாமல் முழுசாய் ஆறு நாட்களைத் தாண்ட முடியவில்லையே.... இனி?

ஆயுசு பரியந்தம்?

எப்படி இருக்கப் போகிறேன்?

ரத்தமும் சதையுமாகக் கௌரியை முரட் டுத்தனத்துடன் இழுத்து அணைத்துக்கொள்ள மனசு ஏகத்துக்குப் பரபரக்க அந்தத் தவிப்பை அடக்கத் தெரியாமல், அந்த வலியைத் தாங்கிக்கொள்ளத் தெரியாமல், படுக்கை யில் பாலாஜி விழுந்தபோது, கட்டிலடியில் படுத்திருந்த விக்ரம் மீண்டும் முனகி முனகி அழுதது. (தொடரும்)

''நான் சொல்லி எதையும் என் மனைவி தட்டமாட்டாள்.''
''அதான் உன் மேஜையைப் பார்த்தாலே தெரியுதே!''

—சீழை அ. கதிர்வேல்





தீபாவளி ரேஸ்

அன்புள்ள வாசகருக்கு,
நலம். நாடுவதும் அஃதே. சுப்புண்ணி பூணூலுக்கு அத்திம்பேர் வந்திருந்தாரா? காமாட்சி அரச மரத்தைச் சுற்றிக் கொண்டிருந்தாளே — என்ன ஆயிற்று?
—மன்னிக்கவும். மிக மன்னிக்கவும். வீட்டுக்குப் போக வேண்டிய கடிதத்தின் இரண்டு வரிகள் எதிர்பாராமல் இடம் மாறிவிட்டன. இனி
சென்ற வாரம் நேரம் கிடைக்காததால் ஒரு குதிரையைப் பற்றி மட்டுமே சொல்ல முடிந்தது. இந்த வாரம் இரண்டு குதிரைகள் கவனத்தைக் கவர்கின்றன. நொண்டியடித்துக் கொண்டு வரும் ஒன்று. முண்டியடித்துக் கொண்டு வரும் ஒன்று. இரண்டையும் பார்ப்போமே.

கை வரிசை

சொந்தக்காரர் (தயாரிப்பு): சரஸ்வதி
ஜாக்கி (இயக்கம்): பிரேம்குமார்


இந்தப் படத்துக்குக் கண்ணதாசன் பாடல் எழுதியிருக்கிறார் என்றால் எவ்வளவு சமீபத்தில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நினைத்துப் பாருங்கள்.
பரட்டைத் தலையுடன் ஜெய்சங்கர். அதுவும் கதாநாயகனாய். நாயகி கேரள சீமா.
இவர்களுக்கு இடையில் சின்ன உரசல். அப்புறம் கனவு, காதல். அது ஒரு பக்கம்.
திடீரென்று சீமாவின் மாமா மண்டையைப் போடுகிறார். போகுமுன் அவனுடைய பெற்றோரை மூன்று வில்லன்கள் எப்படிக் கொன்றார்கள் என்று விஸ்தாரமாகச் சொல்கிறார்.
சீமா புல்லட் ராணி டிரஸ்ஸை மாட்டிக் கொண்டு கொஞ்சமும் எதிர்ப்பே காட்டாத வில்லன்களை ஒவ்வொருவராய்த் தீர்த்துக் கட்டுகிறார். தங்கை ஜரீனா வஹாப் ஜூனியர் வில்லனால் கற்பழிக்கப்பட. (அந்தக் கடைசி நிமிஷத்தில் ஜரீனா வஹாப் கண்ணாடியால் குத்திக் கொண்டு உயிரை விட)
ஜெய்சங்கர் வேறு இங்கே ஆவேசமாகக் கிளம்புகிறார். டிஷ்யூம், டிஷ்யூம், டிஷ்யூம்... என்று இழுத்துக் கொண்டே போகிறார்கள். ஆதாம், ஏவாள் காலத்துக் கதை;
குதித்துக் குதித்து நகர்கிற எடிட்டிங். வசனங்களைக் கேட்டுவிடப் போகிறோமே என்று அதை அமுக்கிக் கொண்டு டப் டடங்கா டப் டடங்கா என்று சங்கர் கணேஷ்.
கொஞ்சம், கொஞ்சம் சிரிப்புக்கு மகேந்திரன் மனோரமா. (தனியாய் எடுத்து ஒட்டினார்களோ?) ஒரு சௌகரியம். எப்பொழுது வேண்டுமானாலும் வெளியே போய்விட்டுத் திரும்பி வரலாம். இடையில் என்ன நடந்திருக்கும் என்று கண்களை மூடிக் கொண்டு சொல்லலாம். காலை பஸ்ஸில் ஊருக்கு வந்துவிட்டு, சாயங்கால பஸ்ஸுக்குத் திரும்பிப் போகிறவர்கள் லாட்ஜ் செலவு செய்யாமல் தியேட்டரில் போய் ஓய்வெடுத்துக்கொள்ள வசதியாய் ஒரு படம்.

ஜெயமன்மதன் டிப்ஸ்: முதல் ரவுண்டில் தேறுவதே கஷ்டம். தேறினாலும் அடுத்த ரவுண்டில் கட்டுத் தள்ளிவிடுவார்கள்.

அபூர்வ சகோதரிகள்

சொந்தக்காரர் (தயாரிப்பு): தேவர் ஃபிலிம்ஸ்
ஜாக்கி (இயக்கம்) : தியாகராஜன்

கார் ரேஸில் கெட்டிக்காரரான ஜெய்சங்கர். அவரது மனைவி. அவரது மூன்று மழலை மாறாத பெண் குழந்தைகள் என்று கதை தொடங்குகிறது.
அடேடே கார் ரேஸிங் ஒன்றைக் கண்டிப்பாய்ப் படத்தில் பார்க்கலாம் என்று நாம் கனவு காணுகிறோமா, தொபுகடீர் என்று அந்தக் கனவை உடைக்கிறார்கள் வில்லன்கள்! (தே. சீனிவாசன், அண்ட் விஜயகுமார்?)
ஜெய்சங்கர் முடமாகிறார். விஜயா திருட்டுப் பட்டத்துடன் ஜெயிலுக்குப் போகிறார். அப்புறம் என்ன? மூன்று மழலை மாறாத குழந்தைகளும் மூன்று பக்கம் பிரிந்து இளமை மாறாத கன்னிகளாய் உலவுகிறார்கள். ஒருவர் போலீஸ் இன்ஸ்பெக்டரிணி சுஹாசினி. ஒருவர் நாயுடன் வயிற்றுப் பிழைப்புக்காக மட்டும் 'சொந்த' மோட்டார் சைக்கிளில் ஓடி ஓடித் திருடும் ராதா. ஒருவர் 'ஜிங்' 'ஜிங்' என்று டிஸ்கோ ஆடும் ஊர்வசி. இந்த அபூர்வ சகோதரிகள் எப்படி ஒன்று சேருகிறார்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாய்ச் சொல்லும் கதை.
அட கதையை விடுங்கள் அய்யா. பொடிச் சமாச்சாரம்.
இருக்கிறது, தேவர் ஃபிலிம்ஸ் ஸ்பெஷாலிடி – நாய்.
இருக்கின்றன மூன்று டிஸ்கோ பாடல்கள். ப(ா)ப்பி லஹரியின் இசையில் வெளுத்துக் கட்டுகின்றன, போனி எம். துணையோடு.
பார்க்கிறவர்களை 'ஹா' 'ஹா' என்று வாயைப் பிளக்க வைக்கிற மாதிரி லேட் ஜோடனைகள், அரங்க அமைப்புகள்.
சென்டிமெண்டுக்காக அங்கங்கே அழுகிறார்கள். கிளுகிளுப்புக்காக அங்கங்கே காதலிக்கிறார்கள். மயிர்கூச்செறிவதற்காகச் சண்டை போடுகிறார்கள்.
ஜெய்சங்கரும் 'கர்ப்பிணி' ராதாவும் கடையில் புகுந்து ஒவ்வொரு ஐட்டமாய் வயிற்றுக்குள் அபேஸ் செய்யும் கட்டம் கலகலப்புக்கு ஒரு சின்ன ஸாம்பிள். படம் நெடுக இந்த ஸாம்பிள்கள் அங்கங்கே மின்னுகின்றன.
கார்த்திக், சுரேஷ் – ஜிலுக்கு. அனுராதாவுக்குப் பதில் உபயோகிக்கப்பட்ட மாதிரி சிற்சில இடங்களில் மட்டுமே வந்து போனாலும் இந்தப் படத்தில் கொஞ்சம் களையாய்த்தெரிகிறார்களே! மேக்கப்தான் காரணமோ?
என்னதான் கடுகுக் கதை என்றாலும் கூட அதை நெருடல் இல்லாமல் சொல்லிக்கொண்டே போகிறார்கள். படம் ஆரம்பிக்கிறது தெரிகிறது. அப்புறம் இடைவேளை. அப்புறம் ஆரம்பிக்கிறது. நிதானமாய் நிமிர்ந்து உட்காருவதற்குள் முடிந்து விடுகிறது.



ஜெயமன்மதன் டிப்ஸ்: மின்னல் வேகம்

திக்க, வெள்ளை ரோஜாவும், தங்கைக்கோர் கீதமும் ஆங்காரக்களைப்புக்களுடன் ஓடிவருகின்றன. இந்தக் கவர்ச்சிக் குதிரைகளைப் பற்றி எங்களுக்குத் தெரிந்ததை அடுத்த வாரம் சொல்கிறோமே!

வந்தனங்களுடன், ஜெயமன்மதன்

ஜங்ஷனிலே ஒரு மேம்பாலம்

• வையவன் •

1

காலை ஐந்து மணியானதுமே ஜங்ஷன் சுறுசுறுப்பாகி விடுகிறது. அதற்கு முன்பே மேம்பாலத்தில் ஏறுவோரும் இறங்குவோரும் வருகிறார்கள் போகிறார்கள். வேலைக்குப் போகும் ரயில்வே ஊழியர்கள், நைட்-டூட்டி முடிந்து உறக்கம் கனக்கும் சிவந்த கண்களோடு வீடு திரும்புவோர், ரயிலுக்குப் போவோர், இறங்கி வரும் பயணிகள், ஜோலார்ப்பேட்டை ஊரிலிருந்தும் ரயில்வே க்வார்ட்டர்ஸ்களிலிருந்தும் மேம்பாலம் கடந்து ஹோட்டல் தெருவுக்கு டீ, சாப்பிடக் குடிக்க வருவோர் — இவர்கள் எல்லாம் எப்போது உறங்கினார்கள்? எப்போது விழித்தார்கள்?

மேம்பாலத்தின் சிமிட்டித் தரையின் மீது இரவு முழுவதும் பகல் முழுவதும் மனிதக் காலடிகள் தண் தண்ணென்று சிறு ஓசையும் எதிரொலியுமாக நடக்கும் சாவடியோசை கேட்டுக் கொண்டே இருக்கிறது. ஜங்ஷன் உறங்குவதில்லை. மேம்பாலமும் உறங்குவதில்லை. அவை சதா நேரமும் விழித்திருக்கின்றன.

மேம்பாலத்தைக் கடந்து கீழிறங்கியதும் டாக்ஸி ஸ்டாண்ட். திருப்பத்தூருக்குப்போக எப்போதும் இரண்டு மூன்று டாக்ஸிகளாவது காத்திருக்கும். அகலமான ஜங்ஷன் சாலை. குறுக்கே கடந்தால் கொஞ்ச தூரம் தள்ளி மழை வெள்ளம் ஓடப் பள்ளமாக வெட்டிய கால்வாய். நீள நீளமாகக் கால்வாய்க்குமேலே போட்ட கருங்கல் கம்பங்கள். ஒன்றோடு ஒன்று இணைந்து மூன்று கற்கள். அவைதான் ஜங்ஷன் ரோட்டையும் ஹோட்டல் தெருவையும் இணைக்கும் பாலம்.

தெற்கு வடக்காக ஹோட்டல் தெரு. அப்படியொன்றும் அகன்ற தெருவல்ல. குறுகல்தான். ஆனால் நீளமாய் இருக்கும். வரிசையாக ஹோட்டல்கள். கடைகள். ஓர் ஐயர் ஹோட்டல். ஒரு மலையாளி ஹோட்டல், டீக்கடை ஹோட்டல்கள், மிலிட்டரி ஹோட்டல்கள். அவற்றில் மூன்று நான்கு ஹோட்டல்கள் தவிர மற்றவை அடிக்கடி கைமாறியவை. மூடப்பட்டவை. புதிதாக வேறு நிர்வாகத்தால் திறக்கப்பட்டவை.

தெருக் கோடியில் சில வீடுகளும் இருந்தன. வீடுகள் ஆரம்பிக்கிற இடத்தில்தான் காசியின் சைக்கிள் ஷாப். அங்கிருந்து சில மீட்டர் தூரம் சென்றால் ஹோட்டல் தெரு பிரிந்து விடுகிறது. சற்றுத் தள்ளி மேற்கே மெயின்ரோடு. சென்னைக்குச் செல்லும் நெடுஞ்சாலை. ஹோட்டல் தெருவிலிருந்து ஒரு நேர்கோடு வரைந்தால் அது சாலையைக் கடந்து வெட்டிக் கொள்ளும். திருப்பத்தில் தான் ஜெயாவின் ஹோட்டல்.

கேசவன் கபே. டீ அண்டு சாப்பாடு ஓட்டல் என்று பெரிய தகர போர்டு. குடிசை மாதிரி கூரை போர்த்திய செங்கல் கட்டிடம். ஐந்து பெஞ்சுகள். உட்காரச் சுண்ணாம்பு அடித்த செங்கல் திண்ணை. ஒரு டீ பாய்லர். அதுதான் ஹோட்டல். அதுவேதான் ஜெயாவின் வீடு.

வீட்டிற்கு வெளியே கொட்டகை. வெளியில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த காசி ரயில்வே சங்கு ஊதியதும் விழித்துக்கொண்டான். கண்ணை மூடிக் கொண்டு படுத்திருந்தான்.

ஜெயா ஹோட்டலைப் பெருக்கியது, சளார் சளாரென்று வாசலில் தண்ணீர் இறைத்தது. டீ போடும் கோவிந்தன் நாயர் வந்ததும் பெஞ்சுகளை எடுத்துப் போட்டது, ஒரே ஈட்டில் அறுபத்து நான்கு இட்லிகள் வேகும் இட்லிக் குண்டான் அடுப்பில் ஏறி வெந்நீர் காய்ந்து, ஙொய் யென்று கத்தும் ஓசை எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே படுத்திருந்தான். வழக்கமாக ஜெயாவுக்குக் கூடமாட உதவி செய்வான். இன்று கண் விழிக்கத் தோன்றவில்லை. மனசில் ஏதேதோ யோசனைகள் கூட்ஸ் வண்டி மாதிரி ஒன்றைக் கோர்த்துக் கொண்டு ஒன்றாய் ஓடிக் கொண்டே இருந்தன.

சலங் சலங்கென்று முத்து வைத்த கொலுசு அதிரக் கட்டிலுக்கு அருகே ஜெயா நடந்து வருகிற ஒலி கேட்டது. சிறிய பக்கெட்டில் தண்ணீர் கொண்டு வந்து லொட்டென்று பக்கத்தில் வைத்தாள். எழுந்திரு என்று அர்த்தம்.

''நாயரே, பால் காஞ்சிடுச்சா?'' என்று அவன் காதில் விழுகிற மாதிரி கேட்டாள்.

''அல்பம் சூடு வேணம்.''

''இவரு எழுந்து மொகம் கழுவுறதுக்குள்ள காஞ்சிடும்...'' என்று தனக்கும் காசிக்குமாகப் பேசிவிட்டு ''எழுந்துக்கறது'' என்றாள்.

காசி கண்களைத் திறந்தான். ஜெயாவின் முகம்தான் விழித்த முகம். குளித்துவிட்டிருந்தாள். பளிச்சென்று தேய்த்துக் கழுவிப் பொட்டு வைத்த குத்துவிளக்கு மாதிரி நின்றிருந்தாள்.

ரயில்வே டைம் டேபிள்: ரயில் எவ்வளவு தாமதமாக வருகிறது என்பதை நாம் தெரிந்து கொள்வதற்காக ரயில்வே இலாக்காவினர் ஆறு மாதங்களுக்கு ஒரு தரம் வெளியிடும் புத்தகம்.

—எஸ். மோகன்.

''சர்க்கரை ஆய்ப்போச்சு. காத்தாலே ஒரு மணி நேரத்துக்குத்தான் வரும்.'' அவன் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான்.

''நேத்தே வாங்கிக்கிணுலோமே.''

ஜெயா வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்தாள்.

''எங்க... ஐயாவுக்குத்தான் ஜங்ஷன் டூட்டியா இருந்ததே!''

அவன் இண்டலைக் காதில் விழாதது போல் ஒதுக்கி விட்டுக் கொண்டு ''இப்ப பார்சல் பேட்டைக்குத்தான் போகணும். பார்சாரதி கார்த்தாலே கடை தொறந்ததும் கடன் குடுக்க மாட்டேனுவான்!'' என்றான்.

''கடன் ஏன் வாங்கியாறே? நேத்து கல்லா கட்ன பணம் கீது.''

''பால்காரன் வருவான் இல்லே?''

''அவனுக்கு நான் சொல்லிக்கிறேன்.''

''முடி வளந்துடுச்சி. இன்னிக்குக் காத்தாலே நான் கட்டிங் பண்ணிக்கலாம்னு நெனச்சேன்.''

''இன்னிக்கு வாணும். எண்ணெய் தேச்சுத் தலைமுழுகிடு. ஹரி கிட்டே நேத்து சாய்ங்காலமே தலக் கறி எடுத்தாரச் சொல்லிக்கிறேன். கொளம்பு வக்கணும். கட்டிங் பண்ணிக்கினு எண்ணெய் தேச்சுக்கினு சளி படிக்கும்.''

காசி கட்டிலை விட்டு எழுந்தான்.

ஜெயா கட்டிலின் தலைமாட்டில் நின்று கொண்டிருந்தவள் அதன் விளிம்பு உருட்டைப் பிடித்துக் கொண்டு ''ஒரு கை புடி'' என்றாள். கட்டிலை அகற்ற விரும்புகிறாள்.

''நீ நவுரு'' என்று அதன் மேல் விரித்திருந்த தலையணையையும் ஜமக்காளத்தையும் சுருட்டி அவள் கையில் கொடுத்துவிட்டுக் கட்டிலைச் சாய்த்து ஒரே கையால் தூக்கிக் கொண்டு போய் தோட்டத்துக்குப் பின் பக்கமாக மஞ்சம்புல் கூரைச் சார்ப்பின் கீழ் வைத்தான்.

அதற்குள் தலையணை ஜமக்காளத்தை வைத்துவிட்டு ஜெயா கையில் பல்பொடிப் பொட்டலத்தோடு திரும்பி வந்தாள்.

காலையில் முதல் சுடு இட்லி இறங்கிய பின்புதான் வியாபாரம் சூடு பிடிக்கும். ஆறே காலுக்குப் பாத்திமா பீவி வீட்டிலிருந்து வாடிக்கையாகச் சேமியா வரும். சைக்கிள் காரியரில் மார்பு அகலக் கூடையில்,



அதற்கப்புறம் இப்படி அப்படி நகர முடியாது. மத்தியானம் இரண்டரை மணிக்குச் சாப்பாட்டுக் கடை ஓய்கிற வரையில் மூச்சு விட முடியாது.

இப்படிக் காலையில் காசியை எழுப்பி அவனுக்கு டீ கொடுக்கிறவரை பத்து நிமிஷம் அவனோடு பேசுவது ஜெயாவுக்கு ஒரு டானிக் சாப்பிடுகிற மாதிரி. அன்றைக்குப் பிற்பகல் வரை யந்திரம் போல் உழைக்கும் உழைப்பிற்கு அதுதான் பலம் தரும். அதேபோல் அவன் குளித்து விட்டு வந்ததும் ஹோட்டல் பகுதியை விட்டு உள் தள்ளி அவனை மணை மேல் உட்கார வைத்து டிபனைத் தன் கையால் பரிமாறுவாள். தன் கையால் அவனுக்குப் பரிமாற வேண்டும். அதில் ஒரு திருப்தி. ஏதோ தன் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் இருப்பது போல் ஒரு நிறைவு.

காசி பல்லைத் தேய்த்துக் கொண்டிருக்கும் போது அடுப்புக்கு ஒரு விசிறு போய், சேர்வா அடுப்பில் விறகைத் தள்ளிக்கொண்டிருந்த பொன்னம்மாவைப் பார்த்து. "கொதி வந்ததும் கூப்பிடு. வடகறிக்குப் பருப்பு அரைச்சு வச்சிக்கோ" என்று திரும்பி வந்தாள்.

காசி வாய் கொப்பளித்தான்.

"பாவம் ஜயாவுக்கு காத்தாலே எழுந்துக்க முடியலே...." எதையோ கிண்டப் போகிறாள். அதற்கு இது முன்னெச்சரிக்கை என்று காசி உணர்ந்தான்.

"ம்ம்... எத்தினியோ கவலே... இப்பிடி ஒரு பொண்ணுக்குக் கண்ணாலம் பண்ணி வெக்கணும். ஆலங்காயம்காரங்க வேற கைகழுவிட்டாங்க..."

காசி வாய் கொப்பளிப்பதை நிறுத்தித் திரும்பிப் பார்த்தான். ஜெயாவின் முகத்தில் ஒரு புன்னகை. அதில் வேதனை ஊர்ந்ததைக் குறிப்பாகப் புரிந்து கொண்டான்.

"எனக்கு வர்ற லெட்டரை எல்லாம் நீ ஏன் படிக்கிறே?"

அவள் மிடுக்காக ஒரு பார்வை பார்த்தாள்.

"ஆரு எப்படின்னு தெரிஞ்சுக்க வேண்டாமா?"

"அதுக்குத் தபாலேப் படிச்சுட்டு ஏன் ஒட்டி வெக்கிறே?"

"நீயா சொல்றியான்னு பாக்கத்தான்."

காசி தோள்பட்டை முகம் எல்லாம் தண்ணீரில் கழுவினான்.

"இப்ப யாரு ஒன்னை எனக்கு மாப்பிள்ளை பாக்கச் சொன்னது?"

அவன் மீண்டும் ஒரு கை தண்ணீரை அள்ளி வாய் கொப்பளித்தான்.

"என்னமோ சோமை எறங்கினாப் போதும்கிற மாதிரி ஊர் ஊரா மாப்பிள்ளை தேடிக்கினு திரியறே. ஆலங்காயம்காரங்க வந்து பெஞ்சில ஒக்காந்ததுமே நான் கண்டுக்கினேன். இதைக் கூடவா ஒரு பொண்ணு கண்டுக்க முடியாது?"

அவன் பக்கெட்டில் மீதியிருந்த தண்ணீரில் கால் கழுவிக் கொண்டான்.

"அவங்களுக்குப் புடிச்சதுன்னு லெட்டர் வந்திருந்தா நான் அந்தப் பையன் கட்டற தாலிக்குக் கழுத்த நீட்டியிருப்பேன்னு ஒனக்கு நெனப்பா!" ஜெயா தன் தோள் மேலிருந்த துண்டை எடுத்து அவன் முன் நீட்டிக் கொண்டே கேட்டாள்:

"இவ்ளோ பேசறே... ஜங்ஷனே காசியண்ணன் காசியண்ணன்னு ஒம்மேலே மதிப்பு வச்சக்கினு கீது. ஒரு பொண்ணுன்னு தலைச் சொமை மாதிரி. அதை எவன் தலையிலாவது கட்டிடணும். அவளுக்கு அது பிரியமா... இல்லியா... ம்ஹூம். அது இன்னா அவ்வளவு முக்கியமா?"

காசி முகத்தை அழுந்தத் துடைத்தான்.

"பொண்ணுப் பொறந்ததும் அவ பெரியவளானதும் மடமடன்னு அவ கழுத்திலே ஒரு தாலியை மாட்டித் தொரத்திடணும். அவளும் சந்தையிலே வித்த மாடு மாதிரி வாங்கினவன் வூட்டுக்குப் போயி வருஷத்துக்கு ஒரு கன்னு போட்டுத் தேஞ்சு மாயணும்."

காசிக்குச் சிரிப்பு வந்து விட்டது.

"ஐய... சிரிப்பு வேற வருது. என்னை மதிச்ச ஒனக்கு மாப்பிள்ளை புடிச்சிருக்கா... கண்ணாலம் கட்டிக்கிறியான்னு கேக்கணுமா இல்லியா?"

அவன் அவளை ஒரு விநோதப் பொருளை வேடிக்கை பார்ப்பது போலப் பார்த்தான்.

"நாயரே... டீ கொண்டா" என்று கடையைப் பார்த்து ஒரு உத்தரவை வீசி விட்டு, காசியைத் தீர்மானமாக நோக்கினாள்.

"த... இத இப்போ சொல்றதுதான் வார்த்தை. நல்லாக் கேட்டுக்க. நான் இப்ப கண்ணாலம் பண்ணிக்க மாட்டேன். எப்ப ஒன்னைப் பண்ணி வைன்னு கேக்கறேனோ அப்பப் பண்ணி வை. அதுக்கு நடுவிலே இப்பிடி எவனையோ துட்டு ஆசை புடிச்சவனுங்கள இருட்டாட்டமா இட்டாந்தே எனக்குக் கெட்ட கோவம் வந்துடும்.... ஆமாம்."

நாயர் டீ கொண்டு வந்தார். அதைத் தன் கையாலே வாங்கிக் காசியிடம் நீட்டினாள். அவன் டீ கிளாஸை வாங்கிக்கொண்டான். அவளைப் பார்ப்பதையே தவிர்த்த

பசி வந்திட பறப்பவை

பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும் என்கிறோம். அந்தப் பத்து எவை என்பது தெரியுமா?

அவை: மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, காதல்.

கருங்கல் ஆர். ஜார்ஜ்

வாறு கீழே குனிந்து கொண்டு "நீ அப்பிடிக் கேக்கறப்ப நான் இல்லாமே பூட்டேன்னு?" என்று வெகு சாதாரணமாகச் சொன்னான்.

"இன்னு சொன்னே... இல்லாமே...." என்று சொல்ல வந்தவள் சட்டென்று அந்த வார்த்தையின் கனத்தை உணர்ந்து ஒரு கணம் வாயடைத்து விட்டாள்.

காசி நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவள் கண்களில் ஊறித் ததும்பிய கண்ணீரில் விளக்கொளியின் பிரதிபலிப்பு மின்னியது.

"இந்த மாதிரிப் பேச்செல்லாம் எங்கிட்டப் பேசாதே. பூடுவாராமில்லே...இவரு பூட்டா இங்க நாம்ப மாத்திரம் குந்திக்கினு இருக்கணுமோ... காலங் காத்தாலே வாயில வர்ற வாக்குப் பாரேன்" அவள் சட்டென்று முந்தானையால் முகம் துடைத்தாள்.

அவனுக்கு ராத்திரி இன்ஸ்பெக்டரும் ஹரியும் சொன்ன யோசனை நினைவு வந்தது.

'என்ன முட்டாள்தனம்! இப்பிடி என் கையிலே வளந்துட்டுத் தேம்பிக்கினு இருக்கற ஒரு கொளந்தையை....' அவன் மனசில் தோன்றிய அந்த எண்ணத்தின் மேல் ஒரு குறி போட்டுத் துரத்தினான். அவன் கையிலிருந்த காலி கிளாஸை ஜெயா வாங்கிக் கொண்டாள்.

"சரி... போயி சக்கரை வாங்கியாறேன்."

கூரை ஓரமாக நிறுத்தியிருந்த சைக்கிளை எடுத்தான் காசி. ஜெயா உள்ளே போய்ப் பெரிய பை ஒன்றும் வெள்ளையும் அழுக்குமாக ரூபாய் நோட்டுக்களையும் கொண்டு வந்தாள்.

"ஐம்பது ரூபா இது. ரெண்டு கிலோ டீப் பொட்டலம். ரெண்டு கிலோ சக்கரை"

காசி சைக்கிளை மிதித்தான். ஜங்ஷனையும் எக்ஞு மேம்பாலத்தையும் கடந்து பிளாட்பாரங்கள் முடிந்த ஜங்ஷன் கோடியில் ரயில்வே லைனுக்கு அருகில் இறங்கினான்.

வரிசையாக நட்டு வைத்திருந்த ஃபென்சிங் இரும்புக் கூடுகளில் நாலைந்தை எடுத்து விட்டு லைனைக் கடக்க ஒரு வழி செய்திருந்தார்கள். சைக்கிளை அதன் மீது தள்ளிக் கொண்டே கடந்தான்.

"எங்க காலேலே கௌம்பிட்டீங்க?"

கீழே குனிந்தவனை அந்தக் குரல் உசுப்பிற்று. நிமிர்ந்தால் எஸ்தர்.

கையில் ஒரு லேடீஸ் சைக்கிளுடன் நின்றிருந்தாள். அவனுக்கு பாக்சிங் கற்றுக் கொடுத்த ஆங்கிலோ இந்தியன் ராபர்ட்ஸ் வீட்டிற்கு வெளியே வைத்திருக்கும் பூந்தொட்டி ஞாபகம் வந்தது. அது ரோஜாத் தொட்டி. உள்ளங்கை அகலத்துக்குப் பெரிசாய்த் தினமும் நாலைந்து பூப் பூக்கும். பனி கோத்து மனசு விரியச் சிரித்தவாறே மலர்ந்திருப்பது போலத் தோன்றும்.

காலையில் லேசான குளிர் காற்றில் முகம் கழுவிப் பவுடருடன் ஒரு புன்னகையோடு நிற்கும் எஸ்தரைப் பார்த்ததும் அந்த ரோஜாக்கள் ஞாபகம் வந்தது.

"பார்சல் பேட்டைக்கு.... நீங்க?"

"சைக்கிள் கத்துக்கறேன்." அவள் முறுவலித்தாள். (தொடரும்)



அறியாத பேரறிஞர்

பன்னிரண்டாண்டுகளுக்கு முன் பேராசிரியர் டி. எம். பி. மகாதேவனின் மணிவிழாவுக்கு ஏற்பாடு செய்தவர்கள் அதற்கு காஞ்சி பரமாசாரியர்களின் ஆசி பெறச் சென்றனர். ஆசாரியர்கள் மணலில் MAHADEVAN என்று எழுதி அதைக் கடைசி எழுத்திலிருந்து திருப்பிப் படிக்கச் சொல்லி ஜாடை காட்டினார்கள். அவ்வாறே NAVEDAHAM என்று படித்த அவர்களுக்கு முதலில் அதன் பொருள் என்னவென்று புரியவில்லை. NA வை அடுத்துச் சற்று நிறுத்துமாறு ஆசார்யார்கள் மீண்டும் சைகை செய்தார்கள். அப்படியே NA VEDAHAM என்று படித்த அவர்களுக்கு அவர்கள் தத்துவ சாஸ்திரத்தில் தேர்ந்தவர்களாதலால் அர்த்தம் தெரிந்து விட்டது. 'ஆஹா, பரமாசாரியாரிடமே இத்தகு பாராட்டு மொழி பெற்ற மெய்ஞ்ஞானியா நமது பேராசிரியர்?' என்று பேருவகை உற்றனர்.

NA VEDAHAM "ந வேதாஹம்" என்றால் "நான் அறியவில்லை" என்று பொருள். பிரம்மத்தை அறிய வேண்டுமாயின் அதனுடனேயே ஒன்றி அதுவாகவே ஆகிவிட வேண்டும். ஆனால் இப்படி அநுபவத்தால் அறிந்த நிலையிலுள்ள பிரம்ம ஞானிக்குத் தனியாக ஓர் அறிவோ, அநுபவத்தைச் சொல்லும் வாக்கோ இராது. எனவே கேநோபநிஷத்தில், "எவன் பிரம்மத்தை அறிந்தேன் என்கிறானோ, அவன் அறியவில்லை. எவன் அறியவில்லை என்கிறானோ அவனே அறிந்தவன்" என்று கூறியிருக்கிறது. இதன்படி "அறியாதவராக" இருந்த மெய்ஞ்ஞானியே டி. எம். பி. என்பதைத்தான் ஸ்ரீ பெரியவர்கள் வெகு அழகாகக் குறிப்பால் உணர்த்தி விட்டார்கள்.

"ஹஸ்தினி"



CASBS-112-203 TAM

அதிர்ஷ்டம்





- '"அதி ஷ்டத்திற்காகக் க ருதிருப்பதும் சாவுக் கா கக் காத்திருப்பதும் ஒன்றே."'

—ஜப்பான்

- அதிர்ஷ்டம் அந்தஸ்தைக் கொண்டு வருவது இயல்பு; ஆனால் அந்தஸ்து அதிர்ஷ்டத்தைக் கொண்டு வருவதில்லை.

-சாமர்செட் மாம்

- 'ஏழைமையும் அதிர்ஷ்டமும் எட்டியே நிற்கும்.'

—ஜெர்மனி

- 'அதிர்ஷ்டம் தராததை எல்லாம் திருப்தியிடமிருந்து பெற்றுக் கொள்வோம்.'

—அமெரிக்கா

- 'அதிர்ஷ்டம் எப்போதும் சுறுசுறுப்பைத் தொடர்ந்து சென்று கொண்டிருக்கும்.'

—கோல்ட் ஸ்மித்.

தொகுப்பு: ஆர். ராதிகா பொன்னு
பி. எஸ். சி. 3'—ம் ஆண்டு வேதியியல்.
புனித சிலுவைக் கல்லூரி,
நாகர்கோவில்—2.

உலகில் வெளிவரும் அறிவியல் துறை ஆராய்ச்சிக் கட்டுரைகளில் எட்டில் ஒன்று இந்தியர் எழுதியதாகும்...

இரா. விச்சன்.
2ம் ஆண்டு பி.ஏ. (வரலாறு)
அரசினர் கலைக்கல்லூரி சேலம்



மாணவர் பக்கங்கள்

புதுக்கவிதை அகராதி

நிம்மதி:

பல நேரங்களில்
பற்றுக் குறையின்
காரணமாக
மனகடையில்
கிடைக்காத
உயர்தர சரக்கு.

வாழ்க்கை:

உலகசாலையில்
உயிர்ச்சக்கரத்துடன்
ஓடிக்கொண்டிருக்கும்
அச்சாணி இல்லா
வண்டி.

விதி:

தன்னை வெல்ல
யாருமில்லையென்று
தலைகனத்தில்
வேண்டுமென்றே
பலரை
விளையாட அழைக்கும்
சதி ஆட்டக்காரன்.

இடி:

வான இயக்குனரின்
மழைப் படப்பிடிப்பில்
மேக நாயகனும்
மின்னல் வில்லனும்
மோதும்
சண்டைக்காட்சி.

உணவு:

வயிற்று அலுவலகத்தில்
வேலை பார்க்கும்
நரம்பு ஊழியர்களுக்கு
கொடுக்கப்படும்
சம்பளம்.

மரணம்:

எமதர்மனின்
சுதந்திர ஆட்சியில்
இலவசமாகக் கிடைக்கும்
நிரந்தர பதவி.

வி. தட்சிணாமூர்த்தி
பி. ஏ. (பொருளாதாரம்)
முதலாண்டு, தாகூர் கலைக்கல்லூரி.
புதுவை—605 008.









முன்னேற்றக் கல்வியின் முக்கியத்துவம்

உலகில் உள்ள நாடுகளை 1) முன்னேற்றம் அடைந்த நாடுகள் 2) முன்னேற்றம் அடைந்து வருகிற நாடுகள் என்று இரண்டாகப் பிரிக்கலாம்.

பல்வேறு துறைகளிலும் குறிப்பாகத் தொழில் துறையில் தன்னிறைவு பெற்றுத் திகழும் நாடுகளை முன்னேற்றம் அடைந்த நாடுகள் என்று அழைக்கிறோம். அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் ஜப்பான் போன்ற நாடுகளை இந்த வரிசையில் சேர்க்கலாம்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் முழுமை பெறாமல், வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தைச் சார்ந்து இருக்கும் நாடுகளை முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகள் என்று அழைக்கிறோம். 'மூன்றாவது உலக நாடுகள்' என்று அழைக்கப்படும் இந்த நாடுகள் பொதுவாக ஏழை நாடுகளாகவே உள்ளன. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் இலங்கை போன்ற நாடுகள் இந்த வகையைச் சார்ந்தவை.

முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளில் முன்னேற்ற முயற்சிகள் ஒருமுகப் படுத்தப்படாதது பெருங் குறையாகும். இதைப் போக்க முன்னேற்றக் கல்வி அவசியம். முன்னேற்றக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இந்தியாவிலேயே முதன்முதலாக 1982–1983 கல்வியாண்டிலிருந்து முன்னேற்றக் கல்வியைத் தொடங்கியுள்ளது. இந்தக் கல்வியைத் தொடங்க வித்திட்டவர் ஷேரி ஜாகப் ஆவார். இதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் துணைவேந்தர் திரு. சிட்டிபாபு, டாக்டர் கோமதிநாயகம், டாக்டர் பாஸ்கரன் இன்னும் பலர்.

முன்னேற்றக் கல்வியின் நோக்கம்

ஒரு குறிப்பிட்ட துறையில் வளர்ச்சி அடைந்தால் மட்டும் ஒரு நாடு முன்னேறிவிட முடியாது. எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டும். அது மட்டுமல்லாமல் அந்த முன்னேற்றங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டுச் செவ்விய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கு வழிவகை செய்வதே முன்னேற்றக் கல்வியின் நோக்கம்.

முன்னேற்றக் கல்வியைப் பயிலும் மாணவன் எல்லாத் துறைகளையும் கற்று நாட்டின் பன்முக முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவான்.

முன்னேற்றக் கல்வியில் அடங்கிய பாடங்கள்

முன்னேற்றக் கல்வியில் பொருளாதாரம், அரசியல், சமூகவியல் மனோதத்துவம், உளவியல், ஆராய்ச்சி முறையியல், புள்ளியியல், கம்ப்யூட்டர் விஞ்ஞானம், தொகுப்புப் பணி (பிராஜெக்ட் ஒர்க்) போன்றவை காணலாம். இப்பாடங்கள் அனைத்தையும் கற்று உணர்ந்தால்தான் ஒருநாட்டின் முழு முன்னேற்றத்திற்கான வழிமுறைகளை வகுக்க முடியும். எனவே நமது நாடு முன்னேற்றம் அடைய இப்பட்டதாரிகளைத் திறம்படப் பயன்படுத்திக் கொண்டால் சிறந்த கிரியா ஊக்கிகளாகச் செயல்படுவர்.

'ஸ்டூடண்ட்' சந்திரசேகரன்.
எம். ஏ. இரண்டாம் ஆண்டு
முன்னேற்றக் கல்வி,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.



''நம்முடைய மானேஜர் இன்று நான் டைப் செய்த லெட்டரைப் பார்த்து, ஆனந்தக் கண்ணீர் வடிச்சாரு''.


''எதற்கு?''


''இன்றுதான் அவர் வாழ்க்கையிலே பிழையேயில்லாத லெட்டரைப் பார்த்திருக்கிறாராம்.''

எஸ். சாகுல் ஹமீது.
பி. காம்., இரண்டாம் ஆண்டு,
எம். எஸ். எஸ். வக்பு வாரியக் கல்லூரி
மதுரை–625 020.



குதிரை மிரளத் தடைச் சட்டம்!






மிரள மிரள..
மேலும் மேலும்
தடைச்
சட்டங்கள்!
ஹச்சு! ஹாச்!
''அம்மாதுக்கும் ஒரு தடைச் சட்டம் போடக் கூடாதா?''
''கொட்டாவி விடத் தடைச் சட்டம் கொண்டுவந்து, அரசு சோம்பலையே ஒழித்துக்கட்டி....''
ஹாவ்
ஹாவ்.. ஹாவ்.. ஹாவ்..
ஹாவ்
''இவ்வளவு தடைச் சட்ட மசோதாக்களை விவாதிக்கும்போது இப்படி ஒலிக்கும் குறட்டை ஒலிக்கும் தடைச் சட்டம் கொண்டு வர வேண்டும்.''
சபாநாயகர் : அங்கத்தினர் சொல்வது குறட்டை ஒலியில் காதில் விழவில்லை.
எச்சரிக்கை!
மளிகைக்கடை, ஹோட்டல்களில் இருக்கும் விலைப் பட்டியல்களைக் கண்டு மிரளக் கூடாது!
அரசு உத்தரவு!
ரீபா ஹோட்டல்
''நல்ல காலம், வாலிபர்கள் மிரளத்தான் தடைச் சட்டம். நாம தப்பிச்சோம்! மிரளலாம்... ரசிக்கலாம்!''

இது ஒரு கொஞ்ச காலம்

மர்ம நாவல்



ரஸ்மி - பஷாஜா

1

வளர்ந்துவிட்ட நகரத்தின் பாஷ் ஏரியா.

சாலையுடன் சின்னதாய்க் கோபித்துக் கொண்டு உள்ளுக்குள் விலகி அமைந்திருந்த அந்தப் பங்களா. உள்ளே-

மாலைக் குளியலின் சுகத்தை லலிதா அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

ஷவரிலிருந்து வெள்ளிக் கோடுகளாக இறங்கிய நீர்க் கற்றைகள் அவள் உடலின் வளைவு நெளிவுகளில் வளர்ந்துகொண்டிருக்க...

லலிதாவினுள் ஒரு வித எதிர்பார்ப்பு பொரிந்து கொண்டிருந்தது.

அடுத்த சில மணி நேரங்கள் அவள் வாழ்க்கையில் மிக முக்கியமான நேரம்.

அந்தச் சில மணி நேரத்துக்காக அவள் வெகுவாகக் காத்திருந்தாள்.

குளியலை முடித்து டவலைப் போர்த்திக் கொண்டு பெட்ரூம் நோக்கி நடந்தாள்.

காலின் வழியாக வடிந்த நீர் தரையில் அவளின் தடங்களைப் பதித்தது. கண்ணாடி முன்னால் நின்றாள்.

வெளிச்சத்துக்காகக் காத்திருந்தது போல் சில அழகுகள் மினுமினுத்தன.

லலிதாவுக்கே பிரமிப்பு.

36 24 36

தன் அழகைத் தானே ரசித்

துப் பெருமிதம் கொண்டாள். சாவகாசமாகப் பாவாடை பிரா ஜாக்கெட், சேலை இவற்றைத் தனது மேனியில் அனுமதித்தாள்

இன்டிமேட்டை முக்கியமான இடங்களில் 'புஷ்', 'புஷ்' என்று உசுப்பி அமைதிப்படுத்தினள்.

தலை முடியைப் பிரஷ் செய்து கொண்டே மாடி வராந்தாவில் உலாத்த ஆரம்பித்த போது, நகரம் இரவுப் போர்வைக்குள் நழுவிக் கொண்டிருந்தது.

அடுத்த சில மணி நேரத்தில் நடக்கப் போவதைப் பற்றி எழுந்த நினைப்பு, அவளின் மகிழ்ச்சியை உலுக்கி உசுப்பி விழிப்பாக்கியது.

அவன் அந்தப் பங்களாவை நெருங்கிய போது மணி பத்தரை.

அதுதான் நிச்சயிக்கப்பட்ட நேரம்.

பிசிறில்லாமல், 'டாண்'ணென்று சரியான நேரத்துக்கு வந்து விட்டான்.



பங்களாவின் முன் என்ஃபீல்டை நிறுத்தி விட்டு, சுற்றுமுற்றும் பார்த்தான்.

அடித்துப் போட்டால் ஏன் என்று கேட்க நாதி இல்லை.

மெல்ல மெல்ல நடந்து பங்களாவை நெருங்கினான்.

கேட்டை விலக்க, விசுக்கென்று திறந்து கொண்டது.

எதிர்பார்த்ததுதான்.

மாடிப் படிகளில் ஏறினான்.

ஒரு நிமிஷம்.

சரியாக அறுபது விநாடிகள்.

அவன் தடதட வென்று இறங்கி வெளியே ஓடினான்.

தலைபோகிற அவசரம் அவனைப் பிடித்திருந்தது.

ஒரே தாவலில் என்ஃபீல்டை உதைத்துக் கிளப்ப,

அவன் முகத்தில் வெளிச்சத்தைப் பீச்சிய படி கார் ஒன்று வந்து கொண்டிருந்தது.

அவன் 'சட்'டென்று குனிந்து என்ஃபீல்டை வளைத்துக் கொண்டு, கார் வந்த எதிர்த் திசையில் பறந்து இருளில் கரைந்தான்.

2

கார், பங்களாவுக்குள் நுழைந்த அரை மணி நேரத்தில்,

'ஙய்' என்று சத்தமிட்டுக் கொண்டு வந்த போலீஸ் வேன் பங்களாவுக்குள் நுழைந்தது.

தொபு தொபுவென்று குதித்த போலீஸ்காரர்களுடன் இன்ஸ்பெக்டர் மோகன் உள்ளே வந்தார்.

வாசலில் ராஜசேகரன் மிரண்டு போய்ப் பீதியில் நனைந்திருந்தார்.

''வாங்க இன்ஸ்பெக்டர்... நல்லவேளை சீக்கிரமா வந்தீங்க... நீங்க வர்ற வரைக்கும் பயந்து செத்துக்கிட்டிருந்தேன். இந்தக் கோரத்தை என்னால் நினைக்கப் பார்க்க முடியலை... என் மகள் லலிதாவை யாரோ கொலை செஞ்சிட்டாங்க....''

ராஜசேகரன் அழுதுகொண்டே சொன்னார்.

''மிஸ்டர் ராஜசேகரன்... கொலை நடந்த அறை எங்கே?''

''மாடியில்... வாங்க போவோம்.''

லலிதாவின் அறை திறந்தே இருந்தது.

லலிதா படுக்கையில் அலங்கோலமாகக் கிடந்தாள்.

இடது மார்புக்குக் கீழ் கத்தி பாய்ந்து... ரத்தம் படுக்கையில் உறைந்திருந்தது. கண்கள் மூடிய நிலையில். நெற்றியில் அடி. பலமான அடியென்று சொல்ல முடியாமல் லேசாக ரத்தம் பிசுபிசுத்திருந்தது. ஷாம்பூ குளியலின் பளபளப்பைக் குறைப்பதாய்ச் சிதறிய ரத்தம் கூந்தலில் படிந்திருந்தது.

ஜாக்கெட் கிழிந்து, முந்தானை நழுவிப் போய்...

விபரீதம் படு பயங்கரமாய் நடத்தி முடிக்கப்பட்டிருந்தது.

கோரக் காட்சியை இன்ஸ்பெக்டர் மோகனால் ஜீரணிக்க முடியவில்லை.

நிச்சயம் கொலைதான். கோரமாய்ச் செய்திருக்கிறார்கள். கற்பழிப்புக்கூட சம்பவித்திருக்கலாம்... கத்தியைக் காணவில்லையே, கொலை செய்தவன் எடுத்துப் போயிருப்பானோ?

இன்ஸ்பெக்டர் யூகித்துக் கொண்டே,

''ஐ ஆம் ஸாரி, மிஸ்டர் ராஜசேகர்! இந்த நிலையில் உங்களுக்குத் தொந்தரவு தரக்கூடாதுன்னுதான் நினைக்கிறேன். பட்... டூட்டி கான்ஷியஸ்லே உங்களிடம் சில கேள்விகள் கேட்க வேண்டும்.''

''கேளுங்க சார்.''

''நீங்கள் வீட்டுக்குள் வரும்போது மணி என்ன இருக்கும்?''

''சரியாச் சொல்ல முடியாது. பத்து முப்பத்தஞ்சு இருக்கும்.''

''அறையில் ஏதும் தடயங்களே இல்லை. வேறு யாரையாவது பார்த்தீங்களா?''

''இல்லை சார், என் மகளை இந்தக் கோலத்தில் பார்த்ததும் பதறிப்போய் உங்களுக்குப் போன் செய்தேன்.''

''சந்தேகப்படும்படியாக யாரையாவது பார்த்தீங்களா?''

''நான் கார்ல வரும்போது அவசரமா ஒருத்தன் என்ஃபீல்டுலே வேகமாய்ப் போனான். பங்களாவுக்கு முன்னாலேதான் வண்டி நின்றிருந்தது.''

''வண்டி நம்பரை நோட் செய்தீங்களா?''

''எம். எக்ஸ். எக்ஸ். 3441.''

''ஆமாம்... இத்தனை பெரிய பங்களாவிலே வேலைக்காரங்க யாருமே இல்லையா? ஆச்சரியமா யிருக்கே... யாரையுமே காணோமே....''

''ஒன்றுக்கு ரெண்டு வேலைக்காரங்க இருக்காங்க... புருஷன் பெண்சாதி. வெளியே கூர்க்கா வேறே காவலுக்கு இருப்பான். ஒருத்தரையும் காணலே. ஒன்றுமே புரிய மாட்டேங்குது. எங்கே தொலைஞ்சு போனாங்களோ தெரியலே. அவங்க இருந்திருந்தா இந்த அநியாயம் நடந்திருக்காது....''

ராஜசேகரன் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

மோகனுக்குப் பரிதாபமாக இருந்தது.

''சரி...அவங்க வந்ததுக்கப்புறம் விசாரிக்கலாம். இது கொலையாக இருக்கிறதாலே க்ரைம் பிராஞ்ச் எடுத்துப்பாங்க. இன்ஸ்



கடைக்காரர்: ''டாக்ஸி டிரைவரா இருந்தவனை ஜவுளிக் கடையில் வைத்தது தப்பாப் போச்சு...!''

மற்றவர்: ''ஏன்...?''

கடைக்காரர்: ''துணி எடுக்க வருபவர்களிடம் மீட்டருக்கு மேல் எவ்வளவு தருவீங்க'ன்னு கேட்கிறான்...!''

-ஆர். சுப்பு.

பெக்டர் அருண் கெட்டிக்காரர். கொலைகாரனைக் கட்டாயம் கண்டு பிடிச்சிடுவார். கவலைப்படாதீங்க. நடந்தது நடந்துபோச்சு. மனசைத் தேத்திக்குங்க....''

இன்ஸ்பெக்டர் மோகன் ஜீப்பில் ஏறினார்.

3

மறுநாள் காலை.

ராஜசேகரன் முந்தைய நாள் தூக்கம் வராமல் வெகு நேரம் விழித்துக்கொண்டிருந்ததினால் அதிகாலையில் தூக்கம் அவரை இறுக்கமாய்ப் பிடித்திருந்தது.

இன்ஸ்பெக்டர் அருண், மோகன், ஃபோரன்ஸிக், கை ரேகை நிபுணர்களுடன் வந்தார்கள்.

வேலைக்காரன் ராஜசேகரனை எழுப்பிக் கொண்டு வந்தான்.

இன்ஸ்பெக்டர் அருணை ராஜசேகரனுக்கு மோகன் அறிமுகப்படுத்தினார்.

லலிதாவின் உடலில் 'ரிகர் மார்டிஸ்' நன்றாகவே ஏற்பட்டு, உடல் விரைத்துப் போயிருந்தது.

அதற்குள் கைரேகை ஆள், ஏதும் கிடைக்கிறதாஎன்று ஓர் அங்குலம் விடாமல் வெள்ளை பவுடர் தூவித் தேடினார்.

ஒருவர் அந்த அறையின் அமைப்பை வரைந்துகொள்ள, போட்டோகிராபர் பல கோணங்களில் லலிதாவைப் படம் எடுத்தார்.

''சார் பணப் பெட்டியிலிருந்து பத்தாயிரம் ரூபாய் குறையுது சார். நேத்து சந்தேகத்தில் திறந்து பார்த்தேன்....'' ராஜசேகரன் சொன்னார்.

''அப்படியா... பணப் பெட்டியிலே கை ரேகை ஏதும் இருக்கான்னு பார்த்துக்குங்க நாராயணன்... பணப் பெட்டியிலே பத்தாயிரம்தான் இருந்ததா....''

அருண் கேட்டார்.

''அதுக்கு மேலே இருந்தது. ஆனால் பத்தாயிரம் மட்டும்தான் குறையுது.''

''பணப் பெட்டியின் சாவி யாருகிட்டே இருந்தது?''

''பெங்களூர் போறதுக்கு முன்னாடி லலிதாகிட்டேதான் கொடுத்திட்டுப் போனேன்.''

''வீட்டு வேலைக்காரங்க வந்துட்டாங்க போலிருக்கே... விசாரிக்கலாமா?''

முதலில் வந்தவர்கள் மருதுவும் முத்துவும்.

''இந்த வீட்டிலே எத்தனை வருஷமா வேலை பார்க்கறீங்க?''

''ஏழு வருஷமா எஜமான்.''

''நேத்து எங்கே போயிருந்தீங்க... வீட்டிலே காணலியே....''

''எங்கக்கா வீடு வரை போய் வர போன வாரத்திலே லலிதாம்மா கிட்டே கேட்டிருந்தேன். நேத்து சாயந்திரம் எங்களைக் கூப்பிட்டு 'அக்கா வீடு போய் வாங்க'ன்னு சொல்லி அனுப்பி வச்சாங்க.... இப்படியெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சா பாவி மக போயிருக்க மாட்டேன்....''

''அம்மாதான் போகச் சொன்னாங்களா.. இல்லே வேறு யாரும் பணம் கொடுத்துப் போகச் சொன்னாங்களா?''

''லலிதாம்மாவுக்கும் எங்க எஜமானுக்கும் எங்க தோலைச் செருப்பாத் தைச்சுப் போட்டாலும் போடுவமே தவிர அவங்களுக்குத் துரோகம் செய்ய மாட்டோமுங்க... அம்மா சொல்லித்தான் நானும் முத்துவும் போனோம்... எங்களைப் போகச் சொன்னப்போ சிரிச்சுக்கிட்டே அஞ்சு ரூபா கொடுத்துக் குழந்தைகளுக்கு ஏதாச்சும் வாங்கிட்டுப் போன்னு சொன்னாங்களே. அவங்களுக்கா துரோகம் செய்வோம்....''

அடுத்து கூர்க்கா சுபான்.

இன்ஸ்பெக்டர் அருண் அவனை நெருங்கு முன்பே கண்களிலிருந்து நீரை வடிய விட்டுக் கொண்டே தழுதழுத்த குரலில் ஆரம்பித்தான்.

''சாப் நேத்துச் சாயந்திரம் அஞ்சு மணிக்கு என்னைக் கூப்பிட்டுச் சில புஸ்தகங்களை வாங்க லிஸ்ட் கொடுத்தாங்க. அதை வாங்கிக்கிட்டு அமிதாப் படத்தையும் பார்த்திட்டு வரச் சொன்னாங்க. 'புதுப் படம் டிக்கட் கிடைக்காதே'ன்னேன்.. 'பரவாயில்லே. முதல்லே புஸ்தகங்களை வாங்கிட்டு நைட் ஷோ பார்த்துட்டு வா' அவசரமில்லேன்னாங்க.... துணைக்கு யாருமில்லையேன்னேன். மருது முத்து இருக்காங்கன்னு சொன்னாங்க. நான் புஸ்தகம் வாங்கிவிட்டு நைட் ஷோ பார்த்துவிட்டு வர்றதும் தான் இங்கே என்ன நடந்ததுன்னு தெரியும்.''

''கூர்க்கா போனது உங்களுக்குத் தெரியுமா?''

அருண் மருது முத்துவிடம் கேட்டார்.

''நாங்க போகும்போது, 'அம்மா, கூர்க்கா இல்லையே.... வேணும்னா நாங்க நாளைக்குப் போறோம்'னு சொன்னோம்.. அதுக்குக் கூர்க்கா புஸ்தகம் வாங்கிட்டு உடனே வந்துடுவான். நீங்க போங்கன்னு சொல்லி அனுப்பி வைச்சாங்க...''

''சரி, நீங்கள்ளாம் போகலாம்''

அவர்கள் நகர்ந்தார்கள்.

''மிஸ்டர், ராஜசேகரன், நேத்து ஈவினிங் லலிதா தனியே இருந்திருக்காங்க. அதாவது அவங்களே கூர்க்கா மருது, முத்து இவங்களை வெளியே அனுப்பிச்சுட்டு வீட்டிலே தனியா இருக்க விரும்பியிருக்காங்க. நேற்று ராத்திரி ஏதோ நடக்கப் போவது லலிதாவுக்குத் தெரிஞ்சிருக்கு. அது வேலைக்காரங்களுக்குத் தெரியக் கூடாதுன்னு அவங்களைப் பக்குவமா அப்புறப்படுத்தியிருக்காங்க. முக்கியமா, ரகசியமா, ஏதாச்சும் இருக்கணும். அந்த ரகசியத்தைத் தெரிஞ்சவன் யார்? நிச்சயம் தான் கொலை செய்யப்படுவோம்னு லலிதாவுக்குத் தெரிஞ்சிருக்காது. அப்படித் தெரிஞ்சிருந்தா தனியா இருந்திருக்க மாட்டாங்க.... உங்க பூரண ஒத்துழைப்பை நான் எதிர் பார்க்கிறேன். இங்கே வேறு யாராவது வசிக்கிறாங்களா?''

''என் தங்கை மகன் ரவீந்தர் இங்கேதான் தங்கி எனக்கு பிசினஸ்லே உதவியா இருக்கான். நான் பெங்களூர் போன அன்னைக்குத்தான் பிசினஸ் விஷயமா கொச்சி போனான். இன்னும் வரலே.''

''ரவீந்தர் மேலே உங்களுக்குச் சந்தேகம் உண்டா?''

''சேச்சே... சந்தேகம் இல்லே. அவனுக்கு லலிதாவைக் கொடுக்கணும்னு நினைச்சிருந்தேன். அவனுக்குக் கொடுத்து வைக்கல.... என்ன செய்யறது. என்னிடம் விசுவாசமா நடந்துக்கறான். லலிதாவும் அவனோடு நல்லாப் பழகுவா. எனக்குச் சந்தேகம் எல்லாம் அந்த பைக்கில் வந்தவன் மேல்தான் சார்.''

''வண்டியின் நம்பர் என்ன?''

ராஜசேகரன் சொன்னார்.

''மிஸ்டர் மோகன், பாடியை ஆடோப்ஸி அனுப்ப ஏற்பாடு செய்யுங்க. ரிப்போர்ட் நாளைக்குக் காலை கிடைக்கணும். இன்றைக்கே கிடைத்தால் ரொம்ப சௌகரியமாக இருக்கும். கைரேகை பிரிண்டையும் சீக்கிரம் போடச் சொல்லுங்க. நான் அந்த பைக் ஆளைப் பிடிக்கிறேன்.''

அருண் கிளம்பினார்.

4

ஆர்.டி. ஆபீஸில் 'பைக்'கின் நம்பரைச் சொல்லி, தான் யாரென்று அடையாளக் கார்டைக் காட்டி, அருணுக்குக் கிடைத்தது வண்டியின் உரிமையாளரின் பெயர், முகவரி.

அருண் பறந்தார்.

நடுத்தரக் குடும்பத்தினர் வசிக்கிறார்கள் என்பதற்குச் சாட்சி சொல்லிக் கொண்டு மாடியில்லாத வீடுகள் வரிசையாக இருந்தன.

வீட்டு எண்ணைத் தேடி அருண் பைக்கை அமைதிப் படுத்திக் கொண்டே சென்றார்.

கிடைத்த விலாசத்துடன் ஒப்பிட்டுப்பார்த்துச் சரியான வீடு வந்ததும் அருண் இறங்கினார்.

'கொலை செய்துவிட்டு ஒருவன் இத்தனை எளிதாக அகப்படுவானா?' என்று நினைத்துக் கொண்டு வீட்டுப் படியில் காலை எடுத்து வைக்கு முன் 'கிருஷ்ணன்' என்ற பெயர்ப் பலகையும், கேட் கதவுகளைச் சேர்த்துப் பிடித்து நிற்கும் பூட்டும் வரவேற்றன.

'கொலை செய்து விட்டுத் தப்பி ஓடி விட்டான் போலிருக்கிறது.'

அருணுக்கு சுவாரஸ்யம் தட்டியது.

பக்கத்து வீட்டில் விசாரித்தார்.

''ஆமாம்... கிருஷ்ணன் இங்கேதான் இருக்கார். தனியார் கம்பெனியிலே வேலை. கல்யாணம் ஆனவர். குழந்தை இல்லே. அவரிடம் என்பீல்ட் இருக்கிறது. ம்....வண்டியின் நம்பர்... ம்ம்.... நம்பர்... பார்த்தீங்களா... இத்தனை வருஷம் பழகியிருக்கோம். நம்பரைச் சரியாப் பார்த்து வைக்கலீங்களே....'' என்று அவர்களாகவே ஆச்சரியப்பட்டுக் கொண்டார்கள்.

''சரி, கிருஷ்ணன் எங்கே?''

''மனைவியுடன் ஊருக்குப் போயிருக்கார் சார்.''

''ஊருக்குன்னு எங்கே....?''

''மதுரைக்கு... நான் கூடத் திருநெல்வேலி அல்வா வாங்கி வரச் சொல்லியிருக்கேன்.''

''போய் எத்தனை நாளாச்சு?''

''ஒரு வாரம் ஆகுது.''

''வண்டி எங்கே?''

''ஊருக்குப் போனா வீட்டு வராந்தாவிலே தான் வச்சுட்டுப் போவார்.. கேட் கதவு கிட்டே நின்னு பார்த்தாத் தெரியும்.''

''சரி, பார்க்கிறேன்.''

அருண், அவர்களிடமிருந்து கழன்றுகொண்டு கிருஷ்ணன் வீட்டுக் கேட்டில் நின்று எட்டிப் பார்க்க, அங்கே பைக் இல்லை.

'கிருஷ்ணன் ஊருக்குப் போய் ஒரு வாரம் ஆகிறது. அப்படி யென்றால் பைக்கில் நேற்று இரவு லலிதா வீட்டுக்கு வந்தவன் யார்? அவன் இந்த வண்டியை எப்படித் தேர்ந்தெடுத்தான்? 'பைக்' அவன் கைக்குப் போனது கிருஷ்ணனுக்குத் தெரியுமா? இந்த வீட்டிலிருந்து எப்படிக்கொண்டு போனான்? திருடிக் கொண்டு போயிருப்பானோ... எப்படியிருந்தாலும் அவன் எங்கே போயிடுவான்...'

அருண் யோசித்தார்.

நகரத்தைச் சல்லடை போட வேண்டியது தான்.

நகரத்தின் அத்தனை போலீஸ் நிலையங்களுக்கும் செய்தி அனுப்பினார்.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு வந்த செய்தி அருணுக்கு மூர்ச்சை வரவழைத்தது.

அண்ணா நகருக்கருகில் அந்த 'பைக்' போய்க் கொண்டிருப்பதாகவும், தொடர்ந்து போலீஸ் கண்காணிப்பதாகவும் வந்த செய்தி கேட்டுத் துள்ளிக் குதித்து அண்ணாநகர் நோக்கி அருண் அம்பாய்ப் பறந்தார்.

5

வயர்லெஸ்செய்தியைக் கேட்டுக்கொண்டு அண்ணாநகரை நெருங்க, முதல் கிராஸில் நின்றுகொண்டிருந்த போலீஸின் கையசைப்பில் நின்றார். சூடாக சல்யூட் அடித்துவிட்டு, ''இப்படியே போனால் வலது பக்கம் நாலாவது வீடு சார்... ஆள் இப்பத்தான் உள்ளே போயிருக்கிறார்'' என்றார் போலீஸ்.

''சரி, நான்போய் ஆளை விசாரிக்கிறேன்.''

அருண் அந்த வீட்டின் முன் வண்டியை நிறுத்திவிட்டு, கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே போக, தேடிய பைக் நின்றது.

காலிங் பெல்லை அழுத்த, பேண்டில் 'ஜிப்' அவிழ்ந்திருக்கும் நிலையில் அவன் வெளியே வந்தான்.

அருணைப் பார்த்ததும் அவசரமாகக் கை ஜிப்பில் பதிந்து மேலே இழுத்துவிட்டது.

அருண் அவனைக் கண்களால் அளந்தார்.

ஆறடி உயரமிருக்கும்.

முப்பத்தெட்டு அங்குல மார்பில் முகாமிட்டிருக்கும் ரோமக் கட்டு, கவர்ச்சியைக் கூட்டியிருந்தது.

''ஐ ஆம் அருண், க்ரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர்.''

அவன் மிரளுவான் என்று எதிர்பார்த்து அருண் ஏமாந்தார்.

புன்னகையை வரவழைத்துக் கொண்டு, ''நான் ரமேஷ். நைஸ் டு மீட் யூ... ப்ளீஸ் கம் இன்'' என்று வரவேற்றான்.

சோபாவில் அருண் புகைந்து கொள்ள, பார்வை அறையைத் துளாவியது.

பெண்ணின் நிர்வாணச் சிலே, அகாய் ஸ்டீரியோ, நஸியா ஹஸன் ப்ளோ அப்கள்...

''மிஸ்டர் ரமேஷ்... இன்றைய பேப்பர் வாசிச்சீங்களா.''

''வாசிடசேனே...'

''உங்களைப் பாதிக்கும்வகையில் ஒரு செய்தி வந்திருக்கே... அதைப் படிச்சீங்களா?'

''இன்ஸ்பெக்டர் வாட் ஆர் யூ மீன்:''

''லலிதா இளம் பெண் கொலைச் செய்தியைச் சொல்றேன்....''

''ஓ. அந்தச் செய்தியா.. அதான் தினமும் கொலை நடக்குதே பார்த்தீங்களா இன்ஸ்பெக்டர். நாட்டிலே லா அண்ட் ஆர்டர் கெட்டுப் போச்சு... புவர் கேர்ள். ஆமா, அந்தச் செய்தி என்னே எந்த விதத்தில் பாதிக்கும்னு முடிவு செஞ்சீங்க....?''

''சரி, இந்த பைக் கிருஷ்ணன் என்பவருடையது இல்லையா... உங்களிடம் எப்படி வந்தது?''

''கிருஷ்ணன் என் நண்பன் சார். ஊருக்குப் போயிருக்கான். வண்டியை என்னிடம் தந்து விட்டுப் போயிருக்கிறான்.''

''அவர் பைக்கை லலிதா பங்களாவுக்குப் போகப் பயன்படுத்தியிருக்கீங்க...''

''இன்ஸ்பெக்டர், எனக்கு லலிதாவைத் தெரியாது. அவ பங்களா எங்கே இருக்கு என்பதும் தெரியாது.''

''நோ ரமேஷ். நேத்து பங்களாவுக்குள் போயிருக்கீங்க... லலிதாவைக் கற்பழிச்சிட்டுக் கொலையும் செஞ்சிருக்கீங்க... கை ரேகை, தடயங்கள் கிடைச்சிருக்கு. நிச்சயம் உங்களுடையதாகத்தான் இருக்கும். இப்பொழுது உண்மையை ஒத்துக்கப் போறீங்களா? லாக் அப்பில் தள்ளட்டுமா... ஜீப் கொண்டு வரச் சொல்லித் தகவல் கொடுக்கிறேன்.''

அருண் அவசரமாக எழுந்து போக,

ரமேஷின் கமுகமுத்த குரல் அவரை நிற்க வைத்தது. ''சார்... நான் எல்லா உண்மையையும் சொல்லிடறேன்.''

6

''சார்! நான் நேற்று லலிதா பங்களாவுக்குப் போனது உண்மைதான். ஆனால் லலிதாவை நான் கொலை செய்யல்லே. நான் போனபோது லலிதா கொலை செய்யப்பட்டுச் செத்துக் கிடந்தாள். அந்தக் கோரக் காட்சியைப் பார்த்த அதிர்ச்சியில் ஓடி வந்துவிட்டேன்.''

''மிஸ்டர் ரமேஷ், முதல்லே லலிதா பங்களாவுக்குப் போகவே இல்லேன்னு சாதிச்சீங்க... இப்போ போனதா சொல்றீங்க... இன்னும் கொஞ்ச நேரம் போனா கொலே செய்ததையும் ஒத்துக்கொள்வீங்க. இல்லையா?''

''நானும் லலிதாவும் ஒருத்தரை ஒருத்தர் மனதாரக் காதலித்தோம். காதலை அவசரப்பட்டு யாரிடமும் சொல்லாமல் ரகசியமாய் வைத்துக் கொண்டோம். நான் ஸ்ரீராம் அம்சானிபேட்ஸில் பிராஞ்சு மானேஜராக இருக்கேன். போன வாரம் ஆபீஸ் பணத்தைப் பாங்கில் அடைக்கப் போனேன். போகிற வழியில் லலிதாவைப் பார்த்தேன். ஹோட்டலில் டிபன் சாப்பிட்டோம் லலிதா ஷாப்பிங் வந்திருந்தாள். அவளோடு அரை மணி நேரம் சில கடைகள் ஏறி இறங்கிவிட்டு நேரே பாங்கிற்குச் சென்றேன். அங்கு பணம் அடைக்கும்போதுதான் 'மொத்தத் தொகையில் இருபதாயிரம் ரூபாய் குறைந்தது தெரிந்தது. நானும் லலிதாவும் போன ஹோட்டல், கடைகளில் எல்லாம் விசாரித்துப் பார்த்தேன். எல்லோரும் பார்க்கவில்லே என்று கையை விரித்தார்கள். ஆடிட்டிங் இந்த வாரம் நடக்க இருப்பதால் எப்படியும் ஆடிட்டிங்குக்கு முன் பணத்தை அடைத்து விட வேண்டும் என்று எனது ஸ்கூட்டரை விற்று, சேமிப்புப் பணத்தைச் சேர்த்தாலும் பத்தாயிரம்தான் தேறியது. விஷயம் தெரிந்ததும் லலிதாதான் அந்த யோசனையைச் சொன்னாள்!''

''லலிதா, நீ சொல்றது சரிதான். ஆனால் பயமா இருக்கு.''

''என்ன பயம்? நீங்க சரியா ராத்திரி பத்தரை மணிக்கு வர்றீங்க... நான் பணத்தோடு ரெடியா இருக்கேன். வாங்கிட்டுப் போயிடுங்க....''

''வேலைக்காரங்க இருப்பாங்களே....''

''அவங்களை நான் பக்குவமா வெளியேத்திடறேன்.... அப்பா இன்னைக்குப் பெங்களூர் போறாங்க... வர எப்படியும் ஒரு வாரமாகும். ரவீந்தரும் அநேகமா கொச்சிக்குப் போவான்...''

''அப்படின்னு பணத்தை வாங்கப் பகல் நேரத்திலே வர்றேனே...''

''ரமேஷ்... பத்தாயிரம்னு சும்மாவா... நீங்க வர்றதை யாராவதும் பார்த்தா... என் சேவிங்ஸ்லே ஆயிரம்தான் இருக்கு. பணத்தை அப்பா பெட்டியிலிருந்துதான் எடுக்கப் போறேன்....''

''தப்பில்லயா?''

''நுக் ரமேஷ்... ஆடிட்டிங்லே பணம் குறைந்ததைக் கண்டுபிடிச்சட்டாங்கன்னு உங்க வேலே அம்போ. அத்தோட கெட்ட பெயர். அப்புறம் நம்ப காதலும் கருகும்.



நடிகை: ''இந்தத் தீபாவளிக்கு நான் நடித்து ரிலீசாகற படம் நூறு நாள் ஓடும்...!''

நிருபர்: ''நூறு நாள் ஓடும்னு எப்படி உறுதியாச் சொல்றீங்க...?''

நடிகை: ''என்ன சார், படத்தோட பெயருக்குக் கூடவா பொய் சொல்வேன்!''

–பி. வேணுகோபால்.

கல்யாணம் இந்த ஜன்மத்தில் நடக்காது... அதனாலேயே துணிஞ்சு இதைச் செய்யறேன்.''

''அப்பா பணம் குறைவதைக் கண்டு பிடிச்சா....?''

''தனியா வீட்டில் இருக்கும்போது கத்தியைக் காட்டி மிரட்டிப் பணம் கேட்டான். கொடுத்தேன் என்று சொல்வேன்... ஏன் இப்படிப் பயப்படறீங்க... பெண் நான் துணிஞ்சு செய்யறேன். ஆம்பிளை மாதிரி நடந்துக்குங்க.... இன்னைக்கு திங்கட்கிழமை. புதன் கிழமை ராத்திரி பத்தரை மணிக்கு வாங்க... உங்களை எதிர்பார்ப்பேன்.''

''திட்டமிட்டபடி நான் புதன் கிழமை பத்தரை மணிக்குப் பார்த்தபோது, லலிதா பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டிருப்பதைப் பார்த்ததும், பயந்துபோய் ஓடி வந்து விட்டேன். நான் லலிதாவைக் கொலை செய்யலே... என்னை நம்புங்க இன்ஸ்பெக்டர்.''

''சரி, கொலையைச் செய்யலேன்னு வைத்துக்கொள்வோம். ஆனா பத்தாயிரத்தை எடுத்தது நீங்கதானே?''

''லலிதா செத்துக் கிடந்த கோரத்தைப் பார்த்ததும் எனக்கு எதுவுமே தோணலே. எப்படியும் வெளியேறினாப் போதும்னு ஓடி வந்துவிட்டேன்.''

''ரமேஷ், ஆட்டாப்ஸி ரிப்போர்ட் படித்ததும் மறுபடியும் உங்களை காண்டாக்ட் செய்கிறேன். கௌரவமான வேலையிலே நீங்க இருப்பதால் உங்களைக் கைது செய்யலே அதுக்காக உங்களைச் சந்தேகப்படலேன்னு நினைக்காதீங்க... எங்கேயும் ஓடி ஒளிஞ்சிடாதீங்க.... அது உங்களால முடியாது. ஏன்னா... போலீஸ் உங்களை நிழலாகத் தொடர்ந்து கொண்டே இருக்கும்.''

அருண் புறப்பட்டார்.

அலுவலகத்தில் அவர் நுழைந்தபோது ஆச்சரியத்தைத் தர ரவீந்தரும், அதிர்ச்சியைத் தர ஆட்டாப்ஸி ரிப்போர்ட்டும் இருப்பதை அருண் கவனித்தார்.

7

ரவீந்தர், அறிமுகம் செய்துகொண்டான்.

''ஓ... நீங்களா ரவீந்தர்... கொச்சியிலிருந்து எப்ப வந்தீங்க...''

''காலைல வந்தேன் சார்... வந்தவுடனே அதிர்ச்சியான செய்தி கிடைத்தது. லலிதா கொலை செய்யப்பட்டாள்னு என்னால நம்பவே முடியலே. துடிச்சுப் போயிட்டேன். கொலைகாரனைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை நீங்க ஏத்துக்கிட்டிருக்கிறதா சொன்னதும், உங்களைப் பார்க்க வந்தேன். லலிதா எனக்குத்தான் கிடைக்கலே! ரமேஷுக்கும் கிடைக்காமல் போய்விட்டாளே!''

விரக்தியாகப் பேசிய ரவீந்தர் கண்ணீருடன் முடித்தான்.

''டேக் இட் ஈஸி, ரவீந்தர். ஆமா... லலிதா ரமேஷைக் காதலித்தது யாருக்குமே தெரியாதே... உங்களுக்கு எப்படி....?''

''நான் பீச்சுக்கு அடிக்கடி போவேன்... அப்போ ஒரு நாள் தற்செயலாப் பார்த்தேன். அப்புறம்தான் கங்கிராட்ஸ் சொன்னேன். யாரிடமும் சொல்ல வேண்டாம்னு லலிதா கேட்டுக் கொண்டாள். அதனாலே நான் யார் கிட்டேயும், மாமா கிட்டக் கூடச் சொல்லலே....''

''சரி, ரவீந்தர்... கொலைகாரனை எப்படியும் கண்டு பிடிச்சுடலாம்.... நீங்க தைரியமாப் போங்க....''

ரவீந்தர் சென்றதும், ஆட்டாப்ஸி ரிப்போர்ட்டை விரித்தார்.

விரித்ததும் வந்து விழுந்தது அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி.

படித்து முடித்தபோது அருண் வியர்த்திருந்தார்.

மூன்று வருஷ சர்வீஸைக் கேலி செய்வதாக ரிப்போர்ட்டின் தெரிவுகள் இருந்தன.

'லலிதா கற்பழிக்கப்பட்டிருந்தாள்.'

எதிர்பார்த்ததுதான்.

'லலிதாவின் மரணம் இயற்கையாகச் சம்பவித்திருக்கிறது.'

'லலிதா கொலை செய்யப்பட்டுச் சாகவில்லை.'

'இரவு ஒன்பது மணிக்கு லலிதா இயற்கையாக மரணமடைந்திருக்கிறாள்.'

'அவள் மார்பில் ஏற்பட்டிருக்கும் காயம் பத்து மணிக்குச் சம்பவித்திருக்கலாம்.'

இந்த முடிவுகள் அருணைக் களைத்துப் போக வைத்தன.

லலிதா எப்படி இயற்கையாக மரணமடைந்திருப்பாள்?

ஒருவேளை, தான் கற்பழிக்கப்பட்டு விட்டோம் என்ற அதிர்ச்சியில் மரணமடைந்திருப்பாளோ?

அப்படியே இயற்கையாக மரணமடைந்து பிணமாகக் கிடந்தவளை ஏன் கத்தியால் குத்த வேண்டும்?

ரூபாய் பத்தாயிரத்தையும் காணவில்லை!

கற்பழித்தவனும், கத்தியால் குத்தியவனும், பத்தாயிரம் எடுத்துக் கொண்டு போனவனும் ஒரே ஆள்தானா?

இல்லை, இரண்டு பேரா?

மூன்று பேர்களாகவும் இருக்கலாம்.

'ரமேஷ் தான் கொலை செய்யவில்லை என்று சொன்னது உண்மைதானா?'

'ஆனால் கிடைத்திருக்கும் கை ரேகைகள் ரமேஷுக்கு உரியன.'

'பதற்றத்தில் அங்கங்கே தொட்டிருக்கலாம்.'

'லலிதாவிடம் அபரிமிதமான அழகு இருந்தது.'

'கற்பழிப்புக்கு அது காரணமாக இருந்திருக்கலாம்.'

'ஆனால் பிணமாகக் கிடந்தவளைக் கத்தியால் குத்த வேண்டிய அவசியமென்ன?'

நேரம் ஆக ஆக அருணுக்கு ஏஸியிலும் வியர்க்க ஆரம்பித்தது.

லலிதா எப்படிக் கொலை செய்யப்பட்டிருப்பாள்?

அந்தப் பத்தாயிரம் எங்கே?

அருண் குழப்பத்தில் மேஜையில் தலையைக் கவிழ்த்துக் கொண்டார்.

8

லலிதா கொலையிலிருந்து அருணுக்கு, புதிதாகக் கல்யாணமான மனைவி அனுஷாவிடம் பேசக் கூட நேரமில்லே.

வீட்டில் அருண் நுழைந்ததும் 'குபுக்'கென்று சந்தோஷத்தைக் கொடுத்தது அனுஷாவின் தோற்றம்.

சிவந்த மேனியில் மஞ்சள் தேய்த்துக் குளித்திருந்ததால் மேனி பொன்னிறமாக மின்னிக் கொண்டிருந்தது.

''சரி, சரி... குளியல் எல்லாம் ரொம்ப ஜோரா நடந்திருக்கு அப்ப. 'இன்னிக்கு ராத்திரி, தூக்கம் போச்சுடி.....'

''ச்சச்சீ''

அனுஷா அவன் பக்கத்தில் நின்றுகொண்டு பரிமாறினள்.

சாப்பிடும்போது இடறிய நினைவில்,

'ஆமாம், ராஜசேகர் வீட்டை இன்னொரு தரம் நல்லாச் சுத்திப் பார்த்தா லென்ன? ஏதாவது ஐடியா கிடைக்கலாம்....'

சாப்பிட்டதும் புறப்பட்டான்.

''என்ன அவசரம், கொஞ்சம் இருந்து தான் போறது.''

''ஆமா... உனக்கு எப்போ பார்த்தாலும் 'அதே' நினைவுதான். 'கிட்ட வந்தா மட்டும் நில்' என்பாய். இப்போதைக்கு இதுதான். மீதி ராத்திரிக்கு....''

முத்தம் பதித்தான்.

'லலிதா, ரமேஷ் திருமணம் செய்து கொண்டிருந்தால் இப்படித்தானே நடந்து கொள்வார்கள். லலிதா இப்படிப் போயிட்டாளே....'

அருணுக்கு என்னவோ போலிருந்தது.

ராஜசேகரன் பங்களாவின் கேட்டைத் தாண்டும்போது ஏதோ நாற்றம் அடிக்க, மூக்கைப் பொத்திக் கொண்டு உள்ளே சென்றார்.

ராஜசேகரன், லலிதா கொலை சம்பவத்துக்குப் பிறகு ஆபீஸை மறந்திருந்தார்.

மெலிதாகக் கறுப்பு வெள்ளையாகத் தாடி தோன்றியிருந்தது.

''என்னமும் விவரம் கிடைத்ததா... கொலையாளியைக் கண்டு பிடிச்சிட்டீங்களா?'' என்பதாய் ராஜசேகரன் பார்க்க,

''கவலைப்படாதீங்க... எப்படியும் கண்டு பிடிச்சிடுவோம்... இந்தப் பங்களாவைச் சுற்றிப் பார்க்கணுமே....''

எல்லா அறைகளையும் சுற்றிப் பார்த்து விட்டு வரும்போது, ரவீந்தர் அறையும் 'வா'வென்றது.

நுழைந்ததும் புத்தக ஷெல்பில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள் கவனத்துக்குக் கொக்கி போட்டன. எல்லாம் மருத்துவ நூல்கள். எம். பி. பி.எஸ். படிப்புக்கு உரியது. அதெப்படி இங்கே... ரவீந்தர்தான் ராஜசேகரன் ஆபீஸில் எக்ஸிக்யூட்டிவ்வாக வேலை பார்க்கிறனே....

ராஜசேகரிடம் கேட்டார்.

''அதை ஏன் சார் கேட்கிறீங்க. இந்த அசட்டு ரவீந்தர் பி. யூ. சி. பாஸ் செய்ததுமே எம். பி. பி. எஸ். டிரை செய்தான். இடம் கிடைக்கலே. 'ஜு' எடுத்து பி.எஸ். சி. முடித்தான். கேரளாவிலே எம். பி. பி. எஸ். இடம் வாங்கித் தர்றதா எவனோ சொன்னானும். பணத்தைக் கொடுத்து சர்டிபிகேட்டையும் தந்திருக்கிறன். கச்சிதமாய் மார்க்கைத் திருத்தி இடம் வாங்கிக் கொடுத்திட்டான். மார்க்கைத்திருத்திய ஊழல் வெளியில் வந்ததும், பிறகும் பணம் கொடுத்து சர்டிபிகேட் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளை வாங்கிக் கொண்டு ரவீந்தர் இங்கே வந்துவிட்டான். மார்க் லிஸ்ட் ஊழலில் பெரிய புள்ளிங்க சம்பந்தப்பட்டிருப்பதால் இதுவரை ஏடாகூடமாக ஏதுவும் நடக்கவில்லே.''

எந்தத் தடயமும் கிடைக்காததால் அருண் சோர்வுடன் வெளியே வந்தார்.

கேட்வரை வந்து வழியனுப்ப ராஜசேகரனும் பின்தொடர்ந்தார்.

அந்தத்துர்நாற்றம் இப்போதும் இருந்தது.

பக்கத்தில் குப்பைத் தொட்டி, குப்பை கழிவுகளுடன் கர்ப்பமாயிருந்தது.

குப்பைத் தொட்டியைக் கிளறினால் 'ஏதாவது' உபயோகமாய்க் கிடைக்குமா?

சின்னக் குறுகுறுப்பு.

வீட்டு வேலைக்காரனிடம் மெல்ல மெல்லக் குப்பைகளை எடுக்க உத்தரவிட்டார். மனத்தில் அருணைத் திட்டிக்கொண்டு வேலைக்காரன் குப்பையைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தொட்டியிலிருந்து அப்புறப்படுத்தினன்.

மூக்கைக் கர்ச்சிப்பால் பொத்திக்கொண்டு அருணும் கண்களால் குப்பையைக் கிளறினார்.

ஏறக்குறையப் பாதிக் குப்பைகளை மாற்றியதும், காகிதச் சுருட்டலிலிருந்து ஒரு 'சிரிஞ்ச்' கீழே நழுவி உருண்டது.

சுவாரஸ்யத்துடன் மூக்கைப் பொத்தவும் மறந்து, கர்ச்சிப்பில் 'சிரிஞ்சை'ப் போர்த்தி எடுத்தார்.

ஊசி கழற்றாமல் அப்படியே இருக்கிறதே!

யோசித்தபடியே மீண்டும் ரவீந்தரின் அறைக்குள் நுழைந்து ஷேவிங் பிரஷ்ஷை



''என்னங்க மந்திரி ரொம்ப கோபமா இருக்கார்!''

''ஒண்ணுமில்லே. போன வருஷம் இதே இடத்திலே ஒரு கட்டடம் கட்டறதுக்காக அடிக்கல் நாட்டினராம். இப்போ என்னடான்னு ஆங்கே தான் மரம் நடும் விழாவும் ஏற்பாடு பண்ணியிருக்காங்களாம்!''

—நெல்லை சுவாதி.

நைலான் கிளவ்ஸைப் பிடித்தவாறு எடுத்து வந்தார்.

ராஜசேகரனுக்கு ஒன்றும் புரியவில்லை.

9

இன்ஸ்பெக்டர் அருணை, அவசரம் பிடறியைப் பிடித்துத் தள்ளியது.

கைரேகை நிபுணரிடம் விரைந்தார்.

மேஜை மீது ஷேவிங் பிரஷ்ஷையும் 'சிரிஞ்சை'யும் வைத்தார்.

''மிஸ்டர் நாராயணன்! இதுலே ரேகை ஏதும் உருப்படியா இருக்கான்னு பாருங்க. இருந்தா பிரிண்ட் போட்டு இரண்டும் ஒத்துப் போகிறதா என்பதையும் கண்டுபிடியுங்க. உடனே ரிசல்ட் தேவை. வெயிட் பண்ணறேன்.''

சிறிது நேரத்தில் நெற்றியில் வியர்வை பொடிக்கக் கைரேகை நாராயணன் வந்தார்.

''இரண்டிலேயும் ஒரே ஆளுடைய கை ரேகை இருக்கு சார்.''

''தேங்க்யூ... நாராயணன்.''

மறுபடியும் சிரிஞ்ச், ஷேவிங் பிரஷ் இரண்டையும் டவலில் எடுத்துக்கொண்டார்.

'சிரிஞ்சிலே இருக்கிற ரேகையும், அன்றாடம் பயன்படுத்துகிற ஷேவிங் பிரஷ்ஷில் இருக்கிற ரேகையும் ஒன்று.'

'அப்படின்னா சிரிஞ்சை ரவீந்தர் கையாண்டிருக்கிறான்.'

'குப்பைத் தொட்டி ஐந்து நாளைக்கு முன் காலி செய்யப்பட்டிருக்கிறது. அப்போது சிரிஞ்சை ரவீந்தர் குப்பைத் தொட்டியில் போட்டிருந்தால், சிரிஞ்ச் தொட்டியின் அடியில் கிடக்க வேண்டும். ஆனால் தொட்டியின் மத்தியில் கிடந்தது. அதனால் சிரிஞ்சை இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன் தொட்டியில் போட்டிருக்க வேண்டும்.'

'லலிதா கொலை செய்யப்பட்ட அன்று குப்பைத் தொட்டியில் 'சிரிஞ்சை' எறிந்திருக்கலாம்.

'ஆனால் அந்த நாளில் ரவீந்தர் நகரத்தில் இல்லை.'

'இரண்டுநாட்களுக்கு முன்னதாகக்கொச்சி போயிருந்தான் என்று சொல்கிறார்கள். ரவீந்தரும் சொன்னான்.

'அப்படியானால் சிரிஞ்சைக் குப்பைத் தொட்டியில் யார் போட்டிருப்பார்கள்?'

'ரவீந்தர் கொச்சிக்குப் போவதாகச் சொல்லிவிட்டு இங்கேயே தங்கியிருப்பானோ?'

'இருக்கலாம்.'

'ஆனால் ஏன் அப்படி மறைவாகத் தங்க வேண்டும்?'

'கண்டு பிடிக்க முடியுமா?'

'இந்தச் 'சிரிஞ்ச்' விவகாரம் இப்படிக் குழப்புகிறதே!'

அருண் யோசித்தபடியே 'சிரிஞ்சை'க் கடுப்பாய்ப் பார்க்க, துணுக்குற்றார்.

'சிரிஞ்சி'ன் முனையில் செருகப்பட்டிருந்த ஊசியின் துவாரத்தில் ஏதோ அடைத்திருப்பதாகத் தெரிந்தது. 'சிரிஞ்சி'ன் முன் பகுதியில் சிவப்பு நிறம் வெகு இலேசாகப் படிந்திருந்தது.

'எதற்கும் ஃபோரன்ஸிக் எக்ஸ்பர்ட்டை கன்ஸல்ட் செய்தால்?'

அனிச்சையாய்க் கால்கள் நகர, விரைந்தார்.

ஃபோரன்ஸிக் எக்ஸ்பர்ட் சிவராமன் வெளியே கிளம்பிக் கொண்டிருந்தார்.

''இந்தச் 'சிரிஞ்ச்' ஊசித் துவாரத்தில் ஏதோ அடைச்சிருக்கு... அது துருவா, வேறு ஏதாவதான்னு பாருங்க... சிரிஞ்சினுள் ஏதாவது சிவப்பு நிற மருந்து இருந்த அடையாளம், இல்லேன்னா பெத்தடின் இருந்திருக்கச் சான்ஸ் இருக்கான்னு பாருங்க... நீங்க தர்ற விவரம் லலிதாவை யார் கொலை செஞ்சாங்கன்னு கண்டுபிடிக்க - ரொம்ப உதவும். எப்போ முடிவைச் சொல்வீங்க?''

''அவசர வேலையாய்ப் போய்க்கொண்டிருக்கிறேன். ரொம்ப முக்கியம்னு சொல்றீங்க. சீக்கிரம் வேலையை முடிச்சுட்டு வந்து, உங்க ளுடையதைக் கவனிக்கிறேன். எப்படியும் ஈவினிங் சொல்லிடறேன்.''

''முதல்லே விவரத்தைப் போனிலே சொல்லிடுங்க.... ரிப்போர்ட் அப்புறம் கொடுங்க.. ரொம்ப அவசரம். நான் ஆபீஸிலே காத்துக்கிட்டிருப்பேன்.''

அலுவலகத்தில் அருண், சிவராமனிடமிருந்து போனுக்காகக் காத்திருந்தார்.

வந்த செய்தியோ,

எதிர்பாராத திருப்பத்தைத் தந்தது.

அருண் மேலும் குழம்பினார்.

10

அருண் டாக்டரிடம் ஓடினான்.

''டாக்டர், ஊசித் துவாரத்தில் அடைத்திருப்பது லலிதாவின் ரத்தமாம்.''

''அப்படியா?''

'' 'சிரிஞ்சி'ல் பெத்தடினோ, வேறு விஷ மருந்தோ இருக்கவில்லை.''

''சரி....''

லலிதாவின் ரத்தம் அந்த ஊசித் துவாரத்தில் அடைத்திருக்கும் என்று அருண் சற்றும் எதிர்பார்க்கவில்லை. எப்படி லலிதாவின் ரத்தம் ஊசியில் வந்தது?

புரியாததால் டாக்டரிடம் வந்தார்.

''டாக்டர், ஊசியில் லலிதாவின் ரத்தம் என்பது உறுதியாகி விட்டது. வெகு சமீபத்தில் ஊசியை லலிதாவின் உடலில் செலுத்தியிருக்க வேண்டும். சரிதானே?''

''ரொம்பச் சரி.''

''செலுத்தியவன் ரவீந்திராகத்தான் இருக்க வேண்டும். 'சிரிஞ்சி'ல் இருக்கும் கை ரேகை அப்படிச் சொல்கிறது. அப்படியானால் ரவீந்தர் லலிதா கொலை செய்யப்பட்ட நாளில் இங்கே இருந்திருக்கிறான். எதற்காக லலிதா உடலில் ஊசியை மருந் இல்லாமல் செலுத்த வேண்டும்... இதில் ஏதோ மர்மம் இருக்கிறது....''

''மர்மம் இல்லை மிஸ்டர் அருண்... மரணமே இருக்கிறது.''

''என்ன சொல்றீங்க டாக்டர்...''

''ஆமாம். மரணம்தான் இருக்கிறது.''

ரெக்ஸோனா உங்கள் சருமத்தைப் பராமரிக்கிறது...





மென்மையோடு மெருகுமிளிர வைத்திருக்கிறது.

நாலு இயற்கைத் தைலங்கள்
இணைந்துள்ளன ரெக்ஸோனாவிலே:
ஹபுஷா (தேவதாரம்),
கருவா, கிராம்பு, சரளம்.
மென்மையோடு மேனிமின்னக்
குளித்தெழுவீர் ரெக்ஸோனா
சோப்பினில். நெஞ்சம்
கவரும் நறுமணமுடன்
நேரமெல்லாம் உங்கள் மீது
மணக்கும் ரெக்ஸோனா,
உங்கள் மேனியழகைப் பேண
இயற்கையான வழி.



ரெக்ஸோனா உங்கள் சருமத்திற்கு நல்லது.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லிண்டாஸ்-RX.78-2015 TM

''வெறும் ஊசியால் மரணம் நடந்திருக்குமா?''

''நடந்திருக்கிறதே.''

''புரியும்படி சொல்லுங்க டாக்டர்.''

''தாராளமாய்ச் சொல்றேன்.''

சொன்னார்.

டாக்டர் சொல்லி முடித்ததும் கிடைத்த அதிர்ச்சியில் அருண் சுவாசிக்க மறந்துவிட்டார்.

'இப்படியும் நடக்குமா?'

'ஆனால் நடந்திருக்கிறது.'

'ரவீந்தர் திட்டமிட்டு நடத்தி முடித்திருக்கிறான்.'

'யாருமே கண்டு பிடிக்க முடியாமல் எத்தனை நுணுக்கமாகக் கொலையைச் செய்திருக்கிறான்.'

'சமய சந்தர்ப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, கொலையையும் செய்துவிட்டு நேரில் வந்து நோட்டம் வேறு பார்த்திருக்கிறான்.'

'பாஸ்டர்ட்.'

அருண் கோபத்தில் கொப்பளித்தார்.

''டாக்டர் தேங்க்ஸ் எ லாட்... உங்களைச் சந்திச்சது எனது அதிர்ஷ்டம்... உங்க உதவியாலதான் கொலைகாரன் ரவீந்தர் என்று கண்டுபிடிக்க முடிஞ்சது...''

''அருண் நான் ஒன்றும் பெரிசா செய்யலே. நீங்க மட்டும் இந்த 'சிரிஞ்சை'க் கண்டு பிடிக்கலேன்னா... கொலைகாரனைக் கண்டு பிடிக்க முடியாம கேஸை க்ளோஸ் செய்ய வேண்டியதிருக்கும். உங்களைத்தான் நான் பாராட்டணும். போய் வாங்க... பெஸ்ட் ஆஃப் லக்....''

அருண் கிளம்பினார்.

'நல்ல வேளை. குப்பைத் தொட்டியைக் கிளறியதால் 'சிரிஞ்ச்' கிடைத்தது.'

'கொலை செய்தவன் ரவீந்தர் என்று கண்டு பிடிக்க முடிந்தது.'

பேர்சனல் ஃபைலில் நல்லதாக எழுதுவார்கள்.

பிரமோஷனும் கிடைக்கும்.

ராஜசேகரன் அலுவலகத்தினுள் 'இன்' வழியாக ஜீப்பில் நுழையும்போது சொல்லி வைத்தது மாதிரி 'அவுட்' வழியாக ரவீந்தர் பைக்கில் வெளியேறினான்.

அவசரப்படாமல், ஜீப்பை நிறுத்தாமலே வட்டமடித்து ரவீந்தரைப் பின்தொடர்ந்து பிரதம சாலையில் ஜீப்பைச் சேர்த்தார்.

பதினைந்து நிமிட ஓட்டத்திற்குப் பின்,

பஸ் ஸ்டாப் ஒன்றின் பக்கமாக ரவீந்தர் ஒதுங்கினான்.

ஜீன்ஸில் இருந்த 'அவள்' பில்லியனில் அமர்ந்து குலுங்கும் பெரிய மார்பகங்களை அவன் முதுகில் பாரமாக்கிச் சாய்ந்ததும் ரவீந்தர் பறந்தான்.

சுவாரஸ்யத்துடன் அருண் சிரித்துக்கொண்டார்.

போக்குவரத்து நெரிசலில் ரவீந்தரைப் பின்தொடர்வதைத் தவிர அருணால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

அந்த வீட்டின் முன் 'பைக்'கை ரவீந்தர் நிறுத்தினான்.

அருண் வளைவிலேயே நிறுத்திக் கொண்டார்.

'ரவீந்தருக்குத் தனி வீடு இருக்கிறதா?'

'கொடுத்து வைச்சவன்.'

'சோதனை போட்டால் நல்லது.'

'இப்போது வேண்டாம்.'

'எக்கச்சக்கமான நிலையில் இருப்பார்கள்.'

'அவர்கள் போனதும் சோதனை போடலாம்.'

'ஜீப்'பை ரிவர்ஸில் எடுத்து மறைவாக நிறுத்திவிட்டு, ரவீந்தரின் வெளியேற்றத்தை எதிர்பார்த்து நின்றார்.

11

ஒரு மணி நேரம் கழித்து ரவீந்தர் அவளுடன் வெளியேறினான்.

அருண், வீட்டுக் கதவைத் தள்ளிப் பார்த்ததில் கதவு அசைந்து கொடுக்கவில்லை.

'நாளை வரலாம்.'

அடுத்த நாள் இன்ஸ்பெக்டர் மோகனுடன் அருண் வந்தார்.

மோகன் கொண்டு வந்திருந்த சாவிகளை மாற்றி மாற்றிப் போட்டு முயற்சி செய்ய, ஏதோ ஒரு சாவியில் பூட்டு பிடியைத் தளர்த்தியது.

அறை துப்புரவாக இருந்தது.

படுக்கையில் மாத்திரம், நேற்றிரவு ரவீந்தரின் விளையாட்டுக்குச் சாட்சி அளிப்பதாய் விரிப்புகள் விலகி, தலையணைகள் இடம் மாறியிருந்தன.

''மோகன் நன்றாகச் சோதனை போடுங்க.''

அருணும் சோதனையில் ஈடுபட்டார்.

புத்தக அடுக்கில் சில 'போர்னோ' புத்தகங்கள் இருந்தன.

வேஸ்ட் பாஸ்கெட்டில் தேடியபோது தாறுமாறாய்க் காகிதத்தில் சுருட்டப்பட்ட பொட்டலம் கிடந்தது.

விரித்துப் பார்த்தால்

ரத்தக் கறை படிந்த துணி.

சற்றுக் கவனித்துப் பார்த்தால்,

ரத்தம் தோய்ந்த ஆயுதத்தைத் துடைத்த மாதிரி இருந்தது.

'லலிதாவைக் குத்திய கத்தியைத் துடைத்திருப்பானோ!'

'அப்படித்தான் இருக்க வேண்டும்.'

'அப்பனே, ரவீந்தர் இப்படி மாட்டிக் கொண்டாயே....'

'இந்த ரத்தம் லலிதாவுக்குச் சொந்தமானதாகத்தான் இருக்க வேண்டும்.... ஃபோரன்ஸிக் எக்ஸ்பர்ட்டிடம் கேட்டால் சொல்லி விட்டுப் போகிறார்.'

'ரவீந்தரை உடனே கைது செய்துவிட வேண்டியதுதான்.'

ராஜசேகரன் அலுவலகத்தில் நுழைந்த போது,

தனக்குரிய கேபினில் ரவீந்தர் 'புரூட்' மணக்க அட்டகாசமாக இருந்தான்.

மோகனையும் அருணையும் அன்புடன் வரவேற்றான்.

''வாட் கேன் ஐ டூ ஃபார் யூ.''

''சாரி, மிஸ்டர் ரவீந்தர். உங்களைக் கைது செய்ய வந்திருக்கிறோம்.''

''என்னையா... ஏன்... எதற்கு?''


தலைவலி,
உடல்வலி,
ஜலதோஷம்
மறைந்திடும்
இங்கே
AMRUTANJAN
PAIN BALM
AMRUTANJAN LTD.
42-45, Luz Church Road Madras 4
90 ஆண்டுகளாக நம்பகமானது.
அமிர்தாஞ்சன்
துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது.
தீய பின்விளைவுகள் இல்லாதது.
OBM 6321 R TM

''லலிதாவைக் கொடூரமா கற்பழிந்து, மென்மையாக் கொலை செய்ததற்காக...''

''லலிதாவை நான் கொலை செய்தேனு... வாட் இஸ் ஹெல் யூ ஆர். டாக்கிங்....''

''ரவீந்தர்... டோன்ட் மேக் எ சீன்... கம் வித் அஸ்... விலங்கு கொண்டுவந்திருக் கோம்... கையை நீட்டினு மாட்டறதுக்கு எங்களுக்கு ஆட்சேபணை இல்லை...''

''ஆதாரமில்லாமக் கைது செய்யக் கூடாதுன்னு தெரியுமா... எனக்கு மேலிடத்தில் செல்வாக்கு இருக்கு...''

''இல்லேன்னு யார் சொன்னு... ஆதாரத்தோடுதான் உங்களைக் கைது செய்ய வந்திருக்கிறோம்... வரீங்களா... இழுத்துக்-கொண்டு போகணுமா....''

வேறு வழியில்லாமல் ரவீந்தர் எழுந்தான்.

12

போலீஸ் ஸ்டேஷன்.

அருண், மோகன் இருக்கையில் அமர, ரவீந்தர் எதிரே நாற்காலியில் சாய்ந்தான்.

''சரி மிஸ்டர் ரவீந்தர்... லலிதாவை எப்படிக் கொலை செஞ்சீங்க... ஏன்?''

''நான் லலிதாவைக் கொலை செய்யலை.''

''அப்படின்னு இந்த சிரிஞ்ச், அதில் இருக்கிற உங்க கைரேகை, எல்லாத்துக்கும் மேலே சிரிஞ்சி ஊசிக்குள்ளே காய்ந்திருந்த ரத்தம், உங்க 'தனி' வீட்டிலே நாங்க கண்டெடுத்த ரத்தக் கறை படிந்த துணி... இதெல்லாம் என்ன... இவை பொய் சொல்லுமா... ரவீந்தர்... நீங்க திட்டமிட்டுக் கொலை செய்திருக்கீங்க.. கொலை செய்தது நீங்கதான்னு கண்டு பிடிக்காம இருக்க செத்துப் பிணமாகக் கிடந்த லலிதாவைக் கத்தியால் குத்திக் காயம் உண்டாக்கி, அந்தப் பத்தாயிரத்தை எடுத்துப் போயிருக்கீங்க... பத்தாயிரம் எடுத்துப் போனதினாலே சந்தேகம் ரமேஷ் மேலே ஏற்படும்... நாம் தப்பிச்சுக்கலாம்னு நெனைச்சீங்க... லலிதாவை எப்படிக் கொலை செய்தீங்கன்னு எங்களுக்குத் தெரிஞ்சு போச்சு... அதை நீங்களாச் சொல்றீங்களா... நாங்க சொல்லட்டுமா....''

அருண் கேள்வியால் ரவீந்தரைத் துருவ, ரவீந்தர் சொல்லத் தொடங்கினான்.

''லலிதா எனக்கு முறைப் பெண். சின்ன வயதிலிருந்தே நல்ல பழக்கம். பற்றுக்குறைக்கு 'உனக்குத்தான் அவள்' என்று சொல்லிச் சொல்லி வளர்த்து, எனக்குள் லலிதாவைக் குடிவைத்து விட்டார்கள். எப்போதுமே லலிதாவைத் தொட்டுப் பேசித்தான் பழக்கம். அவள் 'பெரியவளானதும்' அப்படியே தான் பழகினேன். கூச்சப்பட்டு லலிதா விலகி விலகிப் போவாள். 'தொடாமல் பேசுங்களேன்' என்பாள். அப்படி அவள் சொன்னது 'அவளைத் தொடு, அவளைத் தொடு' என்பதாய் என்னுள் வேகமாக ஒலிக்கத் தொடங்கியது. லலிதாவுக்கும் எனக்கும் ஐந்து வயது இடைவெளி. அவளது உருவ மாற்றம், வளர்ச்சி எல்லாம் கண்டு ஆசைகள் மனத்தில் கூடு கட்டின. 'அவள் எனக்குச் சொந்தமாகப் போகிறாள்', 'அவளது அழகை அனுபவிக்கத்தான் நான் பிறந்திருக்கிறேன்' என்ற நினைவுகளோடு ஒவ்வொரு நாளையும் நகர்த்தி வந்தேன். மாமாவுக்கும் லலிதாவை எனக்குத் தர விருப்பம்தான்.

ஒரு நாள்.

'போர்' அடித்ததினால் அரட்டை அடிக்க லலிதா அறைக்குச் சென்றேன்.

''அழகுச் சிலையாக இளமை வழிய நின்றிருந்தாள்.

அவளது அழகுப் பரிமாணங்கள்,

'என்னுள் உஷ்ணத்தை உதைத்துக் கிளப்பியது.'

'வெறியை விசிறி விட்டது.'

'லலிதாவை எப்படியும் அடைந்து விட வேண்டும் என்று தீர்மானித்தேன்.'

'லலிதா வெளியே வந்ததும் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தேன்.'

'திடுக்கிட்டுப் போன லலிதா கோபத்தில் திட்டினாள்.'

'லலிதா அப்போது படித்துக் கொண்டிருந்ததால் கல்யாணம் செய்ய முடியவில்லை. நானும் அப்போது டாக்டருக்குப் படிக்க வேண்டியிருந்ததால் கோட்டயம் போயிருந்தேன். இதற்கிடையில்தான் ரமேஷ் லலிதா காதல் அரும்பி யிருக்கிறது. சில பிரச்சினைகளால் மருத்துவப் படிப்பைப் பாதியில் விட்டு வந்தேன். அதன் காரணம் உங்களுக்குத் தெரிந்திருக்குமே....'


'தெரியும்.'

'மாமா ஆபீஸிலேயே எக்ஸிக்யூட்டிவ்வானேன்.... லலிதா ரமேஷ் காதலைத் தெரிந்து கொண்டேன். எனக்குக் கிடைக்காத லலிதா யாருக்கும் கிடைக்கக் கூடாது என்று தீர்மானித்தேன்.'

'லலிதாவை நன்கு அனுபவித்துச் சுகித்து விட்டுச் சந்தேகம் ஏற்படாமல் கொலைசெய்து விட வேண்டியது. லலிதா இறந்ததும் சொத்து என் பெயருக்கு வந்துவிடும்.'

அதற்காகத் தருணத்தை எதிர்பார்க்கும் கொக்கானேன்.

ரமேஷ் பணத்தை எங்கோ தவறவிட்டு லலிதாவுடன் தேடி அலைவதைக் கண்டு கொண்டேன். ரமேஷ் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனால் பணத்தைக் கட்ட முடியாது. லலிதா எப்படியும் உதவி



''டீ. வி. வாங்கப் போகிறீர்களா? அல்லது வீடியோ வாங்கப் போகிறீர்களா?''

''டீ. வி. வீடியோ இரண்டும் வைத்திருப்பவர்களின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் குடியேறப் போறோம்.''

—எஸ். மோகன்

நவம்பர் 14. குழந்தைகள் தினம்.



காலம்தான் எப்படிப் பறக்கிறது

பிள்ளைப் பருவம், சின்னஞ்சிறு பொன்னான நினைவுகளை விட்டுவிட்டுப் பறந்தே போய்விட்டது.
அப்பயணத்தில்தான் எத்தனை எத்தனை சாதனைகள்...
பிஞ்சுக் காலெடுத்து முதலடி வைக்கையில் பெருமிதத்துடன் நோக்கும் பெற்றோர், கொஞ்சு மழலையின் முதல் வார்த்தை, குஞ்சுக் கால்களுக்கு முதல் ஷூஸ், பள்ளியில் அந்த முதல் நாள்...
கண்ணிமைக்கும் நேரத்தில் காட்சி மாறுகிறது.
பொறுப்புகள், கவலைகள், எடுக்க வேண்டிய தீர்மானங்கள், முடிக்க வேண்டிய வேலைகள்.
சுதந்திரமே சுமையாகிறது! எதிர் நோக்கியிருக்கும் பொறுப்புகளுக்கு ஆயத்தம் செய்வதற்குள் பிள்ளைப் பருவம் கொள்ளை போய்விட்டது போல் தோன்றும்.

உங்கள் குழந்தைக்கு, உங்களால் இயன்ற அளவு பாதுகாப்பும் தன்னம்பிக்கையும் கொடுங்கள்...
ஆயுள் இன்ஷூரன்ஸும் அந்தப் பொறுப்பில் பங்கேற்கச் செய்யுங்கள். கசிதமான எல் ஐ ஸி பாலிஸி ஒன்று, எதிர் காலத்தில் அவனுக்கோர் உறுதியான பொருளாதார அஸ்திவாரத்தை அமைத்துத் தரும்... அவன் நடக்கும் பாதையை உறுதியாக்கும்.

இலவசம்!

6 வண்ண வனவிலங்கு ஒட்டுப் படங்கள்!
இக் கூப்பனை அனுப்பினால் போதும் இம் முகவரிக்கு:
மானேஜர் (பப்ளிஸிடி & பப்ளிக் ரிலேஷன்ஸ்), த. பெ. எண் 9991,
பம்பாய் 400 021.
பெயர் ____________________
முகவரி ____________________
____________________ பின் ____________
இக் கூப்பனை வெட்டியெடுத்த பத்திரிகையின் பெயர்: ____________
பெயர், விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும். ____________

முந்துங்கள்! சரக்குகள் இருக்கும் வரையே சலுகை.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

daCunha/LIC/146/83/TM

செய்வான். அவள் செய்யும் உதவிக்குத் தடையாக நின்றால், லலிதா என்னைக் கெஞ்சுவாள். அவளைப் பிளாக் மெயில் செய்து எப்படியும் அவளை அனுபவிக்கலாம் என்றிருந்தேன். ஆனால், லலிதாவோ மாமாவின் பணப் பெட்டியிலிருந்தே பணம் எடுக்கத் துணிந்ததை அறிந்ததும், எனது பிளாக் மெயில் பாச்சா அவளிடம் பலிக்காது என்று தெரிந்து கொண்டேன்.

''லலிதா ரமேஷ் போட்டிருந்த திட்டம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

'அவர்கள் வழக்கமாகக் குறிப்பிட்ட படகுக்குப் பக்கத்தில்தான் சந்தித்துக்கொள்வார்கள். ரமேஷ் பணம் தொலைந்ததிலிருந்து அவர்களைத் தீவிரமாகக் கண்காணித்தேன். ஒட்டுக் கேட்டேன்.

திங்கள் கிழமை மாமா பெங்களூர் போனதும் நான் கொச்சிக்குக் கிளம்புவதாகச் சொல்லிவிட்டு, எனது பிரத்தியேக வீட்டில் தங்கிக் கொண்டேன்.

அவர்கள் திட்டப்படி புதன் மாலை வீட்டில் லலிதாவைத் தவிர யாரும் இருக்க மாட்டார்கள். மாலை ஆறரை மணிக்குச் சென்றேன். என்னைப் பார்த்ததும் லலிதா ஆச்சரியமடைந்தாள். ''ரவீந்தர்... நீங்க கொச்சிக்குப் போகலையா...?''

''போய் வந்துவிட்டேன்... லலிதா இன்றைக்கு யூ ஆர் வெரி ப்யூடிஃபுல்...''

'தேங்க் யூ ஃபார் யுவர் காம்ப்ளிமெண்ட்ஸ் நல்ல சினிமாவெல்லாம் நடக்குதே போய் வரவேண்டியதுதானே...''

''ரமேஷ் வர்றதுக்கு முன்னாடி சினிமாவை இங்கே வச்சுக்கலாம்னேன்...''

லலிதா தடுமாறினாள்.

''ரமேஷ்... இங்கே வருவது... எல்லாம் உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

அவள் தோளில் கை வைத்து முந்தானையை வேண்டாத ஒன்றாக்கினேன். திமிறினாள்.

லலிதா கோபத்தில் வெடித்தாள். எதிர்த்தாள். நான் இமிராக அவள் மேல் படர,

அடங்கினாள்.

இனி கொலை செய்து விட வேண்டியதுதான்! கொலை செய்யா விட்டால் மாமாவிடம் கண்டிப்பாகச் சொல்வாள். அவர் துப்பாக்கியை எடுப்பார்...

கொலை செய்துவிட வேண்டியதுதான்.

அவசரமாக இயங்கினேன்.

13

துவண்டு கிடந்த லலிதா சிலிர்த்து எழுந்தாள்.

கத்தியை எடுத்து என்னைக் குத்த வர, நான் கத்தியைத் தட்டி விட்டு, அவளைத் தள்ள, படுக்கையில் விழுந்த லலிதா, கட்டிலின் விளிம்பில் மோத மயக்கமானாள்.

அந்த மயக்கத்தைத்தான் நான் எதிர்பார்த்தது.

என் அறைக்குச் சென்று புதிதாக வாங்கி வைத்திருந்த சிரிஞ்சைக் கொண்டு வந்தேன்.

யாருக்குமே சந்தேகம் சிறிதும் வராமலிருக்க நூதனமாகக் கொலை செய்தேன்.

சிரிஞ்சில் மருந்தை எடுக்காமல், மருந்தை நிரப்புவதற்குச் செய்வது போல் சிரிஞ்சின் பின் பாகத்தை இழுக்க உள்ளே காற்றுப் புகுந்து கொண்டது.

அந்தக் காற்றைத்தான் விஷமாக்கினேன்.

முழங்கையில் இருக்கும் ரத்தக் குழாயில் ஊசியை ஏற்றி, சிரிஞ்சுக்குள் இருந்த காற்றை ரத்தக் குழாய்க்குள் செலுத்தினேன்.

அப்படியே இன்னொரு கையில்.

மணிக்கட்டுக்குக் கீழே இருக்கும் ரத்தக் குழாயிலும் காற்றைச் செலுத்தினேன்.

இப்படி நான்கு தடவை சிரிஞ்சின் பின் பாகத்தை இழுத்துக் காற்றை நிரப்பி லலிதாவின் உடலுக்குள் காற்றைப் புக வைத்தேன்.

காற்றுக் குமிழிகள் அதிகம் ரத்தக் குழாயில் சென்றதினால், அவை உருண்டு உருண்டு இதயத்துக்குச் சென்று அடுத்தடுத்து வெற்றிடத்தை ஏற்படுத்த இதயம் இயங்காது நின்று விட்டது.

லலிதா எவ்வித வலியுமின்றி இறந்து விட்டாள்.

போலீஸைக் குழப்ப வேண்டும் என்பதற்காகவே, லலிதா இறந்த பிறகு அவள் மார்பில் வேண்டுமென்றே கத்தியால் குத்திக் காயத்தை ஏற்படுத்தினேன்.

பத்தாயிரத்தை எடுத்துக் கொண்டு சத்தமில்லாமல் வெளியேறினேன்.

சிரிஞ்சைக் காகிதத்தில் சுருட்டிக் குப்பைத் தொட்டியில் போட்டேன்.

ஆனால் எனக்கு ஒன்றுதான் சந்தேகமாக இருக்கிறது.

கை ரேகை எங்கும் படாமல் இருக்கக் கையில் உறை அணிந்திருந்தேன். எப்படி சிரிஞ்சில் எனது கை ரேகை விழுந்தது என்றுதான் தெரியவில்லை.

''நான் சொல்லுகிறேன்!''

அருண் எழுந்தார்.

''லலிதாவை அனுபவித்துவிட்டுக் கொலை செய்துவிட வேண்டும் என்று தீர்மானித்தவுடன் 'சிரிஞ்சை'க் கடையில் வாங்கப் போயிருக்கிறீர்கள். வாங்கும்போது 'சிரிஞ்ச்' சரியாக 'செட்' ஆகிறதா என்று சோதித்துப் பார்த்திருக்கிறீர்கள். கடைக்குப் போகும்போது கையுறை போட்டுக் கொண்டு போக முடியாதே... அப்போது உங்கள் கை ரேகை 'சிரிஞ்சி'ல் படிந்திருக்கிறது. அவசரத்தில் சிரிஞ்சைத் துடைக்காமல் பயன்படுத்த... மாட்டிக் கொண்டீர்கள். அதுமட்டுமல்ல. காற்றைச் செலுத்தும்போது ரத்தத்தை லேசாகச் சிரிஞ்சில் உறிஞ்சி ஊசியின் நுனி அடைபடாமல் இருக்கிறதா என்று பார்த்திருக்கிறீர்கள். சிரிஞ்சின் முனையிலும் ஊசியின் துவாரத்திலும் தங்கிய ரத்தத்தை வைத்துத்தான் லலிதாவின் கொலைக்கும், 'சிரிஞ்'சுக்கும் சம்பந்தமிருக்கிறது என்று தீர்மானித்தோம்.''

அருண் சொல்லி முடித்தார்.

''எனது கெட்ட காலம் இப்படியெல்லாம் நடந்திருக்கிறது.''

''எங்களுக்கு நல்ல காலம் என்றும் சொல்லலாம் அல்லவா?''

சிரித்துக் கொண்டே ரவீந்தரின் கையில் அருண் விலங்கை மாட்டினார்.

(முற்றும்)

டெல்லி டெஸ்ட்

கவாஸ்கர் எழுதிய புதுக்கவிதை

இந்தியாவின் தலைசிறந்த பாட்ஸ்மன்களில் கவாஸ்கர் டெஸ்டுகளில் 29 சதங்கள் எடுத்துள்ள பிராட்மனின் சாதனையையும் 8114 ரன்கள் எடுத்துள்ள பாய்காட்டின் சாதனையையும் கடக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை. டெல்லி டெஸ்டில் முதல் நாளன்று 121 ரன்கள் எடுத்து பிராட்மனின் சாதனையை எட்டியபொழுது அந்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரரே கவாஸ்கரைப் பெருந்தன்மையுடன் பாராட்டினார்.

இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுக்குமிடையே நடக்கும் ஐம்பதாவது டெஸ்டில் இந்த நிகழ்ச்சி சம்பவித்தது குறிப்பிடத்தக்கது. தான் ஆடிய முதல் டெஸ்ட் தொடரிலேயே அதுவும் மேற்கிந்தியருக்கு எதிராக, மூன்று சதங்களும் ஒரு இரட்டைச் சதமும் எடுத்து உலகத்தையே அயர வைத்த நாள் முதல் இந்தியப் பாட்டிங்குக்குப் பொறுப்பேற்க வேண்டிய பெரும் சுமை கவாஸ்கர் மீது விழுந்தது. இன்னிங்ஸைச் சிறப்பாகத் துவக்கி வைப்பதோடு அணியை நிர்வகிக்கும் பொறுப்பும் விரைவிலேயே அவரை வந்தடைந்தது. இதனால் அவர் தமக்கு எளிதாகவும் இயல்பாகவும் அமைந்த பல அழகான ஸ்ட்ரோக்குகளைக் கைவிட்டுப் பொறுப்புணர்ச்சியுடன் ஆட வேண்டியதாயிற்று. ஆனால் சமீபத்தில் டெல்லியில் ஆடியபொழுது, காப்டன்ஸி பொறுப்பு இல்லாததால் சுதந்திர உணர்வுடன் வேகப் பந்து வீச்சாளர்களைத் தாக்கினார் கவாஸ்கர். மரபுக் கவிதையிலிருந்து புதுக் கவிதைக்குத் தாவினாற்போலிருந்தது. இதுவரை அடித்திராத புது ஸ்ட்ரோக்குகளைப் பிரயோகித்தார். முதல் நாள் மார்ஷலின் பந்து வீச்சில் அடித்த இரண்டு ஹூக்குகளும் உதாரணம். அவற்றில் அவர் திறமை மின்னலெனப் பளிச்சிட்டது. இதுவரை கவாஸ்கர் அடித்த சதங்களில் மிகக் குறைந்த நேரத்தில் எடுக்கப்பட்டது டெல்லி டெஸ்ட் சதம்.



பிராட்மன் 52வது டெஸ்டில் சாதித்ததை கவாஸ்கர் 95வது டெஸ்டில்தான் செய்ய முடிந்தது. ஆனால் பிராட்மன் ஒரு தனிப் பிறவி. கவாஸ்கரை அவருடன் ஒப்பிடுவது அர்த்தமற்றது. அவ்வாறு ஒப்பிட்டு கவாஸ்கரைக் குறைத்து மதிப்பிடவும் அவர் சாதனையைக் கனவிலும் அடைய முடியாத எந்த ஓர் இந்தியனுக்கும் உரிமை இல்லை.

• • •

காப்டன் கபில்தேவ் கான்பூர் பிட்சில் புல் முழுதும் அகற்றப்படாததால் கிரவுண்ட்ஸ்மனைக் கோபித்தார் என்று கூறப்படுகிறது. இதன் காரணமாகவே மார்ஷலின் பந்து வீச்சு இந்தியர்களுக்குச் சிம்ம சொப்பனமாய் இருந்தது. டெல்லி பிட்சில் புல் முழுங்க அகற்றப்பட்டதாலும் டெல்லியின் சீதோஷ்ண நிலை காரணமாகவும் இரு தரப்புப் பந்து வீச்சாளர்களும் சிறப்பாக இயங்கவில்லை. இதுவே டெல்லியில் இந்தியா ரன்களைக் குவித்ததற்குக் காரணம்.

முதல் டெஸ்டில் சுமாராக ஆடிய வெங்ஸர்க்கார் டெல்லியில் கவாஸ்கருக்கு இணையாகவும் சில சமயங்களில் அவரை மிஞ்சும் வண்ணமும் ஆடினார். கவாஸ்கரும் அவரும் இணைந்து ஆடியபோது 174 நிமிடங்களில் 178 ரன்கள் எடுத்தது அவர்கள் மேற்கிந்தியர்களின் பந்து வீச்சை எப்படித் தாக்கினார்கள் என்று உணர்த்தும். முதல் இன்னிங்ஸில் 464 ரன்கள் எடுத்தது இந்தியா. கபில்தேவின் பந்து வீச்சு (77 ரன்களுக்கு 6 விக்கெட்) மேற்கிந்திய அணியின் ஸ்கோரை 384 ரன்களுக்குக் கட்டுப்படுத்தியது.

ஐந்தாம் நாள் ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடியும் என்று நினைத்திருந்தபோது இந்தியர்கள் பொறுப்பில்லாமல் ஆடியதால் சிறிது நேரத்திற்கு நிலைமை கவலைக்கிடமாயிருந்தது. பின்னியும் மதன் லாலும் ஆபத்பாந்தவர்களாக நின்று காப்பாற்றினர்.

கான்பூர் படுதோல்விக்குப் பிறகு டெல்லியில் இரண்டாம் டெஸ்ட் டிராவானதால் இந்தியர்கள் சற்று மூச்சு விடலாம். ஆனால் பிரச்சினைகள் இன்னும் தீரவில்லை என்றே தோன்றுகிறது. தலைவலி தணிந்து திருகுவலி தொடராமலிருந்தால் சரி!

பி. என். சுந்தரேசன்

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்: சிதாரவி

சில பல

மீ.ப. சோமு



வினாடி வினா என்கிறார்களே அந்த மாதிரி ஒரு கேள்வி.

''கிண்டியிலே போடுகிற தபால் அண்ணா நகருக்கு வந்து சேர எத்தனை நாள் பிடிக்கும்?''

''அநேகமாக வந்து சேராது. அப்படியே வந்தாலும், லண்டனில் போடுகிற அஞ்சல் அண்ணாநகருக்கு வர எத்தனை நாள் பிடிக்குமோ அதை விட இரண்டு நாள் அதிகம் ஆகும்!''

''அப்படியானால் லண்டனிலே போடுகிற தபால் நிச்சயம் அண்ணா நகருக்கு வந்து சேருமா?''

''சொல்வதற்கில்லை!''

இது ஏதோ வேடிக்கை என்று நேயர்கள் எண்ண மாட்டார்கள். ஏனென்றால் என்னைப் போலவே உங்களுக்கும் இது நித்தியப்படியான அனுபவம்!

கிண்டியிலிருந்து அனுப்புகிற வார இதழ் என் கைக்கு வந்து சேர, வந்து சேருமேயானால், ஐந்தாறு நாள் ஆகிறது. சேராத இதழ்களின் கணக்கு என் கைவசம் இல்லை!

அரசாங்கத் துறைகளிலே அஞ்சல், தந்தி, தொலைபேசி, மருத்துவம், காவல் முதலியன எல்லாம் இராணுவத்தைப் போல முக்கியம் வாய்ந்தவை. இந்தத் துறைகளில் பணி புரிகிற ஊழியர்கள் எல்லாம் மக்களுடைய உடனடித் தேவைகளுக்காக என்றே சேவை செய்கிற மாண்புத் தொண்டர்கள். இப்படிப்பட்ட சாரணப் பணியாளர்களின் அரசுத் துறையே சீர்கேடு அடையும்படியாக விடலாமா?

1960ல் ஒரு சமயம் அஞ்சல் துறையின் ஊழியர்கள் ஒட்டு மொத்தமாக வேலை நிறுத்தம் செய்தார்கள். அப்போது நான் இங்கிலாந்திலே வசித்து வந்தேன். இன்று அந்தப் பழைய கோப்புகளை எடுத்து, என்னுடைய நாட் குறிப்புகளைப் புரட்டினேன்.

18–7–60

இந்தியாவில் உள்ள தபாலாபீசுகளில் வேலை நிறுத்தம் என்று பத்திரிகைகளில் பார்த்தேன். வாரத்துக்கு மூன்று கடிதம் விதம் இங்கிருந்து எழுதி வரும்போதே, ஊரில் உள்ளவர்களுக்கு மன நிம்மதி இல்லை! இனி நான் எழுதுகிற கடிதங்களும் போய்ச் சேராவிட்டால் அவர்கள் என்ன பாடு படுவார்கள்! ஊரிலிருந்து கடிதமே காணா விட்டால் எனக்கும் எப்படி இருக்கும்!

28–7–60

தபால் ஸ்ட்ரைக்கினால் யார் யாருக்கு என்ன நேர்ந்ததோ அல்லது நேரவில்லையோ, என் சம்பந்தப்பட்டவரையில் இந்தப் பன்னிரண்டு நாளும் நான் நரக வேதனை அனுபவித்து விட்டேன். இரண்டு வாரங்களுக்குப் பிறகு இன்றுதான் ஊரிலிருந்து கடிதம் வந்தது. நான் இரண்டு வாரங்களுக்கு முன்பு எழுதிய கடிதமும் இன்றுதான் அங்கு கிடைத்திருக்க வேண்டும். இப்பொழுது ஊரிலிருந்து வந்த கடிதம் இரண்டு வாரங்களுக்கு முன்பு இந்தியாவிலிருந்து எழுதியது! 'ஸ்ட்ரைக்' வரப்போகிறது என்று கேள்விப்பட்டதும் அந்தப் பதற்றத்தில் மனைவி எழுதியிருக்கிறாள். கடந்த பத்து நாட்களிலும் என்னுடைய கடிதமே இல்லாமல் வீடெல்லாம் எப்படி இருந்ததோ! என் கடிதம் கிடைத்து அதற்குப் பதில் வருகிற வரை எனக்கும் ஒன்றுமே ஓடாது! உலகத்தில் எந்தத் துறையிலே 'ஸ்ட்ரைக்' வந்தாலும், தபாலுக்கு மட்டும் வேலைநிறுத்தம் வரவே கூடாது! அதை நம்மால் தாங்க முடியாது! டாக்டர்கள் 'ஸ்ட்ரைக்' செய்தால் நோயாளிகள் என்ன ஆவது?

அஞ்சல் துறை அடியோடு இயங்காமல் போனால் நிலைமை எவ்வளவு அல்லோல கல்லோலப்படுகிறது என்பதை ஒரு கோடி காட்டுவதற்காகவே இந்த நாட்குறிப்பை இங்கே தந்தேன்.

இன்றியமையாத துறையில் பணி புரிகிற அரசு ஊழியர்கள் முழு வேலை நிறுத்தம் செய்வது, வரி கொடுக்கும் குடி மகனின் உயிரை அடியோடு மூச்சைப் பிடித்து நிறுத்துவதற்கு ஒப்பாகும்! அரை குறை மனத்தோடு வேலை செய்வதானது, குடிமகனைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சித்திரவதை செய்து மூச்சுத் திணறலை உண்டாக்குவதாகும்!

எல்லாருமே சம்பளத்துக்காகத்தான் வேலை செய்கிறோம். ஆனால் 'பணி அறம்' என்றும் 'பிரவர்த்தி தர்மம்' என்றும் ஒன்று இருக்கிறது அல்லவா?

அண்ணா நகரிலே பத்து ஆண்டுகளுக்கு முன்பு நான் குடிவந்தபோது தபால்காரர் ஒரு நாளைக்கு மூன்று முறை வந்து கொண்டிருந்தார். இப்போது அண்ணாநகர் அடையாளமே தெரியாத அளவுக்குப் பெரிய



நகரமாக வளர்ந்து விட்டது. ஒரு தனி யான தபால் நிலையம் 'ஜாம் ஜாம்' என்ற ஒய்யாரமான கட்டடத்தில் அனைத்து வசதி களோடும் ''இயங்கி'' வருகிறது! அந்த இயக்கம் எப்படி இருக்கிறது என்றால், அண்ணா நகர் ஒரு குக்கிராமமாக இருந்தபோது மூன்று முறை வந்து கொண்டிருந்த அஞ்ச லார், அது ஒரு நவீன நகரமாக மாறிய பிறகு, குக்கிராமங்களிலே வருவது போல ஒரே ஒரு முறைதான் சேவை சாதிக்கிறார்! 'மெயில் ட்ரான்ஸ்பர் க்ளியரன்ஸ்' போன்ற தபாலிலேயே பெருந் தொகைகள் நாள் தோறும் வரவு செலவு செய்கிற அண்ணா நகரின் ஒரு முக்கிய வங்கி மேலாளரைக் கேட் டேன். பிற்பகல் ஒரு மணிக்குத்தான் தபால் காரர் வருகிறார் என்றும், அதற்குள் நூற்றுக் கணக்கான வாடிக்கையாளர்கள் அஞ்சல் வழிப் பணம் மாற்றம் பற்றிய ஆவலோடும் கவலையோடும் காத்திருக்க வேண்டி யிருக் கிறது என்றும் அழாத குறையாகச் சொன் னார்! அண்ணாநகருக்கே இந்தப் பாடு என்றால் விருகம்பாக்கம் போன்ற பகுதி களைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை!

தபாலைப் பற்றிச் சொன்னேன். தெரு விளக்குகளின் தூங்குமூஞ்சித்தனத்தை எப் படி விளக்குவது? கம்பம் இருக்கும், விளக்கு இராது! விளக்கு இருக்கும், அது எரியாது! எரிந்தால் முழு மனசோடு எரியாது!

யுத்த காலத்து நகரம் போல நமது சென்னை நகரம் ஒரு சோக இருளிலே கண் இமைகளை இடுக்கிக் கொண்டு துயில்கிறது! இந்தச் சோகப் பரிதாபத்தின் நடுவிலே ராட் சச லாரிகள், பூதங்களைப் போன்ற பெருந் துகள், ஊடே ஊடே நல்ல பாம்பு போல் நெளிந்து புகுந்து நுழைகிற ஆட்டோ ரிக்ஷாக்கள், அம்பு போல் பாயும் ஸ்கூட் டர்கள், இவற்றுக்கு மத்தியிலே அவிழ்த்து விடப்பட்ட எருமை மாடுகள், அங்கங்கே சாலைகளின் நடுவே வாயைத் திறந்து கொண்டு நிற்கிற குழிகள் – ஆள் விழுங்கி களான பகாசுரக் குழிகள்! இத்தனைக்கும் மத்தியிலே இந்தக் கடல் சூழ்ந்த நில வுலகின் இருள் சூழ்ந்த பற்பல குடியிருப்புக் களில் உள்ள ஆடவரும், பெண்டிரும், குழந்தைகளும் தங்களுடைய ஒட்ட சாட்ட மான நகர வாழ்க்கை என்னும் நரக வாழ்க் கையை ஜனவரி, பிப்ரவரி என்று வரிகளை எண்ணி மாதந் தோறும் கொடுத்துக் கொண்டே வாய் மூடி அனுபவித்து வருவது எத்தனை பெரிய சாதனை!

இந்தக் குறிப்புக்களை நான் எழுதத் தொடங்கியபோது அலற ஆரம்பித்த மேடை ஒலிபெருக்கி, இதோ திடீரென்று நின்று கருணை செய்கிறது. திகைத்துப் போய், 'ஆதிமூலமே' என்று மேலே பார்க்கிறேன். மின்விசிறி நின்று விட்டது. நிலைமையைப் புரிந்து கொண்டேன். அடிக்கடி ஏற்படுவது போல மின்சாரம் இந்த வட்டாரம் முழு வதற்குமே சமதர்ம முறையிலே நின்று போய் விட்டது! ஒலிபெருக்கியின் ஓலம் நின்றதில் நிம்மதிதான். ஆனாலும் விசிறி சுழல வில்லையே. முறையீடு செய்ய வேண்டிய மின்சார அலுவலகத்திற்குத் தொலை பேசி யிலே சொல்லலாம் என்று எழுந்திருக்கிறேன். ஆனால் ஒரு சிறிய சந்தேகம். தொலைபேசி வேலை செய்கிறதா?



''நான் எவ்வளவு குடிச்சாலும் நிதானம் தவறும நம்ம வீட்டுக்கே வந்திடுவேன். கதவைத் திறடி கமலா.''

''யாரய்யா அது... நடு ராத்திரிலே வந்து கதவைத் தட்டிக்கினு போலீஸ் ஸ்டேஷன்லே கலாட்டா செய்யறது?''

–தங்கபாரதி

மனச் சேற்றில் ஒரு நடவு

கனகவல்லி சாரங்கபாணி

காலையிலிருந்து அவதி அவதி என்று நடந்து வந்து கொண்டிருந்தாள் சின்னப் பொண்ணு.

'தொறக்கிறபடி அணையைத் தொறந்து வுட்டிருந்தா இந்நேரம் பாதி வயல்ல நடவு முடிஞ்சிருக்கும். ஜனங்க வயிறும் நெறஞ் சிருக்கும்....'

காவிரியில் தண்ணீர் விடப்படாததால் பாலைவனமாய்க் காட்சி யளிக்கும் தஞ்சை யின் அந்தக் கிராம வாசிகள் தமக்குள் அங்கலாய்த்துப் பேசுவதைக் கேட்டபடியே குறுக்கே நடந்து முன்னேறினாள் சின்னப் பொண்ணு.

''ஏலேய்... சின்னப்பொண்ணு... எங்க இப்படி அவதியாய்... நாவப்பனுக்குச் சோறு கொண்டு போறியா... வேலைக்குப் போயிருக் கானா?''

''ஆமாமுங்க... பெரிய பண்ணை ஒத்தை யடி போர் செட்டு நிலத்துல நாத்து மாலை கோத்து விடுது. நடவு ஜனங்களுக்கு சோறு குடுத்துட்டு அதே பண்ணையோட கீழக்கோடி வயலுல நான் நடவுக்குப் போவணும்.'' நின் றால் தாமதமாகும் என்று நிற்காமல் பேசிக் கொண்டே போய்விட்டாள்.

காலும் உடம்பும் அசந்தன. முதல் நாள் மீந்த சோற்றில் ஒரு பிடி அள்ளி உப்பும் நீரும் விட்டு மூத்த பெண்ணையும் அடுத்தவனை யும் குடிக்கச் சொல்லிப் பொறை வாங்கித் தின்னப் பத்துக் காசு கொடுத்து மிகுந்த சோற்றை நாவப்பனுக்கு அள்ளிக்கொண்டு வந்துவிட்டாள் அலுமினியத் தூக்கில். இவள் ரோட்டுக் கடையில் டீ குடித்ததோடு சரி.

ஆண் பெண் இருவரும் சம்பாதித்தால் தான் இருவரும் சாப்பிடலாம், ஒரு வேளை யாவது நல்ல சோறு.

சின்னப் பொண்ணு நாவப்பனுக்குச் சோறு கொடுத்துவிட்டு, தான் நடவு நட வேண்டிய வயலை நெருங்கியபோது மூக்காயி, ராக்கு, பேச்சி, பவழம் என்று பலரும் குனிந்து நடவு நட்டுக் கொண்டிருந்தார்கள். ''பண் ணைக்காரிச்சியோல்லியோ அதான் இம்மாம் லேட்டாய் வரா....!'' என்று புகையிலையைக் குதப்பி டைக்குப் பேசினாள் ராக்கு.

''தே! சும்மா கெட..!'' என்று அதட்டினாள் பேச்சி. ''ஏன் சின்னப் பொண்ணு! இம்மா நாழி? மூஞ்சி யெல்லாம் வதங்கிக் கிடக்கு. காலைல ஏதும் குடிச்சியோ... போய் ஜில் லுனு போர் செட்ல ரெண்டு கை தண்ணி அள்ளி மூஞ்சில அடிச்சுக்கிட்டு வா. தெம் பாய் இருக்கும்!'' என்றாள்.

''ஒண்ணும் குடிக்கலையாத்தா.. இருந்த சோறு புள்ளை ரெண்டுக்கும், புருஷன்கார னுக்கும்தான் சரியா யிருந்தது...'' முகத் தில் தண்ணீரை வாரி அடித்துச் சற்று ஆசுவாசப் படுத்திக் கொண்டு சின்னப் பொண்ணு சொன்னாள்.

''அடிப்பாவி! பனைமரத்தாங் கரையிலே அலுமினியப் போகினியில என் மாமியா கெழத்துக்குத் தண்ணிச்சோறும், கடையில வாங்கிய எலுமிச்ச ஊறுகாயும் வச்சிருக் கேன். ரெண்டு கைசோறும் ஒரு துண்டு ஊறுகாயும் துண்ணுட்டு நடவு நட வா'' என்றாள் பேச்சி.

ஜில்லென்று பழைய சோறும் வயணமாய் எலுமிச்சை ஊறுகாயும் அமிர்தமா இருந் தது. பிள்ளைத்தாய்ச்சியான சின்னப் பொண்ணுக்கு. உண்டு, ஒரு துண்டு புகை யிலையும் வெற்றிலைச் சீவலும் குதட்டில் அடக்கி நடவு நட வயலில் இறங்கினாள்.

''ஆமாம்... ஏந்தே. இந்நேரம் மாமி யாக் கெழவி இல்லியா? ஊட்டு வேலை பாக்க...'' என்று கேட்டாள் பவழம்.

''ஒரு வாரமாச்சு, இது சின்ன மவன் கிட்டப் போயி. சனி, நடவு ஒரு வேலையும் இல்லாதபோது சோத்துக்குப் பாரமுன்னு எங்கிட்ட விரட்டி வுட்டுட்டா ஓர்ப்படியா. நான் ரெண்டு புள்ளையும், நாங்களும் குடிக் கிற கஞ்சியில நீயும் ஒரு டம்ளர் குடிச்சுக் கன்னு எங்கிட்டே வச்சுக்கிட்டேன். ஒரு வாரத்துக்கு முந்தி வடக்குத் தெரு எஜ மான் மாட்டுக் கொட்டகை சாணி அள்ள, மூணு சலம் நெல்லு, தெனப்படி காசு ஐம்பது பைசா கூட ஒத்துக்கிட்டு மாமியாளை வேலைக்கு வச்சுக்கிட்டாரு. மாமியா வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கிறான்னதும் எட்டணாவுக்கு அல்வா பட்சணம் வாங்கிக் கொடுத்து அழைச் சுக்கிட்டுப் போயிட்டான் கொழுந்தன். கெழமும் சம்பாதிக்கப் போட. அங்க போயி ருக்கு. வெவரம் தெரியாத புள்ளைகளோட வயத்தைச் சாக்கக்கிட்டு நான் தும்பப்

படுதேன்!'' என்று புகையிலையைத் துப்பினாள் சின்னப் பொண்ணு.

''உம்... சுருக்க... பராக்குப் பாக்காம, நெருக்கி நடுங்க.'' என்று அகட்டினான் சின்னக் கார்வாரி சண்முகம். அவன் பார்வை சின்னப் பொண்ணு ஆறு மாதம் நிறைந்திருப்பதால் பருத்திருந்த மார்பகங்களையும் பின்புறத்தையும் ஆவலாய் நோக்கின.

வல்லடி, வாயாடி அவன் என்பதால் நடவுப் பெண்டுகள் அவனிடம் அதிகம் இடக்கு பேசுவதில்லை.

நேரமாகி விட்டதால் எல்லாப் பெண்



ளும் கரையேறிவிட்டனர். நேரம் சென்று வந்த சின்னப் பொண்ணு நட்டு முடிக்க மூனு முடிச்சு நாற்றும், சேறு குழம்பிய கொஞ்சம் நிலமும் இருந்தது.

''நான் வேணு ஒன்னோட நடட்டுமா?'' என்றாள் பேச்சி.

''வேண்டாம் அத்தை. நீங்க முன்னாடி வீட்டுக்குப் போனு என் ஆட்டிலேயும் சித்த சோத்துக்கு ஒலே வையுங்க. நட்டுட்டு ஓடி வந்துடறேன்.... சிறுக்கி மவ, நேத்திக்குச் சோறு கொதிக்கிறப்போ, கஞ்சி வடிச்சு உப்புப் போட்டுக் குடிக்கனுமின்னு, கஞ்சி வடிச்சிருக்கா... கையில் கஞ்சி பத்தி வெந்து கிடக்கு''என்றாள் சின்னப்பொண்ணு.

''அடி அல்பாயுசுல போற புள்ளை... இருந்தாலும் ஒன் பெரிய மவ துண்டை தான்... கைக்கு மருந்து போட்டியா?'' என்று அங்கலாய்த்தாள் பேச்சி.

''வாழைப் பட்டை நறுக்கிச் சாறு போட்டிருக்கேன். ஆத்தா... இன்னிக்குப் பண்ணையில் பணம் வாங்கிட்டுப் போயி வலங்கிமான் டாக்டருக்கிட்டே இட்டுக்கினு போவோனும்'' என்றாள் சின்னப் பொண்ணு.

பேச்சியும் போன பிறகு, ஒரு மணி நேரம் தனக்குள் தானே தன் விதியை நொந்தபடி மாமியார்க் கிழவியையும் புருஷனையும் பொருமினபடி வயிற்றில் குழந்தை புரண்டு கொடுக்கும்போதெல்லாம், சேற்றில் நிற்கும் கால்களில் கொறக்களி இழுக்க, பசித்த வயிற்றோடு நட்டு முடித்துக் கரை ஏறினாள் சின்னப் பொண்ணு.

''இந்தாலே, சின்னப் பொண்ணு இப்பிடி வா!'' போர் செட் மறைவில் அழைத்தான் சண்முகம். சின்னப் பொண்ணு வாய்க்காலில் தேங்கியிருந்த நீரை முகத்தில் வாரி அடித்து ஒரு கை அள்ளிக் குடித்துவிட்டு வந்தாள்.

''கூப்பிட்டீங்களா... ஆண்டை....''

''ம்...ம்... பசியோட இருக்கியேன்னு குவளையிலே டீயும், பட்சணமும் வாங்கி யாந்தேன். சாப்பிடு...நீ எவ்வளவோ அளகா இருக்கே சின்னப் பொண்ணு...''

சண்முகம் கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனித நடமாட்டமே இல்லாத தைரியத்தில் சின்னப் பொண்ணுவின் கையைப் பிடித்தான்.

''விடுய்யா... சீ!... நெனச்ச நேரத்துக்கு எவனுக்கும் முந்தானை விரிக்கிற சிறுக்கின்னு நெனைச்சியா என்னை....''

''சரிதான் கூவாதே சும்மா... எவன் இருக்கான் இங்கே...?'' என்றபடி அவள் கைகளை முறுக்கி அணைக்க முற்பட்டான் சண்முகம்.

சட்டென்று விலகினாள் சின்னப்பொண்ணு.

''எவனும்தாய்யா இல்லே இங்கே... ஆறு ஆயிரம் கண்ணுடையா... என் மகமாயி பாத்துக்கிட்டே இருக்கா... இங்கே என்னைப் பெண்டாளத் துடிக்கிறியே... என் புருசன் நாத்து மட்டை கோக்குதே... நாளைய நடவுக்கு... புளியஞ்சேரி பெரிய வயலுல... அங்கே ஒம்பொஞ்சாதிதான்யா நாத்துக்கள்லேந்து 'குதிரைவாலி' களை புடுங்கிட்டு நிக்கறா... உனக்கு ஆசை வந்த மாதிரி என் புருசனுக்கும் ஆசை வந்தா....'' நிறுத்தினாள் சின்னப் பொண்ணு.

சண்முகம் யாரோ தன்னை அறைந்தாற் போல ஒடுங்கினான்.

அவன் மனைவி டவுன் வாசத்தில் பழகிய புதுப் பெஞ்சாதி. சதா நிமிர்ந்த ஆண்களை வளைக்கிறாற்போன்ற பார்வை.. ஒரு சினிமா தவறாமல் பார்த்து அந்த நடிகைகள் போல் தளுக்கி, குலுக்கி நடப்பாள். சண்முகத்தைச் சம்பளம் வாங்கி வரும் அன்று மட்டுமே மதிப்பாள்.

புளியஞ்சேரி பெரிய வயலில் அவள் ஒண்டி ஆளாகக் களை எடுக்கிறாள் என்றால்... நாவப்பன் மயங்கி அவள் கை பிடித்து இழுக்க வேண்டும் என்பது இல்லை. ''நீயெல்லாம் என்னய்யா ஆம்பளை... பண்ணையாள் நாவப்பனைப் பாரு... தோளும், கையும் மீசையும், கிருதாவும் எம்புட்டு அமர்க்களமா இருக்குது....' என்று சண்முகத்திடம் எத்தனையோ முறை குறைப்பட்டுக்கொண்டிருக்கும் அவளை அவனே படக்கினாலும் அதிசயம் இல்லை....

''என் தாய்... மகமாயி... மன்னிச்சுடு அம்மா... சின்னப் பொண்ணு... மிருகம் கூட கர்ப்பமான பெண் மிருகத்தைத் தூரத்தாது. சனை புத்தியோட நடந்துக்கிட்டேன்....'' என்று சண்முகம் கதறினான்.

''பரவாயில்லே ஆண்டை... மனுச புத்தி சபலப்படறது சகஜம்தானே... நான் ஊட்டுக்குப் போறேன்... நீங்களும் கலவரப் படாம ஊட்டுக்குப் போங்க.. ஒங்க பொஞ்சாதியை என் புருசன் ஒண்ணும் செஞ்சுடாது.'' வயிற்றுப் பசியும் பிள்ளைச் சுமையும் நடையைத் தளரச் செய்தாலும் கற்பை அணிந்திருக்கும் கம்பீரம் முகத்தில் ஒளிர அந்த வயல் சேற்றில் பூத்த சின்னப் பொண்ணு ஒத்தையடிப் பாதையில் தன் வீட்டைப் பார்க்க நடக்கலானாள்.

பட்சணப் பொட்டலத்தில் எறும்புகள் மொய்க்க, சூடு ஆறிய டீயில் ஆடை படிந்தது. சண்முகம் சின்னப் பொண்ணு போவதைக் கை கூப்பிப் பார்த்துக்கொண்டு நின்றான்.

நாம் ''மொட்டு, மலர், வாடிய ரோஜா'' என்று சொல்வதை ஜப்பானியர்கள்,

அழகாக இருக்கப் போகும் ரோஜா
அழகாக இருக்கும் ரோஜா
அழகாக இருந்த ரோஜா

என்று சொல்வார்கள்.

—எம். ராகவன்

ஜகஜீவன்ராம் இந்திரா காங்கிரசில் சேரமாட்டார்!



● பாபு ஜெகஜீவன்ராம் மீண்டும் இ. காங்கிரஸில் சேரப் போகிறார் என்றும் அவர் மகன் சுரேஷ்ராமுக்குக் கட்சியில் முக்கிய பதவி தரப்பட வேண்டும் என நிபந்தனை விதித்திருக்கிறார் என்றும் 16 10 83 கல்கி இதழில் ஒரு துணுக்குச் செய்தி வெளியாகியுள்ளது. இது முற்றிலும் பொய்யான செய்தி என்பதுடன் அவதூறுமாகும். இதற்காகத் தங்கள் மீது ஏன் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கக் கூடாது?

சென்னை-5 தெய்வசிகாமணி
காரியதரிசி, தமிழ்நாடு கா. கமிட்டி (ஜே)

[ஜெகஜீவன்ராம் இ.காங்கிரஸில் சேரப்போவதில்லை என்றும் அதற்கு அவர் நிபந்தனை ஏதும் விதிக்கவில்லை என்றும் அறிந்து மிக்க மகிழ்ச்சியும், மன நிம்மதியும் அடைகிறோம். -ஆர்]

● ''விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்'' என்ற நூலின் விமர்சனத்தைப்பார்த்தேன். திராவிட இயக்கங்களின் முகமூடியைக் கிழித்தெறியும் முயற்சியில் ஸ்ரீ ராமமூர்த்தி வெற்றி கண்டுள்ளதை மறுக்கவில்லை. ஆனால் பல விவரங்கள் ஒன்று முழுமையாகத் தரப்படவில்லை; அல்லது திரித்துக் கூறப்பட்டுள்ளன. திராவிடக் கழக அன்பர்கள் ''மத'' அடிப்படையில் ஒழிந்து தர்மத்தைத் தாக்கினார்கள் என்றால், இவர் இந்த நூலில் 'வர்க்க' அடிப்படையில் தாக்கியுள்ளார்.

சென்னை-15 சர்மா

● ''மண் வாசனை'' திரைப்படத்தில் மஞ்சு விரட்டில் தோற்றுப்போன காளையைக் கடப்பாறையால் குத்திக் கொல்வதைக் குறை கூறியிருக்கிறார் ஆவிஷன். (30—10—83 இதழ்)

ஆத்திர புத்தியும் வெறியும் ஒரு மனிதனை எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதை உணர்த்துவதுதான் காட்சியின் நோக்கம்.

நாகர்கோவில்-629001 குமரி அமுதன்

● 'ஓவியனின்' கட்டுரையான ''பகல் கனவு காணுங்கள்'' பலே ஜோர். மன மிருந்தால் மார்க்கமுண்டு.

கிருஷ்ணகிரி அணை அ. விசுவநாதன்

● 'கலைஞர் இல்லாத சட்ட சபை'யைப் பற்றி இரு சட்டமன்ற உறுப்பினர்களின் மாறுபட்ட கருத்துக்களை ஒரே சமயத்தில் கண்டு என் மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது.

திருக்கோவலூர் ஆர். சுப்பா ராவ்

● கல்கி தீபாவளி சிறப்பிதழில் ''ஆபத்தைத் தவிர்க்க குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள்'' என்ற தலைப்பில் வந்திருந்த அறிவுரைகளை எங்கள் மருந்தகத்தின் சார்பில் அச்சிட்டு, மன்னார்குடி நகர மக்களின் நலன் கருதி விநியோகித்தோம்.

மன்னார்குடி எஸ். ராமச்சந்திரன்
சீனிவாசா மெடிகல்ஸ்

● 23—10—83 கல்கியில் திருப்பூவணம் கட்டுரையுடன் பிரசுரிக்கப்பட்ட படங்கள் என் பெயரில் வந்துள்ளன. இவை நான் எடுத்தவை அல்ல.

மாயூரம் என். ராமகிருஷ்ணு

(மேற்படி படங்களை எடுத்தவர் திரு. கே.ஆர். துளசிராம். தவறு நேர்ந்தமைக்கு வருந்துகிறோம். -ஆர்]

● தீபாவளி சிறப்பிதழ் மற்ற இதழ்களை விடத் தனி சிறப்பாக அமைந்திருந்தது. குறிப்பாக 'வீரம் சினிமாவில் மட்டுமே!' தலையங்கம் வீரம் குன்றாமல் பாரபட்சமின்றி இருந்தது.

சென்னை-1 -நாகை. ஜி. அஹமது

● கதாசிரியை வாஸந்தி தன் எழுத்துக்களால்... ரோமாபுரி வீதிகளை... அனுபவங்களை... கண்டு ரசித்தவைகளை... அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார். தொடரட்டும்.

குளச்சல் எம். முகம்மது இப்ராஹீம்

● ஒழுக்கத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் பெயர் பெற்ற ஆர். எஸ். எஸ்.ம், இ.மு.க. தொண்டர் படையும் ஒன்றா? பயிற்சி பெறாதபோதே அட்டூழியம் செய்கிறார்கள். இனி பயிற்சியும் பெற்றால்......!

புதுக்கோட்டை ஆர். வி. பிரசாத்

● 'சிலபல'வற்றைக் கல்கியில் தொடர்ந்து எழுதப்போகும் சோமு அவர்கள் தமது கட்டுரைத் தொடரைப் பற்றிக் கொடுத்திருக்கும் முகவுரையைப் படிக்கும் போதே பலரது முகத்திரைகள் கிழிபடப்போவது போலத் தெரிகிறதே; பல அரிய விஷயங்களை அறிவதற்கான சுபசூசகம்.

சென்னை—14 ஐயாறு எஸ். வாசுதேவன்



வியப்பூட்டும் வியென்னு


வாஸந்தி

3

என்னுள் நம்பமுடியாத ஒரு திகைப்பு ஏற்பட்டது. இப்படியும் ஒரு கற்பனைத் திறன் இருக்குமா என்கிற திகைப்பு. அது சாதாரணக் கற்பனை இல்லை. தெய்வீகக் கற்பனை. மைக்கலாஞ்சலோவின் பெண் வடிவங்கள் எல்லாம் அவருடைய காதலி விக்டோரியா கலோனாவின் சாயல் கொண்டவை என்கிறார்கள். தெய்வாம்சம் பொருந்திய அவரது கற்பனைத் திறனினால் சிறிய பெரிய மனித சிறுமைகளையெல்லாம் தாண்டி நாம் மிக உயர்ந்த நிலைக்குச் சென்று விடுகிறோம் அந்த ஸிஸ்டைன் சாப்பலில்.

இந்த ஆலயம் பதினைந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாம். பல புகழ் பெற்ற கலைஞர்களின் திறன் இதன் அறைகளையும் சுவர்களையும் அலங்கரித்திருந்த போதிலும் அதில் திருப்தி யடையாமல் அப்போதிருந்த அரசன் பதினாறும் நூற்றாண்டு ஆரம்பத்தில் இளம் மைக்கல் ஆஞ்சலோவை ஆலயத்தின் விட்டத்தில் சித்திரம் தீட்ட அழைத்தான். மைக்கல் அதுவரை இந்தத் தினுசான (Frescoes) சித்திரங்களைத் தீட்டியதில்லை. சிற்பக் கலை பயின்று பெரிய சிற்பங்களை வடிப்பதிலேயே ஆர்வமாயிருந்தார். (அவருடைய மோஸஸ் சிலை ஒரு பிரும்மாண்ட அற்புதப் படைப்பு) முன்பின் சித்திரம் வரையாத மைக்கல் ஆஞ்சலோவுக்கு அரசனின் ஆக்ஞை பெரிய சவாலாக இருந்திருக்க வேண்டும். இளம் வயதானதால் அதை அலட்சியமாக ஏற்று உதவ வந்த மற்றச் சித்திரக்காரர்களைப் புறக்கணித்துச் சுயமாகக் கற்பனை செய்து அந்த மிக உயரமான கூரையில் ஓவியங்கள் தீட்டினான். ஆதம் ஏவாளின் பிறப்பையும், அவர்களது வீழ்ச்சியையும், கிறிஸ்து பிறப்பையும் இறப்பையும் வர்ணித்திருக்கும் அற்புதத்தை நேரில் பார்த்தால்தான் புரிந்து கொள்ள முடியும். சித்திரங்கள் பிரும்மாண்ட அளவில் இருக்கின்றன. சமமாக இருக்கும் விட்டத்தில் ஒரு முப்பரிமாண தோற்றத்தை வரவழைத்திருப்பது மைக்கல் ஏஞ்சலோவின் பிரத்தியேக முத்திரை. வாடிக்கனின்

✖ ரோம் நகரத்தில் கலோசியம்



செயின்ட் பீட்டர்ஸ் கத்திட்ரலில் ஏற்படாத பக்தி உணர்வு எனக்கு இங்கு ஏற்பட்டது.

ஆலயத்துக்கு வெளியே ஏகமாகச் சிறிய பொம்மைகள், மற்றும் நினைவுப் பொருட்களை விற்கிறார்கள். நம்மூர் கோவில்களுக்கு வெளியே இருப்பது போல். ஆனால் கொஞ்சம் கூட இரைச்சல் இல்லை, உயர்ந்த பேச்சுக் குரல் இல்லை. கண்ட இடங்களில் குப்பைக் கூளங்கள் இல்லை. எப்படி இப்படிப் பட்ட கட்டுப்பாடான வாழ்க்கை இந்த ஜனங்கள், மிகப் புராதனமான சரித்திரம் கொண்ட ஜனங்கள், வாழ்கிறார்கள் என்று எனக்கு ஒவ்வொரு விநாடியும் வியப்பு ஏற்பட்ட வண்ணம் இருக்கிறது. எல்லாமே இயந்திர நுணுக்கத்துடன் இயங்குகிறது. வெகு இயல்பாக பஸ் போக்குவரத்தோ, ரயில் நிலையமோ, இயங்குகின்றன. எதிலும் ஒரு பிழை ஏற்படாத படி இந்த நேரத்தில் இன்ன வண்டி புறப்படும், வரும் என்றால் அதைப் பற்றின எந்தச் சந்தேகத்துக்கும் இடமில்லை. விநாடிகூடப் பிசகுவதில்லை. அதே கட்டுப்பாடுடன் இத்தாலியர்கள் ஓய்வு எடுப்பதிலும் இருக்கிறார்கள். 'ஸியஸ்டா' எனப்படும் மதிய நேரத் தூக்கத்தை எந்தக் காரணத்துக்காகவும் விட்டுக் கொடுப்பதில்லை. இத்தாலிய ஆபீஸ்களும் மியூஸியம்களும் ஒன்றிலிருந்து மூன்றுவரை மூடப்பட்டு விடுகின்றன. இந்தக் காரணத்தினால் ஒரு முக்கியமான மியூஸியத்தைப் பார்க்க முடியாமல் போய் விட்டது எங்களுக்கு.

ரோமாபுரியின் ஒவ்வொரு மூக்கிலும் ஓர் இனிய ஆச்சரியம் இருப்பதாக முன்பே சொன்னேன். இனிய மட்டுமில்லை பிரும்மாண்ட ஆச்சரியம். அதில், முதல் நூற்றாண்டைச் சேர்ந்த 'கலோசியம்' ஓர் அற்புத உதாரணம். ரோமாபுரி சரித்திரத்தின் ஒவ்வொரு ஏடும் கலோசியத்துடன் சம்பந்தப்பட்டது என்கிறார்கள். செங்கல்லாலும் கல்லாலும் வட்ட வடிவில் மிக உயரமான சுற்றுச் சுவர் கொண்ட பெரிய மைதானம். அதற்கு நடுவில்தான் விளையாட்டுப் போட்டிகளும், அடிமைகளை மிருகங்களுக்கு இரையாக்கும் விபரீத விளையாட்டுகளும் நடந்தனவாம். அதற்குள் நுழைந்ததுமே எனக்கு அண்டிரோக்ளிஸின் ஞாபகம் வந்தது.

✕ ஆஸ்திரிய கட்டடக்கலை



மிகக் குறுகிய காலமே ரோமில் இருக்க நேர்ந்த எனது துர்ப்பாக்கியத்தை நினைத்து வருந்தியபடி நான் ஆஸ்த்திரியாவின் தலைநகரான வியன்னாவுக்குப் பயணமானேன். 'இதுவாவது பார்க்க முடிந்ததே என்று சந்தோஷப்படு' என்று வழக்கம் போல் நண்பர் குல்ஜார் அத்தைப் பாட்டித்தனமாகச் சமாதானப்படுத்தினார்.

ரோமின் இதமான வெய்யிலுக்கு நேர் எதிரிடையாக வியன்னா மழையும் காற்றுமாகக் குளிர்ந்து. எங்களை வரவேற்க வந்த திரு தலீப் சிங் ஒரு சுவாரஸ்யமான மனிதராக இருந்தார். நாங்கள் தங்கிய ஒரே நாள் பொழுதை முழுமையாக உபயோகிக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தார். இறங்கியபொழுது இரவானதால் எதுவும் பார்க்க முடியவில்லை. வியன்னாவில் இரவு ஏழு மணிக்குப் பிறகு மனித நடமாட்டமே இருக்காதாம். பாரிஸ் லண்டனைப் போல் தெருக்களில் கோலாகல வெளிச்சமும் இருக்காதாம். மறு நாள் காலை சீக்கிரமாக வெளியில் கிளம்பினோம்.

வெளியில் காலடி வைத்ததும் பளிச்சென்று பார்வையில் பட்டது தெருக்களின் நம்ப முடியாத சுத்தம். நகரம் புத்தம் புதிதாகத் தெரிகிறது. இத்தனைக்கும் பக்கத்துப் பக்கத்தில் நெருக்கமாக இருக்கும் நாந்தாறு மாடிக் கட்டிடங்களின் புற உருவமெல்லாம் ரோம் நகரத்தைப் போலப் பழைமையானவை. ஆனால் புதிதாகக் கட்டப்பட்டவை போல் தூசும் அழுக்கும் இல்லாமல் பளபளக்கும் கண்ணாடி ஜன்னல்களும் ஜன்னல்களில் அழகிய சிறு பூந்தொட்டிகளும் தெரிகின்றன. ஆஸ்திரியர்களுக்குப் பூ என்றால் ரொம்ப விருப்பமாம். காய்கறியை நாம் அன்றாடம் வாங்குவது போல் மலர் ஜாடிகளை அலங்கரிக்கத் தினமும் புதிதாகப்பூக்களை வாங்குகிறார்கள். எந்த விருந்துக்காவது நாம் சென்றால் அவர்கள் கொடுக்கும்(ஹோட்டலில்தான் சாப்பாடு. வீட்டுக்கு அழைக்க மாட்டார்களாம்.) சாப்பாட்டின் விலையை விட நாம் வாங்கிப் போகும் பூச்செண்டின் விலை அதிகமாக இருக்கும் என்றார் தலீப் சிங். ஆஸ்திரியர்கள் தங்களிடையே கூட நெருக்கமாய்ப் பழகாத சுதந்திரப் போக்குடையவர்கள் என்றார் அவர். முன்னால் தெரிவிக்காமல் நிச்சயமாக எந்த ஆஸ்திரியர் வீட்டுக்கும் பக்கத்து வீட்டில் வசிப்பவராக இருந்தாலும் போய்விட முடியாதாம். மற்றவர்கள் செய்யும் அசட்டுத்தனமான பொறுப்பற்ற பிழைகளையும் இலேசில் மன்னிக்க மாட்டார்களாம். அங்கெல்லாம் ஸிக்னல் மேலே சென்றவர் அதை ரீவிஸ் செய்

நால்தான் கீழே நிற்பவருக்கு லிஃப்ட் இறங்கும். ஒரு முறை தனீப் ஸிங்கின் மனைவி ரிலீஸ் செய்ய மறந்து போனதில் பக்கத்து வீட்டுக்காரிக்கு லிஃப்ட் இறங்காமல் அவள் படியேறி வர நேர்ந்ததாம். மகா கோபம் வந்து விட்டதாம் அவளுக்கு. இப்படியும் சமூகப் பொறுப்பில்லாமல் ஒரு பிரஜை இருக்கலாமா, நான் கேஸ் போடப் போகிறேன் என்று சத்தம் போட்டாளாம். 'மிஸஸ் தனீப்ஸிங் அடிக்கடி தன் குழந்தைகளை மெதுவாகப் பேசுங்கள். அதிர்ந்து நடக்காதீர்கள்' என்று சொல்வதை நான் கவனித்தேன். சமையலறையில் கடுகும் வெந்தயமும் (நான் சாம்பார் டெமான்ஸ்ட்ரேஷன் செய்தபோது) கொட்டி விட்டது. அதை அள்ள அவர் மகள் வாக்யூம் க்ளீனரைக் கொண்டு வந்தாள். மிஸஸ் தனீப் ஸிங் அவசரமாகத் தடுத்தார். ''அதெல்லாம் அப்படியே இருக்கட்டும். இன்று ஞாயிற்றுக் கிழமை. மேல் வீட்டுக்காரி தூங்கிக் கொண்டிருப்பாள். சத்தம் கேட்கும்!''

வியன்னாவில் சனிக் கிழமை காலை ஒரு நூதனமான சந்தை இருக்கிறது. ஃப்ளீ மார்க்கெட் என்கிறார்கள். பழைய சாமான்களையெல்லாம், ஒட்டை, ஒடிசல் முதல் கொண்டு மலிவாக விற்கிறார்கள். அவற்றை வாங்க எத்தனை கூட்டம்! சனிகாய் மார்க்கெட்டும் மிக சுத்தம். புதிதான ஆரோக்கியமான பண்டங்களும் காய்கள். வெள்ளை, சிவப்பு, பச்சை நிறங்களில் குடமிளகாய். சிவப்பு, கறுப்பு, இளம் பச்சை நிற முட்டைக்கோஸ்கள், பெரிய பெரிய கூடைகளை வரிசையாக மேடை மேல் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொன்றிலும் விலை அட்டையில் நிற்கிறது. தப்பித் தவறிக் காயைத் தொட்டுப் பார்த்தீர்களோ தொலைந்தீர்கள்! விற்பவர்களுக்கு மகா கோபம் வந்துவிடும். எந்தக் காய் வேண்டுமோ சொன்னால் எடை பார்த்து அவர்கள் கொடுப்பார்கள். நம் ஊரில் செய்வது போல் காயின் தரத்தைப் பற்றிச் சந்தேகிக்க இங்கு வாய்ப்பே இவர்கள் தருவதில்லை.

வியன்னாவின் பரிசுத்தமான தெருக்களின் அழகை நான் ரசிக்கையில் இன்னொரு விஷயத்தைக் கவனித்தேன். நமது சங்கீத மும்மூர்த்திகளைப் போல் பல சங்கீத மூர்த்திகளுக்கும், கலைஞர்களுக்கும் வியன்னா பிறப்பிடம். ஆஸ்திரிய அரசர்கள் கூடச் சிலர் சங்கீத விற்பன்னர்களாக இருந்திருக்கிறார்கள். மோஸார்ட், பீத்தோவன், வாக்னர், கஸ்டவ் மாலர், ஸ்ட்ராஸ் என்று வரிசையாகப் பல அற்புத இசை விற்பன்னர்கள் வாழ்ந்து பெருமை தந்த இடம் இது. ஃப்ராய்ட் இருந்த இடம். வியன்னா இவர்களிடம் எத்தனை மதிப்பு வைத்திருக்கிறது என்று ஒவ்வொரு தெருவின் பெயரும் அங்கங்கே முச்சந்திகளில் தென்படும் சிலைகளும் தெரிவிக்கின்றன. இங்கு அரசியல்வாதிகளுக்கு மதிப்பே கிடையாதாம். எந்த அரசியல்வாதியின் சிலையோ அல்லது அவரது பெயர் கொண்ட தெருவோ கிடையாது என்று தனீப் ஸிங் சொன்னார்.

வியன்னாவில் பல அற்புத அழகுடைய கட்டிடங்களும் (அவர்களது பாராளுமன்றம் ஒரு மாபெரும் கிரேக்கக் கோயிலின் அமைப்பைக் கொண்டது) அழகிய அரண்மனைகளும் மிக அழகாக அலங்கரிக்கப்பட்ட கடைகளும் இருக்கின்றன. ஆனால் நான் மிகவும் ஆர்வமாகப் பார்க்க விரும்பியது வியன்னாவின் புகழ் பெற்ற ஸ்டேட் ஆபராவை. 17 18ம் நூற்றாண்டில் கட்டப்பட்டுச் சீரும் சிறப்புமாகப் பல பெரிய சங்கீத இயக்குனர்களின் ஆபரா நிகழ்ச்சிகளினால் வளர்ந்து உலகப் புகழ் பெற்ற இதைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருந்தேன். இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது குண்டு பட்டு எரிக்கப்பட்டு அடுத்த பத்து வருஷங்களில் பழைய படியே முழுவதும் பழுது பார்க்கப்பட்டது. நான் டில்லியை விட்டுக் கிளம்புவதற்கு முன்பே ஒரு டிக்கட் புக் செய்யும்படி சொல்லியிருந்தேன். நான் எதிர்பார்த்த நிகழ்ச்சி மாறிவிட்டதால் தனீப் ஸிங் புக் செய்யாமல் விட்டு விட்டிருந்தார். எனக்கு மிகவும் ஏமாற்றமாய்ப் போயிற்று. அன்

கார்த்திகை விளக்கு



கல்கி வாசகர்களின் வாழ்க்கை ஒளிமயமாக இருக்கப் பிரார்த்தனையுடன் கார்த்திகை தீபம் ஏற்றியிருக்கிறோம் மேலட்டையில்.

வினோதமான, கலையழகு மிக்க விளக்கேற்றி, கரங்களில் ஏந்தி நிற்பவர் குமாரி **இந்துமதி கோபால்.**

திருமதி சித்ரா விஸ்வேசுவரன் நாட்டியப் பள்ளி மாணவியான இவர், பி. ஏ. முதலாண்டு படிக்கிறார். நாட்டியக் கலையின் ஏதேனும் ஓர் அம்சம் குறித்து ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற வேண்டும் என்பது இவர் எதிர்காலத் திட்டம்.

தகவல், வண்ணப்படம்: ராஜ்

வரவேற்பு

அபிமானவல்லி



● எனது அபிமான எழுத்தாளர் கி. ராஜேந்திரன் அவர்களின் துள்ளும் தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ள 'அபிமானவல்லி' முதல் அத்தியாயத்திலேயே எங்கள் அபிமானத்தைப் பெற்றுவிட்டாள்.
லெட்சுமாங்குடி கோபிநாத்

● 'அபிமானவல்லி' சரித்திரத் தொடர் கதையின் ஆரம்பமே மத்தகஜத்தின் மிடுக்கும், கம்பீர நடையும் ஒருசேர ஜோராய்க் களை கட்டிவிட்டது.
ஸ்ரீரங்கம் ஆர். கோபாலன்

● கல்கியின் மைந்தன் தரும் ''அபிமான வல்லி'' எங்களைத் திருப்திப்படுத்திவிட்டது.
மாதேமங்கலம் வெ. கோபால்

● கல்கி ஆசிரியரின் 'அபிமானவல்லி' சரித்திரத் தொடர் வாசகர்களின் அபிமானத்தைப் பெறும் தொடராக அமையும்.
குரோம்பேட்டை. புலியூர் பிரபா

● ஆசிரியரின் சரித்திரத் தொடரான 'அபிமான வல்லி'க்கு ஓவியர் லதாவின் தூரிகை அழகு சேர்க்கிறது.
மேலக்கிருஷ்ணன்புதூர் பிரபா லிங்கேஷ்

● அபிமானவல்லியின் ஆரம்பமே அருமை.
விருத்தாசலம்-1 சிவா

● விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பார்கள். அதேபோல் தொடர்ந்து வரத் துவங்கிவிட்ட 'அபிமானவல்லி'யின் சிறப்பு ஆரம்பமான இதழிலேயே பரிணமிக்கத் தொடங்கி விட்டது.
சிதம்பரம் தங்க. குஞ்சிதபாதம்

● யானைப் பாகனாக அறிமுகமாகும் வீரன் விக்கியண்ணன், அவனது காதலி அபிமான வல்லி ஆகியோரை அட்டையில் வண்ணத்தில் கண்டபோது, நேரில் பார்ப்பது போன்ற பிரமை எனக்கு ஏற்பட்டது.
மதுரை-1 எஸ். சாகுல் ஹமீது

றைய இரவு வாக்னரின் ஒரு ஆபரா இருந்தது. ஐந்து மணி நேர நிகழ்ச்சி. டிக்கெட்டே கிடைக்காது. கிடைத்தாலும் உங்களுக்கு ஒரு இழவும் புரியாது. உங்களுக்கு ஏன் இந்தக் குழந்தைத்தனமான ஆசை என்று தலிப் சொல்லிப் பார்த்தார். எனக்குச் சமாதானமாகவில்லை. ஆபராவுக்குள் நுழைந்தாலே ஜன்ம சாபல்யம் என்று தோன்றிற்று. விடாப் பிடியாக டிக்கெட் கவுண்டருக்குச் சென்றபோது தூக்கி வாரிப் போட்டது. ஹவுஸ் ஃபுல்! டிக்கெட்டின் விலையெல்லாம் ரூபாய் முந்நூறுக்கு மேல்! ஏமாற்றத்தைப் புரிந்துகொண்டு டிக்கெட் விற்பவர் ''நின்று கொண்டே பார்ப்பீர்களானால் 10 ஷில்லிங்குக்கு டிக்கெட் இருக்கிறது'' என்றார். தலிப் சிங்கின் சம்மதமில்லாமலே டிக்கெட்டுகளை வாங்கிக் கொண்டு 'எனக்கு இது அவமானம்' என்ற அவரது முணுமுணுப்பைச் சட்டை செய்யாமல் லிஃப்ட் இல்லாத அந்தக் கட்டிடத்தின் ஆறுவது மாடிக்குச் சென்றேன். நிற்கும் இடங்கள் எல்லாம் நிரம்பி வழிந்தன. எல்லாரும் இளைஞர்கள். கையில் சின்னப் புத்தகம் வைத்திருந்தார்கள். வாக்னரின் இசை கொண்ட புத்தகம் என்று பிறகு புரிந்து கொண்டேன்.

ஆபரா ஹவுஸுக்குள் இருப்பதே ஒரு பெரிய அனுபவம். மேனாட்டுப் படங்களில் பார்த்திருக்கிறேன். 18ம் நூற்றாண்டுக் கட்டிட அமைப்பு கனவுலகத்துக்கு அழைத்துச் செல்கிறது. நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்குப் பத்து நிமிஷம் முன்பு எல்லா ஸீட்களும் நிரம்பி விட்டன.

வாத்திய இசைக்குப் பிறகு திரை விலகிற்று. சமுத்திர அலைகள் பொங்கின. கடல் கன்னிகள் நீந்தி மிதந்தார்கள். 2,000 பேர் கொண்ட இருண்ட அரங்கில் ஊசி விழும் சத்தம் கூடக் கேட்கும். அவரவர் ஸீட்டுக்கு முன் சிறிய விளக்கு இருக்கிறது. அதன் வெளிச்சத்தில் எல்லாரும் தீவிரமாக வாக்னரின் சங்கீதப் புத்தகத்தைப் பிரித்துச் சங்கீதத்தில் ஒன்றிப் போயிருந்தார்கள். இதுதான் எனக்கு மிக ஆச்சரியமான விஷயமாகத் தோன்றிற்று. ஒரு பொழுது போக்கைக் கூட இத்தனை தீவிரமாக, சிரத்தையாக இவர்கள், அதிலும் இளைஞர்கள் எடுத்துக்கொள்வார்களானால் எப்படிப்பட்ட பிரஜைகள் இவர்கள்! இப்படிப்பட்ட பிரஜைகள் கொண்ட நாடு முன்னேறாமல் பின் என்ன செய்யும்?

(தொடரும்)

கால்பந்தாட்டம் தலைசிறக்க...

● தமிழ் நாடு கால் பந்தாட்டக் கழகத்தின் ஐம்பதாண்டு விழாவை யொட்டி, அகில இந்தியக் கால் பந்தாட்டக் கழகத்தின் துணைத் தலைவர் திரு என். விட்டல் அவர்களைப் பாராட்டி, அவருடைய நாற்பதாண்டு சேவைக்கு நன்றி தெரிவித்தது சென்னை கால் பந்தாட்டக் கழகம், அக்டோபர் இறுதியில்.

திரு விட்டல் என்ன சொல்லுகிறார்?

''முதன் முறையாக சென்னைக்கு நேஷனல் சாம்பியன்ஷிப் போட்டியை 1955ல் நான் கொண்டுவர முடிந்ததை எனது முக்கியமான பணியாகக் கருதுகிறேன். அதை வெற்றிகரமாக நடத்திக் காட்டியதற்குப் பரிசு கொடுப்பது போல், ரஷ்யக் கால் பந்தாட்டக் குழு சென்னைக்கு வந்து விளையாட முடிந்தது. அதே போல, 1981ல் பெடரேஷன் கோப்பை டூர்னமெண்டையும் சென்னையில் முதல் தடவையாக நடத்தினேன். முதல்வர் திரு எம். ஜி. ஆர். வந்து பார்த்துவிட்டு; மின் விளக்கு அமைத்துத் தர வாக்குறுதி அளித்தார். பிரகாசமான விளக்குகள் அமைக்கப்பட்டு, அந்த ஒளி வெள்ளத்தில் கால் பந்தாட்டப் போட்டியைக் காணலாம் விரைவில்.

''கால் பந்தாட்டத்தில் தரம் கூட வேண்டும். அப்போதுதான் போட்டிகளை நஷ்டமின்றி வெற்றிகரமாக நடத்த முடியும். கேரளத்திலும், வங்காளத்திலும் செய்வது போல, ஸ்பான்ஸர்ஷிப் முறை வந்தால், நம் தமிழ் நாட்டிலும் கால் பந்தாட்டப் போட்டிகள் இன்னும் பரவலாகவும், உயர்தரமாகவும், வெற்றிகரமாகவும் நடைபெறும்!''

திரு விட்டல் கால் பந்தாட்டக் கழகம் தவிர, திரு ஸ்ரீராமுடன் தமிழ் நாடு கிரிக்கெட் அசோஸியேஷனில் இணைச் செயலாளராகவும், தமிழ்நாடு ஒலிம்பிக் அசோஸியேஷன் துணைத் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.



ஐம்பதும் அறுபதும்

● இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியில், மங்களூர் ஓடுகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள் ஏராளம். ஆனால் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள நவீன தொழிற்சாலை ஒன்றே. கூரை ஓடுகளுக்கும், அழகான — கலைநயமிக்க ஓடுகளுக்கும், தள அமைப்புக்குத் தேவையான 'ஸ்ட்ரக்சரல்' களிமண் பொருட்கள் தயாரிப்புக்கும் இன்று புகழ்பெற்று விளங்கும் நிறுவனம்; பொன் விழாக் கொண்டாடவிருக்கும் ஸ்ரீகிருஷ்ணா டைல்ஸ் அண்ட் பாட்டரீஸ். இதன் நிர்வாக இயக்குனர் திரு. ஏ. ஆர். ராஜகோபாலன் அவர்களின் அறுபதாம் ஆண்டு விழாவைச் சமீபத்தில் ராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடினார்கள். (திரு. ராஜகோபாலன் சர். டி. முத்துசாமி அய்யர் அவர்களின் பேரன்.)

பாரம்பரியப் பெருமை மிக்க திரு. ராஜகோபாலன் 1943-ல் தகப்பனாரின் தொழிலில் அடியெடுத்து வைத்தார். தமது நாற்பதாண்டுப் பணியில் பல பதவிகள் வகித்திருக்கிறார். அகில இந்திய ஓடுகள் தயாரிப்பாளர் சங்கக் கூட்டமைப்பின் உறுப்பினராக இருந்து, இந்தத் தொழிலுக்குத் தேவையான நிலக்கரி மற்றும் கச்சாப் பொருட்களை எல்லாத் தயாரிப்பாளரும் பெறத் தக்க வகையில், சமவிகித விநி

✖ விட்டல்



✖ ராஜகோபாலன்





✖ சுவாமி ரங்கநாதானந்தா

யோகம் செய்து வெற்றி கண்டவர். இந்திய தர நிர்ணயக் கழகத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராக இருந்து, கட்டிடத் தொழிலில் புதிய வடிவங்களையும், ஏழை எளிய மக்கள் வீடு கட்டும் செலவைக் குறைப்பதில் சிக்கனமான சில உத்திகளையும் கண்டறிந்தவர். நிலக்கரியால் செயல்படும் தானியங்கிச் சூளையை வடிவமைத்து நிறுவியதில் இந்தியாவிலேயே முதன்மையானவர். இதற்கு இவரது சகோதரரும் ஒத்துழைத்தார்.

சென்னை சமஸ்கிருதக் கல்லூரியிலுள்ள குப்புசாமி சாஸ்திரி ஆராய்ச்சிக் கழகத்தின் நிர்வாக உறுப்பினராக இருந்து தொண்டாற்றி வருபவர். காஞ்சிப் பெரியவரின் அன்புக்குப் பாத்திரரான திரு. ராஜகோபாலன், பல சமூக, தெய்வீகப் பணிகளில் ஆர்வத்துடன் பங்கு கொண்டு வருகிறார்.

ரசமான குட்டிக்கதை!

● வெள்ளி விழாக் கொண்டாட்டங்களைக் கடந்த வருஷம் தொடங்கி, இந்த 83 முடிய ஓராண்டுக்கு நடத்திய சென்னை பாரதீய வித்யாபவன், நவம்பர் 2ம் தேதி, பாரதக் குடியரசின் துணைத் தலைவர் ஹிதயதுல்லா தலைமையில் நிறைவு விழா ஏற்பாடு செய்திருந்தது, புத்தகக் கண்காட்சியுடன்.

ராமகிருஷ்ண மடத்துத் துறவி சுவாமி ரங்கநாதானந்தா ஒரு குட்டிக் கதை சொன்னார். ஓர் இந்தியக் கிராமத்தில் விவசாயி ஒருவரிடம் போய் ஓர் அரசியல்வாதி கூறினாராம்: ''பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை விட்டுப் போய் விட்டார்கள். தெரியாதா உனக்கு?'' ''அவர்கள் எப்போது வந்தார்கள்?'' என்று அப்பாவித்தனமாகக் கேட்டாராம் விவசாயி!

ஒரு செய்தி: உலகெங்கும் பரவியிருக்கும் பாரதீய வித்யாபவனுக்கு மாஸ்கோவிலும் கிளை நிறுவ வேண்டும் என்று வேண்டுகோள் வந்திருக்கிறதாம், ரஷ்யர்களிடமிருந்து.

-சாருகேசி

ஈட்டிக்காரரை விரட்டிய வங்கி

● மாதம் முதல் தேதி பிறந்தால் துறைமுகக் காரியாலய வாசலில் ஈட்டிக்காரர்கள் அந்தக் காலத்தில் கண் கொத்திப் பாம்பாகத் தாங்கள் கடன் கொடுத்தவர்களிடம் சம்பளத்தைப் பறித்துக் கொள்வதற்குக் காத்திருப்பார்கள். ஆனால் கடன் பெற்றவர்கள் 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்காமல்' வேறு வாசல்களைத் தஞ்சம் புகுந்து வெளியேறுவதுண்டு. சமயத்தில் எதிர்பாராமல் ஈட்டிக்காரர்களின் வலையில் சிக்குவதும் உண்டு.

சென்னைத் துறைமுகப் பணியாளர்களுக்காகக் கூட்டுறவு முறையில் தொடங்கப்பட்டதுதான் சென்னை துறைமுக பொறுப்புக் கழக கூட்டுறவு நாணய சங்கம். குறைந்த அளவு வட்டியில் துறைமுகப் பணியாளர்கள் நிதி உதவி பெற்றதினால் ஈட்டிக்காரர்களின் தொந்தரவிலிருந்து விடுதலை பெற முடிந்தது. 1927-28ம் ஆண்டு 613 அங்கத்தினர்களுடன் 14120 ரூபாய் முதலுடன் தொடங்கப்பட்ட இந்த வங்கி இன்று பல்கிப் பெருகி வளர்ந்து 2½ கோடி மூலதனத்துடன் 6500 அங்கத்தினர்களுடன் இயங்கி வருகிறது.

இந்த வங்கியின் தலைவர் துறைமுகக் காரியாலயத்தில் டிபுடி கண்ட்ரோலர் ஆப் ஸ்டோர்ஸ் பதவிவகிக்கும் திரு வி.ஜி.குப்தா. கணக்கு அதிகாரியாக இருந்து கூட்டுறவுத் துறையில் ஆர்வத்தோடு பணி புரிய வந்துள்ள திரு சேய் காரியதரிசியாக இருக்கிறார்.

கடன் வாங்க வரும் பணியாளர்களைப் பற்றிய ஒரு ரஸமான துணுக்கைச் சொன்னார் காரியதரிசி சேய்.

ஒருவர் காது குத்துதலுக்காகக் கடன் பெற வந்தார். அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவருக்கு ஒரே மகள். இரண்டாந் தடவையும் காது குத்துதலுக்குக் கடன் கேட்டபோது திகைப்பு ஏற்பட்டது.


''உங்களுக்கு ஒரே மகள். முன்பு ஒரு தடவை காது குத்தலுக்குக் கடன் வாங்கி விட்டீர்களே?'' என்றார் அதிகாரி.

''அப்பொழுது என் மகளுக்கு வலது காது குத்தினேன். இப்பொழுது இடது காது குத்தப் போகிறேன்!'' என்றார் கடன் கேட்டவர். எப்படி மறுக்க முடியும்?

சென்னை துறைமுக பொறுப்புக் கழக கூட்டுறவு நாணயச் சங்கத்தில் 'நகைக்கடன்' குறைந்த வட்டியில் ஒரு நாளைக்கு முப்பது அங்கத்தினர்களுக்கு மேல் லட்ச ரூபாய்க்குப் பட்டுவாடா செய்கிறார்கள். துறைமுகப் பணியாளர்கள் சேமிப்பைத் தூண்டும் வகையில் பல அரிய திட்டங்களை வைத்திருக்கிறார்கள்.

-பி.எஸ்.எம்.

✖ சேய்



✖ குப்தா



வெட்டிப் போட்டால் என்ன ?

○ எஸ். சம்பத்குமார், சென்னை-5

? மருத்துவக் கல்லூரி இட ஒதுக்கீடு விஷயத்தில் முறைகேடாமே?

! அட போமைய்யா, அது ஒன்றில் மட்டும் தானு முறைகேடு!

○ என். ஸ்ரீதர், திருச்சி

? சோ ஜனதாவில் சேர்ந்து என்ன சாதிக்கப் போகிறார்?

! அவர் எதைச் சாதிக்கப் போகிறுரோ காத்திருந்துதான்பார்க்கவேண்டும். ஆனல் அவரைச் சேரச் செய்வதில் ஜனதா ஏற்கெனவே சாதனை புரிந்து விட்டது!

○ ச.சி.நா. ராஜன், சென்னை-88 ✱

? சத்துணவு பெறும் லட்சக் கணக்கான குழந்தைகளில் பலர் வயதுவந்தவுடன் சாராயக் கடைகளைத் தேடி வருவார்கள்; இதனல் சத்துணவின் பலனைச் சாராயம் சாப்பிட்டுவிடும் போல் இருக்கிறதே?

! 'சத்தான உணவு பதினைந்து வயதுவரை உண்பதால் சமுதாயத்தில் குண்டர்கள் பலர் உருவாகி விடுவார்கள் என்பதை அறிந்து அவர்களால் மக்களுக்குத் துயரம் நேர்வதைத் தடுக்கத்தான் அண்ணு வழி செயல்படும் இந்த அரசு பெருங் கருணையோடு சாராயக் கடைகளைத் திறந்திருக்கிறது' என்று ஒரு விளக்கம் அடுத்த காந்தி ஜெயந்தியின்போது வரலாம்.

○ லைன் எம். நாமஸ், உத்தரமேரூர்

? இந்தியனு இரு இந்தியப் பொருளை வாங்கு என்ற சுலோகம் யார் கண்டுபிடித்தது?

! சந்தேகமே வேண்டாம், வருஷத்துக்கு ஐந்து முறை மக்கள் வரிப் பணத்தில் அயல் நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து ஸ்விஸ் பாங்கில் உள்ள கறுப்புப் பணத்தைக் கொண்டு கலர் டீவி, ஸ்டீரியோ, வீடியோ எல்லாம் வாங்கிக் கொண்டு திரும்பி, கஸ்டம்ஸ் அதிகாரிகள் கண்ணில் மண் தூவி டிப்ளமாடிக் பாஸ்போர்ட் உதவியோடு வரி செலுத்தாமல் வீட்டுக்கு எடுத்துப் போகும் சத்திய சந்தர்கள் உருவாக்கியதுதான்!

○ க.அன்பழகன், சேத்தூர்

? முறியடிக்க முடியாத சாதனை எது?

! கற்பழிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரண உதவியாக ரூ. 5000 வழங்கப்படும் என்ற அரசின் அறிக்கை. நஷ்ட ஈடு தரப் போவது பலவந்தப்படுத்தியவன் அல்ல. மக்களின் வரிப் பணத்தைத்தான் அரசு தரும். நஷ்ட ஈடு பெற்றதும் இவள் அவமானம் துடைக்கப்பட்டு மறுபடி கன்னியாகி விடுவாள்! அரசாங்க டாக்டரின் சான்றிதழுடன் கலெக்டரிடம் மனுச் செய்து கொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மட்டும்தான் இந்தச் சலுகை! முற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண் கற்பழிக்கப்பட்டால் அவளுக்கு அவமான உணர்வே இராது என்பது அரசின் முடிவு! மெய்யாலுமே நமது ஆட்சியாளர் சாதனை மன்னர்கள் தான்.

○ திருமதி தேவநாதன், மதுரை

? சீர்திருத்தம் என்ற போர்வையில் தமிழ் எழுத்துக்களைச் சின்னு பின்னமாக்குவது





சோ

போதாதென்று மாண்பு மிகு அரங்க நாயகம் அந்த எழுத்துக்களில்தான் தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவர வேண்டும். இல்லாவிட்டால் அரசு விளம்பரங்கள் கிடையாது என்று பேசியிருப்பது பற்றி...?

! பத்திரிகைகளுக்குவிளம்பரம்கிடைக்கட்டும் கிடைக்காமல்போகட்டும். இப்போதைக்கு அரங்கநாயகத்துக்கு விளம்பரம் கிடைத்து விட்டதே!

○ ஜெயராமன், நெய்வேலி

? தோடி ராகம் படத்தில் 'கோட்டாம்பட்டி'' ரோட்டிலே குட்டி போற ஷோக்கிலே... என்ற பாட்டை எழுதிய, பாடியவர்களை ஏன் வெட்டிப் போடக் கூடாது?

! உமக்கென்னய்யா அவ்வளவு கோபம் நாட்டுப் பாடல்கள் மீது? இது போன்றநாடோடிப் பாடல்கள் தமிழ் நாட்டில் ஆயிரக் கணக்கில் உள்ளனவே! வெட்டிப் போடும் வேலையைச் சென்னாருக்கே விட்டு விட்டுக் கத்தியை உறையில் போடும். பிழைத்துப் போகட்டும் குன்னக்குடி.

○ இரா. சண்முகம், தூத்துக்குடி

? கலைஞருக்குப் பிறகு தி. மு. க.வும் எம்.ஜி. ஆருக்குப் பிறகு அ. தி. மு. க.வும் எப்படி இருக்கும்?

! இரண்டாக இருக்காது.

○ பி. கே. தேவதாஸ், தஞ்சை
? நீதிபதிகளே சில சமயம் முரண்பாடான தீர்ப்புக்களை வழங்குவது ஏன்?
! இது மிகவும் ஆரோக்கியமான ஏற்பாடு. நாளுக்கு நாள் புதிய சட்டங்களை அரசு நிறைவேற்றுகிறது. இவற்றில் பல அரசியல் சாசனத்துக்கு முரணானவையாகவும் மக்கள் உரிமைகளைப் பறிப்பவையாகவும் அமைகின்றன. சட்டத்தை அல்லது சாசனத்தை வியாக்கியானம் செய்யும் போது கருத்து மாறுபாடுகள் ஏற்படுவது இயல்பு. எனவேதான் பெஞ்சு தீர்ப்பு கோரப்படுகிறது. சில சமயம் பெரும்பான்மை நீதிபதிகள் அரசு சார்பாகத் தீர்ப்பளித்தாலும் சிறுபான்மைத் தீர்ப்பையும் அரசு ஆழ்ந்து கவனித்துப் புதிய சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்து நியாயம் வழங்க வேண்டும். ஜனநாயகத்தில், சட்டசபை, நாடாளுமன்றம், நீதிமன்றம் ஆகியவற்றில் மெஜாரிட்டி பலம் என்பதே ஒரு வகைக் கொடுங்கோன்மையாக மாறிவிடக் கூடாது.

○ ஆ. சந்திரசேகரன், லால்குடி
? தமிழக இ. காங்கிரஸ் தனக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் எதிர்க் கட்சி அந்தஸ்தைக் கடமையுணர்வுடன் சரிவரப் பயன்படுத்துமா?


○ ஜெயசீலன்


○ அரங்கநாயகம்

! மதுரையில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் (இ) கமிட்டி பேரவைக் கூட்டத்தில் நடந்த அடிதடி சண்டை, கலாட்டாவைப் பார்க்கும்போது பொறுப்புணர்வுடன் நடந்து கொள்கிற பிரதான எதிர்க் கட்சியாகத் தோன்றவில்லை.

○ பிரேமா, நாகர்கோவில்
? எங்கள் அன்புக்குரிய டாக்டர் ஜெயசீலன் அகில இந்திய மருத்துவ சங்கத் தலைவராக இவ்வாண்டு தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார் தெரியுமா?
! இன்னும் கொஞ்சம் விவரமும் தெரியும். அவர் தமிழகத்தின் மதிப்புக்குரிய டாக்டர் மத்தியாஸின் புதல்வர். இந்த சங்கத் தலைவர் பதவிக்குப் போட்டி இருந்தும் அதிக வாக்குகள் பெற்று வெற்றி அடைந்திருக்கிறார். இச்சங்கம் தோன்றிய 60 ஆண்டு காலத்தில் வந்த தலைவர்களுள் ஜெயசீலன்தான் வயதில் இளையவர். (44) முப்பதாண்டுகளுக்குப் பிறகு இப்போது தான் ஒரு தமிழர் இந்த அனைத்திந்திய சங்கத்தின் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

○ நந்தபாலா, பண்ருட்டி
? நாட்டின் எல்லாப் பிரச்னைகளுக்கும் அந்நியர் தலையீட்டையே காரணமாகக் கூறிக்கொண்டிருக்கிறோமே, அந்நியர் தலையீட்டைத் தவிர்க்க முடியாதது நம் கையாலாகாத்தனம்தானே?
! சேச்சே! அதெல்லாம் ஒன்றுமில்லை: அந்நியர் தலையீட்டைத் தவிர்க்க முடியாததற்குக் காரணமும் அந்நியர் தலையீடு தான். நம்புங்கள்.

○ எஸ். மோகன், மே. மாம்பலம்
? ஒரு பெண்ணுடன் சென்றால் எல்லாரும் திரும்பித்திரும்பிப் பார்க்கிறார்களே ஏன்?
! சகோதரி, தாய், மனைவியுடன் சென்றால் திரும்பிப் பார்க்கமாட்டார்கள். வேறு சமாச்சாரம் என்றால் திரும்பிப் பார்க்குமாறு உங்கள் நடையே காட்டிக் கொடுத்து விடுகிறதே. அதற்கென்ன செய்ய.

○ அமிர்தம், தாம்பரம்.
? மழை சக்கைப் போடு போடுகிறதே. திருப்தி தானா?
! சென்னைவாசிக்கு மழை பெய்தாலும் சிரமம்; பெய்யாவிட்டாலும் கஷ்டம். இரண்டு நாள் மழைஅடித்தால் போதும். சாலைகளெல்லாம் வெள்ளக்காடு. வடிந்தாலோ குழிகள் மயம். திறந்து கிடக்கும் சாலை மின்விளக்கில் ஷாக் வாங்கி மாண்டுபோகும் மானிடர். ஆங்காங்கே 'ஷார்ட்' ஆகி மின் சப்ளை தடை. டெலிஃபோன் விஷயமோ கேட்கவே வேண்டாம் தவறிப் போய்க் கேட்டால்... கேபிள் ஃபால்ட்!

○ ஆண்டாள்பிரியதர்சினி, சென்னை-7.
? ஒரு இந்தியக் கனவு தவறுதானே? ஓர் இந்தியக்கனவு தானே சரி?
! திரைஉலக இலக்கணப்படி எடுக்கப்படாத திரைப்படத்துக்குத் தலைப்பும் இலக்கண விதிகளுக்கு மாறுபட்டிருந்தால் தப்பில்லை என்று கோமல் கருதியிருக்கலாம்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
ச. சி. நா. ராஜன்,
சென்னை-88
(முழு விலாசம் தேவை)



செய்தி வெடிகள்

அம்பிகாவின் ஆசை தீர்ந்தது



- 'இளைஞர்களால்தான் முடியும்' என்ற தலைப்பு 'கலைஞர்களால்தான்முடியும்' என்று வெளியாகி இருப்பதைத் திருத்திக்கொள்ளவும். —ஒரு பிழை திருத்தம்

★ ஏன்? கலைஞர்கள் இளைஞர்களாக இருக்க முடியாதா என்ன?

- கேரள அரசு 'ஸைலண்ட் வாலி'யில் அமைக்கவிருந்த' நீர்மின் திட்டத்தைக் கை விட்டது!''

★ பலர் எதிர்த்த அந்தத் திட்டத்தை இப்படி 'ஓசைப்படாமல்' கைவிட்ட கேரள அரசைப் பாராட்டுகிறோம்.

- மத்திய அரசின் கிளை ஆபீஸ் அல்ல மாநில அரசு. —என்.டி.ஆர்.

★ மாபெரும் பாரத விருட்சத்தின் கிளைகளுள் ஒன்று ஆந்திரா என்பதையாவது ஒப்புக்கொள்கிறாரா?

- காவாஸ்கர் டில்லி டெஸ்டில் ஸோபர்ஸின் 8032 ஓட்ட சாதனையை எட்டிவிட்டார். —கிரிக்கெட் செய்தி

★ 'ஸோபர்'ஸின் சாதனையை எட்டிய பிறகும், 'ஸோபர்' ஆக இருக்கும் காவாஸ்கரைப் பாராட்டுகிறோம்.

- பல்வேறு இடங்களில் கொள்ளை அடித்துக் கோவில் கட்டியவர்கள் கண்டிக்கப் பட்டனர். —சென்னைச் செய்தி

★ கொள்ளை அடித்துச் சொந்த வீடு கட்டியவர்கள் கண்டிக்கப்படுவது கூட இல்லையே!

- 'ஆசை தீர்ந்தது' - நடிகை அம்பிகா கட்டுரை. -ஒரு விளம்பரம்

★ என்ன ஆசை? பத்திரிகையில் தன் நாவல் வெளிவர வேண்டும் என்ற ஆசையா?

- ஐந்து ஸ்டார் ஓட்டல் போன்ற தனியார் மருத்துவ மனைகளுக்கு அதிக வரி விதிக்க வேண்டும். —அமைச்சர் குழந்தைவேலு

★ தங்கள் வசம் உள்ள மருத்துவ மனைகளை, மூன்று ஸ்டார் ஓட்டல்களைப் போலவாது அரசு நடத்தட்டுமே! யார் வேண்டாம் என்றது?

- பாண்டிச்சேரியில் கரும்பு விவசாயிகளுக்கு நடவு மான்யத் தொகை வழங்கப்படும். —ஒரு செய்தி

★ இப்படிக்கரும்பு நட்டு ஏராளமாக விளைந்து விட்டால் கரும்புதின்னக் கூலியும்கொடுக்க வேண்டியிருக்கும்!

- 'விடுதலைப் புலிகள்' இலங்கையில் போட்டி வானொலி நிலையம் அமைத்துள்ளார்கள். —ஒரு செய்தி

★ 'அந்த நிலையமும் சினிமா சங்கீதம் ஒலி பரப்புமா?' என்று கேட்கிறார் ஒரு ரேடியோ சிலோன் பிரியர்!

-மகரம்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani | Editor: K. Rajendran


PHILIPS
டிரான்ஸிஸ்டர் துறையில் நம்பகமான பெயர்
கொண்ட பிலிப்ஸ் இப்போது வழங்குகிறது
அசல் டிரான்ஸிஸ்டர் பாட்டரி.
பிலிப்ஸ் எக்ஸ்ட்ரா
பிலிப்ஸ்
எக்ஸ்ட்ராவின்
கூடுதல் அம்சங்கள்:
சக்தி. பாதுகாப்பு.
கசிவுத் தடுப்பு.
நீண்ட ஆயுள்.
பிலிப்ஸ்
எக்ஸ்ட்ரா.
டிரான்ஸிஸ்டர்
பற்றி
நன்கறிந்தோர்
வழங்குவது.
PHILIPS
TYPE R20 E
PHILIPS
TYPE R6E
பிலிப்ஸ்
பிலிப்ஸ்—ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka



OBM/1656